Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

Muslim Kural    صوت المسلم    முஸ்லிம் குரல்

☆ 29 ஆகஸ்ட் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 01 றஜப் - 1424 ☆ சுவடு - 17 ☆ தருகை - 15 ரூபா

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் புதிய செயலாளரின் நேர்காணல்.... 08

# மூதூர் - சம்மாந்துறை - சாய்ந்தமருது நமது மக்களுக்கு என்ன நடக்கிறது?

முஸ்லிம் மக்கள் மீதான இனப் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், அபகரிப்புகள், தாக்குதல்கள் தொடர்கின்றன. வீதிகளிலும், வயல்களிலும் நமது மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். வீட்டிலிருந்து கிளம்பியவர்கள் வீடுவந்து சேர்வதற்கான உத்தரவாதமில்லை. நமது மக்களின் உயிருக்கும் பொருளாதாரத்திற்கும் எவ்விதமான பாதுகாப்புமில்லை. அரசியல்வாதிகள் ஆளுக்கு ஆள் போட்டி போட்டுக்கொண்டு பத்திரிகை அறிக்கை யுத்தத்தில் சல்லாபமாடுகின்றனர். மக்களோ திசை தெரியாக் காட்டில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஆண்டவன் துணையுடன் காலம் ஓட்டுகின்றனர். இன்றைய முஸ்லிம்களின் நிலை இதுதான்.

தீய சக்திகள், சமாதானத்தைக் குழப்புகின்றவர்களின் சதிவேலை என ஊடகங்கள் கதையளக்கின்றன. ஆஹா அற்புதமான கண்டுபிடிப்பென இதற்கு சமூகப் புல்லுருவிகள் சிலர் காவடி எடுக்கின்றனர். மூதூரில் நமது முஸ்லிம் இளைஞர்கள் இருவரை பகிரங்கமாக மனித வேட்டையாடியது யார்? சம்மாந்துறையில் நமது அப்பாவி விவசாயிகளை சுட்டுக்கொன்றது யார்?

சாய்ந்தமருதிலிருந்து புறப்பட்டுச்சென்ற இருவர் இன்னமும் வீடு திரும்பவில்லை. நமது மக்கள் புலிகளிடம் சென்று கேட்காமல் யாரிடம் கேட்பார்கள்? புலிகள் என்ன அப்படி மகாத்மாக்களின் வாரிசுகளா இல்லையே. நேற்று சிந்திய இரத்தம் காய்வதற்கு முன் அடுத்த குருதியை எமது சமூகத்தில் ஒட்டியவர்களல்லவா புலிகள். இப்படுகொலைகளில் புலிகளை சம்பந்தப்படுத்திப் பார்ப்பது, பாதிக்கப்படும் அடக்கப்படும் மக்கள் என்றவகையில் முஸ்லிம்களுக்குள்ள நியாயமான உரித்தேயாகும்.

முஸ்லிம்கள் மீது சதா அடக்குமுறையை கட்டவிழ்த்துக் கொண்டே முஸ்லிம்களை நாங்கள் ஒன்றுமே செய்யவில்லையென புலிகள் சொல்வதை முஸ்லிம் மக்களால் ஒரு போதுமே ஏற்க முடியாது! "சாய்ந்தமருது சம்பவம் ஒரு நாடகம் என" சொல்லும் தமிழ் ஊடகங்களும், பொலிஸாரும் அதை உறுதியாக நிரூபிப்பதற்கு முன்வரவேண்டும்.

அதற்காக புலிகள் முஸ்லிம்கள் மீது படுகொலைகளையோ, ஆட்கடத்தல்களையோ, தாக்குதல்களையோ, அபகரிப்புகளையோ செய்வதில்லை என்ற முடிந்த முடிவுக்கு நமது மக்கள் ஒரு போதுமே வந்துவிடமாட்டார்கள். ஏனெனில் நமது மக்களுக்கு உண்மைகள் தெரியும். கைப்புண்ணை பார்ப்பதற்கு இங்கு கண்ணாடி தேவையில்லை.

## அஷ்ரஃப் காங்கிரசில் உள்ளவர்களுக்கு முஸ்லிம் காங்கிரசில் முக்கிய பதவிகள் வழங்கினால் இணையத் தயாராக உள்ளனர்!

(மன்னார் செய்தியாளர்) **-நூர்தீன் மசூர் திடீர்த் தகவல்**

முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் மீது அதிருப்தி கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக் கெதிராக 37 அரசியல் குற்றச் சாட்டுக்களை முன்வைத்து முஸ்லிம் காங்கிரசிலிருந்து பிரிந்து சென்ற நூர்தீன் மசூர் மீளவும் அண்மையில் முஸ்லிம் காங்கிரசில் இணைந்து கொண்டது யாவரும் அறிந்ததே!



இந்த இணைவின் மூலம் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமையை வலியுறுத்திப் பெறுவதில் நூர்தீன் மசூர் அதிக அக்கறையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக தான் அடுத்த முறையும் வன்னி மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக வந்து விட வேண்டும் என்ற அரசியல் ஆசையின் அடிப்படையிலேயே முஸ்லிம் காங்கிரசில் அவர் இணைந்து கொண்டார். ரிசாட் பதியுத்தீனின் அரசியல் செல்வாக்கும் தனக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்சியின் தேவையுமே நூர்தீன் மசூரை முஸ்லிம் காங்கிரசில் இப்போது கொண்டு சேர்த்திருக்கிறது. அந்த வகையில் வன்னி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ரிசாட் பதியுதீனுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அதிக கடமைப்பட்டுள்ளது.

இந்த இணைவானது அஷ்ரஃப் காங்கிரஸ் தரப்புக்கு பலத்த அரசியல் அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது. நூர்தீன் மசூர் கட்சியில் மீள இணைந்த இரு வாரத்தினுள் மீளவும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். அதுதான் அஷ்ரஃப் காங்கிரசில் உள்ள பலரும் கடந்த காலத்தில் பிரிந்து சென்றவர்களும் மீளவும் முஸ்லிம் காங்கிரசில் இணையத் தயார் என்பதே அவரின் அதிரடி அறிவிப்பாகும்.

யார் யார் அப்படி இணைவதற்கு தயாராக உள்ளனர் என்பதை நூர்தீன் மசூர் பெயர் கூறி சுட்டிக் காட்ட மறுத்துவிட்டார். கட்சியில் முக்கிய பதவி [illegible] அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிய உத்தரவாதம் வழங்கப்படுவதுமே அவர்கள் மீள இணைந்து கொள்வதற்கான உத்தரவாதமாகும் என்கிறார்.

இக்கருத்திலிருந்து தனக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இவ்விரு உத்தரவாதங்களையும் வழங்கி உள்ளதை அவர் மறைமுகமாக ஏற்றுக் கொள்கிறார்.

அப்படியானால்; கடந்த காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை முஸ்லிம்களை அரசியல் ரீதியாக காட்டிக் கொடுத்தது என்ற நூர்தீன் மசூரின் குற்றச்சாட்டுக்களுக்கு என்ன ஆனது என்பது திருவாளர் பொது ஜனங்களின் கேள்வியாகும். முஸ்லிம் காங்கிரசில் நூர்தீன் மசூர் இணைந்தது பற்றி எமது செய்தியாளர் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்குழு உறுப்பினர் ஒருவரிடம் வினவியபோது "நூர்தீன் மசூர் ஏன் முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரிந்து போனார், எதற்காக முஸ்லிம் காங்கிரசில் மீளவும் வந்து இணைந்தார் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என கிண்டலாகப் பதிலளித்தார்.

நூர்தீன் மசூர் பத்திரிகைகளுக்கு விடும் அண்மைய அறிக்கைகளில் முஸ்லிம் சமூகத்தின் நன்மையைக் கருதியே தான் கட்சியில் மீள இணைந்ததாகக் கூறி வருகிறார். தான் கட்சியில் மீள இணைந்ததன் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு என்ன நன்மைகள் கிடைக்கப்பெற்றன என்பதை நூர்தீன் மசூர் தெரிவிக்க வேண்டும்!

## கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் இனவாதம் தலைவிரித்தாடுகிறதா? பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக மனித உரிமை வழக்குத் தாக்கல்.

கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் தனது மகளை சேர்ப்பதற்கு அனைத்துத் தகுதிகள் இருந்தும்; பாடசாலை நிர்வாகம் முஸ்லிம் என்ற காரணத்திற்காக தனது மகளை சேர்க்கவில்லை என பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக கண்டியைச் சேர்ந்த மருத்துவ அதிகாரி எம். இஸ்னி முனீர் அடிப்படை மனித உரிமை வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

விசாகா வித்தியாலயத்தை அண்டிய 1 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசித்துவரும் டொக்டர் இஸ்னி முனீர், தனது 5 வயது மகளை 1ஆம் ஆண்டுப் பிரிவில் சேர்ப்பதற்கு விண்ணப்பித்தபோது முஸ்லிம் என்ற காரணத்தினால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து நீதி கேட்டு நிற்கின்றார் இவர். உயர் நீதிமன்றம் இவ்வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி விவாதத்திற்கு எடுக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

## ஈராக்கில் அடுத்த இலக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமா?



ஐக்கிய நாட்டுப் பணியகம் ஈராக்கில் குண்டுத்தாக் குதலால் அழிக்கப்பட்டதை அடுத்து, ஈராக்கில் செயற்பட்டு வந்த வெளிநாட்டு நிறுவனங்கள் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறத் தொடங்கிவிட்டன. இவ்வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அமெரிக்கக் கூட்டுப் படைகளினால் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஈராக்கில் அடுத்த இலக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாக இருக்கலாம் என்ற உளவுத் தகவல்களின் அடிப்படையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் முற்றாக கைவிடப்பட்டுள்ளன.

ஈராக் முழுவதும் காணப்படும் பதற்ற நிலை காரணமாக வெளிநாட்டுப் பணியாளர்கள் சகல வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும் 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளனர். ஜோர்தானிய தூதுவராலயம் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானதை அடுத்து, இப்போது ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் குண்டுத் தாக்குதலால் தரைமட்டமாகி உள்ளது. ஒவ்வொரு நாளும் ஈராக்கின் ஏதாவதொரு பகுதியில் தாக்குதல் நடைபெற்ற வண்ணமே உள்ளது.

ஈராக்கில் தொடர்ந்தும் மறைந்து வாழ்ந்து வருவதாகக் கூறப்படும் ஈராக்கிய முன்னாள் அதிபர் சதாம் ஹூஸைன் தனது ஆதரவுப் படையினரை தலைமை தாங்கி வழிநடாத்தி, இத்தாக்குதல்களில் ஈடுபட்டுவருவதாக அமெரிக்காவே இப்போது ஏற்றுக் கொண்டுள்ளது. சதாமை உடனடியாகக் கைது செய்வது அல்லது கொலை செய்து விடுவதே அமெரிக்க புஷ் நிர்வாகத்தின் அவசரமான முடிவாக உள்ளது. சதாமை அழிப்பதன் மூலம் ஈராக் மக்களை அமெரிக்காவின் ஆக்கிரமிப்பின் கீழ் பணியவைத்துவிடலாம் என்பது அமெரிக்காவின் பகல்கனவாகும் என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## மனிதப்படுகொலை, ஆட்கடத்தல் ஆகஸ்ட் சம்பவங்கள்.

**03.08.2003 இல்**
தோப்பூரைச் சேர்ந்த லுஹூரித் தம்பி ரிழ்வான் (23) இளம் குடும்பஸ்தர் அதிகாலை 4 மணிக்கு படுகொலை செய்யப்பட்டார்.

**13.08.2003 இல்**
திருமலை செல்வ நாயக புரத்தில் வைத்து மூதூரைச் சேர்ந்த அப்துல் குத்தூஸ் பரீட் (35), முஹம்மட் நியாஸ் (27) ஆகியோர் மனிதப்படுகொலை செய்யப்பட்டனர்.





**16.08.2003 இல்**
மூதூரைச் சேர்ந்த அச்சுமுக ம்மது றசீட் (46) ரசீட் பைரூஸ் (14) ஆகிய தந்தையும் மகனும் நாவலடிப்பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்றபோது புலிகளால் கடத்தப்பட்டு மோசமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு நிர்ப்பந் தத்தின் பேரில் அடுத்த தினம் விடுவிக்கப்பட்டனர்.

**17.08.2003 இல்**
சம்மாந்துறை சேனைவட்டைப் பகுதியில் இரவு 8.30 மணிக்கு நான்கு பிள்ளைகளின் தந்தையான ஏ. இப்றாலெவ்வை (40), இரு பிள்ளைகளின் தந்தையான கே.எல். இஸ்மாயில் (29) ஆகியோர் மனிதப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த மாதத்தில் பல உழவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள், மீன்பிடி உபகரணங்கள், வள்ளங்கள், அரிசி மூட்டை ஏற்றப்பட்ட லொறி, பல நூறு கால்நடைகள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

**18.08.2003 இல்**
சாய்ந்தமருதைச் சேர்ந்த ஆதம்பாவா மன்சூர் (28), முஹம்மது இல்யாஸ் (30) ஆகிய இருவர் வாழைச்சேனைக்கு சென்று இன்னும் வீடு திரும்பவில்லை.

## உங்களுக்கு..! விழிப்படைவோம் பலமடைவோம்!

சிதைந்து, சிதிலமாகி இருண்டுபோன தமிழர் வாழ்வில் ஒருமெல்லிய ஒளிக்கீற்று எப்போது தெரிய ஆரம்பிக்கின்றதோ அப்போதே அதை அணைத்து விட முண்டியடிக்கும் இனவாதப் பேய்களும் தம் கோரப்பற்களை காட்டிப் பயமுறுத்தும் கதையாகவே வரலாறு கடந்து கொண்டிருக்கின்றது.

தெற்கில் கொடிபிடித்து கூவியழைத்து சந்திக்குச் சந்தி துவேஷ வார்த்தைகளைக் கக்கி மக்களின் மனதினில் மாசினை அப்பி தமிழர் தரப்பில் எந்தவொரு தீர்வும் கிடைக்கக் கூடாது என்பதில் முனைப்புடன் செயற்படும் ஜே.வி.பி. சிஹல உறுமய போன்ற இனவாதிகளுக்குச் சற்றும் குறைவில்லாமல் கிழக்கிலும் முஸ்லிம் இனவாதிகள் இனத்துவேஷம் மிக்க கருத்துக்களை விஷ விதைகளாக விதைத்துக் கொண்டிருப்பது தமிழர் மனங்களிலெல்லாம் ரணங்களைக் கொடுப்பதாகவே இருக்கின்றது.

வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் தனித்தனியாக பிரிக்கப்பட வேண்டும் என கொள்கைகளைப் பிரகடனம் செய்து கோஷமிடுகின்றார் ஓர் அமைச்சர். இன்னொரு அமைச்சரோ, அரசும் விடுதலைப் புலிகளும் கருத்தொருமித்து இறுதி வடிவத்திற்கு கொண்டு வர சிரமப்படும் இடைக்கால நிர்வாக சபை வரைபை மேலும் சிக்கலாக்கும் விதத்தில் தாமாக ஒரு புதிய வரைபை முன்வைப்பதாக கூறி கேலிக் கூத்தாடுகின்றார். இந்த முட்டுக்கட்டைகள் முஸ்லிம்களிடத்தில் இருந்து கிளம்புவது இதுதான் முதல் தடவையென்றும் இல்லை. இனப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காணப்படக்கூடியதான தோற்றப்பாடுகள் தெரியும் போதெல்லாம் இவர்கள் முந்திரிக் கொட்டையாய் அறிக்கைகள் விடுவதும் அதனையே சாட்டாக வைத்து பேரினவாத அரசுகள் தம்முயற்சிகளை கிடப்பினில் போடுவதும் ஒரு தொடர் நாடகமாகவே அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. முஸ்லிம் இனவாத அரசியல்வாதிகளின் இத்தகைய செயற்பாடுகளில் அரசியல் பின்னணியை ஆழமாகப் பார்த்தால், முஸ்லிம் சமூகத்தின் மீதான உண்மையான பற்றுதலில் இவைகள் இல்லை என்பதையும், சலுகைகளுக்காக விலைபோனதின் மூலம் தம் மக்களிடையே செல்வாக்கினை இழந்து நிற்பவர்கள் மீளவும் தம்மை நிலை நிறுத்திக்கொள்ள தமிழரின் வாழ்வோடு விளையாட முனைகின்றார்கள் என்பதனையும் புரிந்து கொள்ளலாம். தமது இறைமையைக் காக்கவும் இருத்தலைப் பேணவும் இரு தசாப்தங்களுக்கு மேலாகப் போராடி 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளையும், லட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்களையும் இழந்து நிற்கும் தமிழர் தரப்புடன் சரி நிகராய் நின்று பேரம் பேசும் அருகதை தமக்கில்லை என்பதை நியாயமாகச் சிந்திக்கும் சாதாரண முஸ்லிம் குடிமகன் கூட உணர்வான்.

பேரினவாதிகளின் பூதக்கரங்களினால் மட்டுமல்ல முஸ்லிம் இனவாதிகளின் துரோகக் கரங்களினாலும் கூட தமிழர் வாழ்வு சிதைக்கப்பட்டே வந்திருக்கின்றது. அம்பாரை மாவட்டத்தில் வீரமுனைப் படுகொலை, உடும்பன்குளப் படுகொலை, அலிக்கம்பைப் படுகொலை என நீளும் படுகொலைச் சம்பவங்களிலெல்லாம் முஸ்லிம் காடையர்களின் கைவரிசை நிறையவே உண்டு. போரின் காரணமாய் தமிழர்கள் பொருளாதாரத்தில் நலிந்து போயிருக்க [illegible] கொடுத்துக் கொண்டு முஸ்லிம்களுக்கென ஒரு தனிப்பல்கலைக்கழகம், முஸ்லிம் பிரதேசத்தில் ஒரு துறைமுகம் என ஒரு சமூகம் வளர்ச்சிபெறத் தேவையான அனைத்து பௌதீக வளங்களையும் பெற்றுக் கொண்டவர்கள் தமிழரின் அவல நிலைக்காக அனுதாபப்பட்டதுகூட இல்லை. கடந்த காலங்களை மறப்போம் மன்னிப்போம் என்ற நிலையில் எமது ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் காணி உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண கலந்துரையாடல்களில் ஈடுபட்டுவரும் இக்காலத்திலும் முஸ்லிம் இனவாதிகள் இனவாதப்பிரகடனங்களை மேற்கொள்வதும், தமிழருக்கெதிராக முஸ்லிம்களை உசுப்பிவிடுவதும் நன்மை பயப்பதாய் தெரியவில்லை. இது தொடரும் பட்சத்தில் தமிழ் இளைஞர்கள் அனைவரும் தமது கரங்களில் ஆயுதம் ஏந்தி தமது படைப்பலத்தை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை பார்வையாளர்களாய் இருக்கும் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மீண்டுமொரு வீரமுனை, மீண்டுமொரு அலிக்கம்பை, மீண்டுமொரு உடும்பன்குளம் அழியாமல் இருக்க இதுவே எமது பாதுகாப்பு என்பதை அழுத்திக்கூற விரும்புகின்றோம்.

அம்பாறை மாவட்ட தமிழர் விழிப்புணர்வு மன்றம்.

மேற்படி அமைப்பினர் அண்மையில் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தினை வரிக்குவரி எவ்வித மாற்றமுமின்றி நமது மக்களின் பார்வைக்கு மீள் பிரசுரம் செய்கின்றோம்.




1985க்கு பின் இன வன்முறையாலும், இன அழிப்பினாலும் பாதிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம்களின் உயிர், உடமை இழப்புகள் தொடர்பான விபரங்கள் இருப்பின் தயவுசெய்து எமக்கு அனுப்பிவைக்கவும்.

**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! [illegible] ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களிடமிருந்து மனுக்கள்... நடவடிக்கைக்காக...

## மீலாத் விழா என்ற போர்வையில் அரங்கேறும் அசிங்கங்கள்

நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு வருடா வருடம் மீலாத் விழா நிகழ்வுகள் அரங்கேறுவது சர்வசாதாரணமாகி விட்டது.

அந்த வகையில் சென்ற 21.07.2003 சனிக்கிழமையன்று வவுனியா மாவட்ட தெற்கு வலய முஸ்லிம் பாடசாலைகளிடையே மீலாத் விழா நிகழ்ச்சிகள் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மேற்படி வலயத்திற்குறப்பட்ட முஸ்லிம் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளில் "கோலாட்டமும்" ஒன்றாகும். கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே பிரபல்யமான இந்நிகழ்வு முஸ்லிம்களின் பண்பாட்டு கலாசார விழுமியங்களின் தனித்துவத்தைப் பேணும் வகையில் பிரதிபலிப்பதுண்டு. எனினும் முஸ்லிம்களின் சமய பண்பாட்டு கலாசாரங்களை குழிதோண்டி புதைக்கும் வகையில் பெண் மாணவிகளினால் பல ஒய்யாரங்களுடனும் ஒப்பனைகளுடனும் இங்கு அரங்கேற்றப்பட்டமை வேதனை தரக்கூடியதொன்றாகும். பாடசாலை வாழ்க்கையில் பர்தாவினுடைய சூழலில் பழக்கப்பட்ட வயது வந்த இம்மாணவிகளை சில முஸ்லிம் ஆசிரியர்கள் அரங்கேற்றி அகமகிழ்ந்து போனார்கள். இவ்வாறான நிகழ்ச்சிகள் தேவையற்றவை. மார்க்கத்திற்கு முரணானவை என சுமார் 25 க்கும் மேற்பட்ட இஸ்லாமிய ஆசிரியர்கள் கையொப்பமிட்டு மஹஜர் ஒன்றை மீலாத் குழுவிடம் சமர்ப்பித்த போது அவர்கள் புள்ளி பற்றி கதைத்தார்களே தவிர நாளைய சமுதாயத்தின் கண்மணிகளைப் பற்றி எதுவுமே கதைக்காது கையை விரித்துவிட்டனர். இதில் கவலைப்பட வேண்டிய விடயம் என்னவெனில் மீலாத் குழுவில் இருந்தவர்கள் வவுனியா மாவட்ட உலமா சபையின் முக்கிய உறுப்பினர்களும், இஸ்லாமிய பாட ஆசிரியர்களும், ஆலோசகர்களும் இஸ்லாம் பாட உதவிக் கல்விப் பணிப்பாளருமாகும். மார்க்கத்தைப் பாதுகாக்க வேண்டியவர்களே அதற்கு சோடை போவதை என்னவென்று சொல்வது. மீலாத் விழா என்ற அம்சத்தினூடாக அசிங்கங்கள் இன்னும் அரங்கேர வேண்டுமா?

*S.L.றியாஸ் B.A. நேரியகுளம், வவுனியா.*

## சந்தை வசதி வேண்டும்!

தோப்பூர் கிராமம் பல நூற்றுக்கணக்கான வருடம் பழமை வாய்ந்த கிராமமாகும். இங்கு சுமார் 20,000 ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் பிரதான தொழில், விவசாயம், மீன்பிடி, வியாபாரம், ஆகும். பல கிராமங்களை உள்ளடக்கிய தோப்பூர் பிரதேச மக்களின் பெரும் குறையாக இருந்து வருவது "சந்தை வாய்ப்பு" வசதியின்மையாகும். இங்குவாழ்கின்ற மக்கள் தாம் உற்பத்தி செய்கின்ற உணவுப் பொருட்களையும் கடலிலே பிடிக்கின்ற மீன்வகைகளையும் அத்தோடு இறைச்சி போன்ற பல்வேறுபட்ட உணவுப்பண்டங்களையும் சந்தைப்படுத்தவோ, களஞ்சியப்படுத்தவோ போதிய வசதியின்மையாலும் சந்தை வசதி இல்லாமையாலும் தங்களது தொழிலை வீதியோரங்களிலே செய்துவருகின்றார்கள். இதனால் சூழல் மாசடைவதோடு, துர்நாற்றம் ஏற்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாது சில தொழிலாளிகள் தங்களது வியாபாரத்தை சிறந்த முறையில் நிறைவேற்ற முடியாமல் திக்காடிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே தோப்பூர் மக்களின் பிரதான குறைகளுள் ஒன்றான இச்சந்தை வாய்ப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி அவ்வியாபாரிகளின் பொருளாதாரத்தை உயர்த்தி அவர்களுடைய வாழ்வு செம்மையாக மாற வேண்டுமானால் கட்டாயம் தோப்பூர் பிரதேசத்தில் அனைத்து வசதிகளுடன் ஒரு சந்தை ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே இது விடயத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள். கவனம் எடுப்பார்களா? மூதூர் பிரதேச செயலகம், பிரதேச சபை கவனம் எடுக்குமா? உயர் அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா? என்ற அங்கலாய்ப்புடன் தோப்பூர் பிரதேச வியாபாரிகளும் தோப்பூர் பிரதேச மக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஏ.எஸ்.எம். தானீஸ், தோப்பூர்.

## "முஸ்லிம் குரலே" உன் வழிகாட்டல் எம் சமூகத்திற்கு இன்றியமையாதது.

நான் முஸ்லிம் குரலை தொடர் வாசகன் களத்தில் உயிர் நீத்த சுஹதாக்களை மறக்கத்தான் முடியவில்லை. இதழ் 16 இல் 12 பக்கங்களையும் மனக்குமுறலுடன் வாசித்தேன். கொலை வெறியர்களை அல்லாஹ் நிச்சயம் அழித்தேவிடுவான். அனைத்து சம்பவங்களையும் அள்ளித்தந்த ஆசிரியர் குழாமிற்கு நன்றிகள் பல. அறிந்திராத பல தகவல்களை நாடறியச் செய்துவிட்டீர்கள். நெருக்கமான தமிழ் அன்பர் ஒருவருக்குப் பத்திரிகையைக் காண்பித்தேன். வாசித்தார். கண்களில் நீர் மல்கிய காட்சியைக் கண்டேன். மனித நேயங்களும் வாழத்தான் செய்கின்றன. அதமட்டுமா? 06-08-2003 அன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை காலை நிகழ்ச்சியில் அறிவிப்பாளர் அல்-ஹாஜ் ஸனூஸ் எம். பெரோஸ் அவர்களது குரல் ஒலித்துக்கொண்டிருந்தது. காத்த நகர் சகோதரர் ஒருவர். அனுப்பி இருந்த பத்திரிகைச் செய்தியொன்றினை அறிவிப்பாளர் அவர்கள் உணர்ச்சி ததும்ப வாசித்துக் காட்டினார். 2003 ஆகஸ்ட் 01ஆம் திகதி வெளியான முஸ்லிம் குரலில் "காத்தான்குடி சிவந்த இரவும், ஸுஹதாக்களின் நல்லடக்கமும்" என்ற தலையங்கத்தின் உள்ளடக்கமே அது. வரிக்கு வரி செய்தி பிசகவேயில்லை.

என்.எல்.எம்.எஸ். ரஹ்மத்துல்லாஹ் மரிக்கார்
ஓய்வுபெற்ற ஆசிரியர்.
புத்தளம்.

## நமது தனித்துவப் பத்திரிகை "முஸ்லிம் குரலே!"

"முஸ்லிம் குரல்" பத்திரிகைக்கு நல்லதொரு வரவேற்பு நமது மக்களிடம் இருக்கின்றது. பிரசுரமாகும் அத்தனை ஆக்கங்களும் காலத்திற்கேற்றவாறு அமைந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இத்தனை காலமாக முஸ்லிம்களுக்கென்று தனியான ஒரு பத்திரிகை இல்லாத குறையை முஸ்லிம் குரல் நிவர்த்தி செய்துள்ளது போற்றத்தக்கது.

அஜ்வத் சிஹாப்தீன்
ஓட்டமாவடி

## வாழ்க நீ... பல்லாண்டு

நம் தேசத்தின் உள்ளக்
குமுறல்களை வெளிப்படுத்தி...
நம் தேசத்தின்
விடிவிற்காய் ஒரு
ஈமானுள்ள இஸ்லாமிய
இளைஞனைப் போல்
பாடுபடும் எங்கள்
தேசத்தின் மகன்

முஸ்லிம் குரலே...
உலகெங்கும் பரந்து...
வாழும் நம் தேசத்திடம்
நீ... சென்று...
வாழ்க! நீ... பல்லாண்டு

காத்தநகர் இளங்கவி
அப்துல் கையூம்

## ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள்
கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும்
விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்!
உங்கள் கருத்துக்களை
சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

*பிரதம ஆசிரியர்*

# தாயே! நீ செய்த தவம் பொய்த்துப் போனதுவா?



காத்தான்குடியே நான் காதலிக்கும் திருவிடமே!
நீண்ட நாள் என்னுடைய நெஞ்சுக்குள் வாழ்பவளே!
தாயே! நீ செய்த தவம் பொய்த்துப் போனதுவா?
புண்ணியம் செய்யவந்த பூமான்கள் உன்னுடைய
மண்ணிலே பிறந்துதான் மகத்துவங்கள் செய்தார்கள்.

தாயே நீ செய்த தவம் பொய்த்துப் போனதுவா?

உலமாக்கள், உத்தமர்கள், உயர்பண்பு கொண்டவர்கள்
நிலவைப்போல் இந்த நிலத்துக்கு ஒளிதந்தானர்
தந்த ஒளி இங்கே தலை கீழாய் போனதுவா?
என்ன நடந்தது இதுயேன் நிகழ்ந்தது?

இன்றும் எங்கள் இதயம் அழுகிறது.
ஒப்பாரிச் சத்தம் ஓ... இன்னும் ஓயவில்லை!
இன்றும் எங்கள்
இதயம் அழுகிறது.

பள்ளிக் குள்ளேயா பாவிகள் வந்தார்கள்?
அல்லாஹ் இதனை அனுமதித்து கொண்டானா?
என்ன கொடுமை இது
எப்படி நாம் தாங்குவது
பாவிகள் பாதம் பள்ளிக்குள் பட்டதுவா?
பாலகரும் ஏங்கிவிழ பதெறவெடி வைத்தனரா?

புனிதமிகு பள்ளிக்குள் புலிச்சத்தம் கேட்டதுவா?
காத்தான்குடியின் கறைபடிந்த சம்பவத்தை
நீட்டி முழங்குவதற்கு நெஞ்சி பொறுக்குதில்லை!
நெஞ்சி பொறுக்காத நிகழ்ச்சியினை மீட்டவந்தேன்.
கொஞ்சம் பொறுங்கள்! கோபம் இன்னும் தணியவில்லை!

போராட்டம் எங்களுக்கு புதியதொரு விஷயமல்ல
போராடித் தானே
இந்த புவியினை வெற்றிகொண்டோம்!
ஆகையினால் எங்களுக்கு அதுபெரிய காரியமா?
இங்கு நடந்தவைதான் இதயத்தை தொடுகிறது.

ஒப்பாரிச்சத்தம் ஓ... இன்னும் ஓயவில்லை!

தொழுதுவிட்டு வரும்வரையும் துங்காதே மகனே!யென
வாப்பா கூறிவிட்டு வந்துவிட்டார் அதற்குள்ளே
வெறிகொண்ட புலிக்கூட்டம் விளையாடி மகிழ்ந்ததுவா?
கடையை மூடிவிட்டு கடுகதியில் வருவேனென
பள்ளிக்குப்போனவரை பாவிகள் கொண்டதேன்?
படித்த புத்தகத்தை பாதியிலே நிறுத்தி விட்டு
துடிப்போடு போனவரை தொழும்போது அழித்ததேன்?
சீதனக் கொடுமையால் சீரழியும் பரிதாக்கள்

வேதனையை தீர்ப்பதற்கு வெளிக்கிட்ட வீரர்களை
பள்ளிக்குள் வைத்தேன் பாவிகள் கொன்றார்கள்.

அழிஞ்சிப் பொத்தானை, அக்கரைப்பற்று
கிண்ணியா,மூதூர்,கல்முனை, ஏறாவூர்
வாழைச்சேனையென வரலாறு நீண்டது
எத்தனை உயிர்களை இதுவரையில் இழந்துள்ளோம்.
இழந்தவைகள் கொஞ்சமா எப்படி நாம் சொல்லுவது.

இத்தனை கொடுமைகளும் எங்களுக்குச் செய்தவர் யார்?
காட்டிக் கொடுத்தோமா களவேதும் செய்தோமா?
நாட்டை அழிப்பதற்கு நாசகார வேளைகளில்
ஈடுபட்டு நாங்கள் இருளுக்குள் ஒழித்தோமா?

ஒன்றுமே செய்யாது ஊமைகளாய் நாமிருந்தோம்!
பிறந்த எம் மண்ணை பிரியமாய் நாம் காத்தோம்!
ஒற்றுமையாய் வாழ்ந்த ஓ... அந்த வடக்கு மண்ணை
வெளியேறு மாறுசொன்ன வேதனையை என்னவென்பேன்
வேதனைகள் கொஞ்சமல்ல வெளியிட நேரமில்லை!

சத்தியத்தை ஒருபோதும் சாகடிக்க முடியாது
ஷகீதான வீரர்களின் சரித்திரம் இனி வாழும்
மறைந்தாலும் எங்கள் மனங்களுக்குள் அவர் வாழ்வார்
இறந்த வீரர்களின் எலும்புகள் இன்னுமிருக்கும்
மீரா பள்ளி சுவர்களில் தழும்புகள் இனி இருக்கும்

கண்ணீரை நாங்கள் காணிக்கை யாக்கமாட்டோம்!
அல்லாஹ் இடத்தில் அவர்களுக்காய் பிரார்த்திப்போம்!
பிரார்த்தனை ஒன்றுதான் பிரச்சினைக்கு விடிவாகும்!

நாளை இங்கொரு நவயுகம் இனிப்பிறக்கும்
வேளைவரும் வரையும் விடிவுக்காய் காத்திருப்போம்!
இழந்தவற்றை மீண்டும் இழுத்து பறித்தெடுப்போம்
உரிமைக்காய் என்றும் உரத்துக் குரல் கொடுப்போம்

நீண்ட நாள் தவமிருந்து நேசமுடன் நாம் காத்த
பாசமிகு அஷ்ரஃப்பை பறிகொடுத்துவிட்டோம் நாம்
ஆசை நிறை வேறுமுன்னே அமரராய் போய்விட்டார்
அல்லாஹ் அவருக்கு அருள்செய்ய பிரார்த்திப்போம்!

கண்ட கனவுகளை கைப்பற்ற முயற்சிப்போம்!
பாதை திறந்துள்ளது பயணத்தை மேற்கொள்வோம்!
வாருங்கள் தோழர்களே! வையத்தை வென்றெடுப்போம்?

கவிச்சுடர் அன்பு முகைதீன்

(2003.08.03ம் திகதி காத்தான்குடியில் நடைபெற்ற சுஹதாக்கள் பெருவிழாவில் படிக்கப்பட்ட கவிதை இது)

# சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டணிக்கான பேச்சுவார்த்தையும் காலியிலிருந்து கொழும்பை நோக்கிய ஜே.வி.பியின் ஊர்வலமும்



சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் இன்னமும் முடிவுக்கு வந்தபாடில்லை. இவர்களது கூட்டணி எப்போது அமையும் என உறுதியாகக்கூற முடியாதுள்ளது என கொழும்பு அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். பிரதானமாகக் கூட்டணியின் பதவிகள் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டிற்கு இரு கட்சிகளும் வர முடியாது காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

ஜே.வி.பி தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நிற்கிறது. சந்திரிகாவோ ஜே.வி.பியின் நிலைப்பாட்டை முழுவதுமாக ஏற்க முடியாமலும், ஜே.வி.பியை புறம் தள்ள முடியாமலும் திணறி வருகிறார். சந்திரிகா உறுதியான முடிவினை எடுக்கும் ஆற்றலை தொடர்ந்தும் இழந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது அண்மைய அரசியல் அரங்கில்.

பாராளுமன்றத்தைக் கலைத்து ஒரு பொதுத் தேர்தலுக்குப் போவதைத் தவிர சந்திரிகாவுக்கு வேறு எந்த மாற்று வழியும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன் தனது கூட்டணியையும் தனது வெற்றி வாய்ப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய நிச்சயமான தன்மை சந்திரிகாவுக்கு உள்ளது.

ஆகவே தனது வெற்றி வாய்ப்பு என்பது கூட்டணி அமைப்பதன் மூலமே சாத்தியப்பட முடியும் என்பதும், அதுவும் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதன் மூலமே வெற்றி இலக்கை அடையலாம் என்பதும் சந்திரிக்காவுக்கு தெளிவாகத் தெரிந்த விடயமாக உள்ளது. ஆனாலும் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதென்பது கடந்த காலத்தில் முஸ்லிம் காங்கிரசுடனோ அல்லது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடனோ உடன்பாட்டிற்கு வந்தது போல் இலகுவான விடயமல்ல என்பதை சந்திரிகா இப்போது தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளார்.

என்னதான் சொன்னாலும் ஜே.வி.பி சந்திரிகாவை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. சந்திரிகா தங்களது நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு வருவதைத் தவிர சந்திரிகாவுக்கு வேறு எந்த மார்க்கமும் இல்லை என்பது ஜே.வி.பிக்கு நன்றாகவே தெரிந்த ஒன்றாகும். அதனால் அவர்கள் தங்களது அரசியல் வேலைகளை அதிகமாக செய்யத் தொடங்கி உள்ளனர்.

கடந்த ஓரிரு தினங்களுக்குள் காலியிலிருந்து கொழும்பை நோக்கி மக்களை இணைத்த ஒரு பெரும் பேரணியை நடத்துகின்றனர். ஏலவே பல்வேறு பேரணிகளை நடத்தி உள்ளனர். ஜே.வி.பியின் பின்னால் மக்கள் ஈர்க்கப்பட்டு வருகின்றனர். இந்நிலைமையானது எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் மட்டும் பாதிப்பை தரப்போவதில்லை. நாட்டிலுள்ள ஏனைய தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கும் மக்களுக்கும் பெரும் அச்சுறுத்தலை தரக்காத்திருக்கிறது ஜே.வி.பியின் இந்த வளர்ச்சி.

-பாதுஷா-

# பத்ரியா நகர் - முஸ்லிம்களின் காணி தமிழர்கள் நிலமா முஸ்லிம்களின் நிலமா?

மீராவோடை தமிழ்ப் பிரதேசத்தில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரால் மீள் குடியமர்த்தல் புனர் வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீராவோடை தமிழ் வித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள - மாஞ்சோலை - பத்ரியா நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள தமிழர் புனர் வாழ்வுக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளத் துவங்கிய போது யாருடைய காணி? என்பது குறித்துச் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்நிலத்தில் 1954 ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் 1985, 1990 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் கலவரங்களின் அச்சத்தினால் எல்லைப் பகுதியான இவ்விடத்தை விட்டு வேறு இடங்களுக்கு நகர்ந்தனர்.

1963 ஆம் ஆண்டு "ஜெயபூமி" திட்டத்தின் கீழ் இப்பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு இந்நிலம் வழங்கப்பட்டது. நில அளவையார் "மட 9" படத்தில் இவர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இக்காணிக்கு உரித்துடையோர்,

1. வெள்ளையன் முஸ்தபா லெப்பை
2. அனிபா அலிமாக்கண்டு
3. முகம்மது அலியார் றஹ்மத்தும்மா
4. முகம்மது அலியார் அசனத்தும்மா
5. சீனி முகம்மது கதிசா உம்மா
6. அலியார் மரியம் பீவி
7. உதுமா லெப்பை
8. எஸ்.எல்.எம். சுபைர்
9. காதர் சாஹிப்

மேற்குறிப்பிட்ட நில உரிமையாளர்கள் கல்குடா பள்ளிவாயில்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்துக்கு இது குறித்துச் செய்த முறைப்பாட்டை அடுத்து சம்மேளனப் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஊடாக தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தை அணுகியுள்ளனர்.

கோறளைப்பற்று, கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர்கள், மீராவோடை தமிழ் கிராம சேவகர், மாஞ்சோலை கிராம சேவையாளர், மற்றும் இரு பிரிவிலுமுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நில அளவையாளர் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதையடுத்து நில அளவையர் திணைக்களத்தில் தஸ்தாவேஜுகளை ஆராயும் வரை இக்காணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்துள்ளது.



## பாரபட்சம் காட்டப்படுகிறதா?

அக்கரைப்பற்றிலிருந்து அம்பாரை, பொத்துவில், சாகாமம், கல்முனை ஆகிய இடங்களுக்கு செல்லும் வீதிகளை விஸ்தரித்து ஒற்றை வழிப்பாதையாக (ONE WAY) தரமுயர்த்தும் வேலைகளும் நுழைவாயில் வேலைகளும் மும்முரமாக நடைபெற்று வருகின்ற நிலையில் அதிலுள்ள முறைகேடுகள் தொடர்பாக பிரதேச மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

இந்நிலையில் மேற்படி கல்முனை வீதியில் அமைந்துள்ள அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வடகோடியில் இருந்துமட்டும் சுமார் 05 அடி (5') வித்தியாசத்தில் வளைவுடன் வடிகான் அமைக்கப்படுகிறது. இதனால் குறிப்பிட்ட இடத்தில் வீதியின் அகலம் திடீரென குறைந்துள்ளது.

நிதி ஒதுக்கீடு செய்த நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயற்றிட்ட வரைபு இவ்வாறுதான் உள்ளதா? அல்லது ஏனைய அனைத்து கடைத்தொகுதிகள் பள்ளிவாயல் கட்டிடங்கள் உடைக்கப்பட்டபோதும் குறித்த இடத்திலுள்ள கட்டிடங்கள் மட்டும் உடைக்கப்படாமல் பாதுகாப்பதற்கான அரசியல் விட்டுக் கொடுப்புகளா இவை என உரிய அதிகாரிகளை நோக்கி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஏ.எல். நிப்றாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைநகர முஸ்லிம் இளைஞர்கள் எங்கே சென்று கொண்டிருக்கிறார்கள்?

நம் இலங்கைத் தாயகத்தில் முஸ்லிம்கள் எல்லாத் திசைகளிலும் பரந்தும் - பரவியும் வாழ்ந்து வந்தபோதும், சில ஊர்களில் முஸ்லிம்கள் செறிந்தும் - பெரும்பான்மையாகவும் வாழ்கிறார்கள். இந்த வரிசையில் தலைநகர் கொழும்பு முக்கிய இடம் வகிக்கிறது. கொழும்பு, தலைநகர் என்ற நிலையில், பல இனங்களைச் சேர்ந்த, பல ஊர் மக்கள், பல்வேறு நோக்கங்களுக்காக வாழ்ந்த போதும், முஸ்லிம்கள் கொழும்பில் தனித்த பெரும்பான்மை இனமாக வாழ்ந்து வருவதை மறுக்க முடியாது;

கொழும்பு வாழ் முஸ்லிம்களின் வாழ்வு நலமாகவும் - வளமாகவும் - பலமாகவும் இருந்தாலே, அது ஏனைய ஊர் முஸ்லிம்களுக்கு மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும், தைரியமாகவும் இருக்கும். ஆனால் - இந்த மகிழ்ச்சி கலந்த உற்சாகமும் - தைரியமும் கேள்விக் குறியாகும் விதத்தில், தலைநகர முஸ்லிம் இளைஞர்கள் இலக்கு தெரியாமல்-இலாப நட்டம் புரியாமல் நடந்து வருவதுதான், முல்லாவுக்கு வேதனையாக இருக்கிறது....

தலைநகரத்து முஸ்லிம் இளைஞர்கள் அப்படி என்னதான் பிழையாக நடந்து கொள்கிறார்கள்?

கொழும்பில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் வாழைத்தோட்டம், புதுக்கடை, மாளிகாவத்தை, கொம்பனித்தெரு போன்ற பகுதிகளில் - கிரிக்கெட் ஆட்டம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்படாத எந்தவொரு நாளிலும், மாலை மயங்கிவிட்ட பொழுதில், ஒரு 'ரவுண்ட்' சென்று நோட்டமிட்டு வாருங்கள். நம் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்களான இளைஞர்கள், பெரும்பாலும் வீதிகளிலேயே பொழுது போக்கிக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

"பொழுது போக்குகிறார்கள்" என்றால், ஏதேனும் பயனுள்ள வழிகளில் - பிரயோசனம் மிக்க முறைகளில் பொழுதை போக்குகின்றார்கள் என்றா நினைக்கிறீர்கள்? அதுதானில்லை. வீணான "முஷிபத்துகள்" - "பி...த்னாக்கள்" நம் இளைய சமுதாயத்தினால் விலைக்கு வாங்கப்படுகின்ற விபரீதம்தான், தினம்தினம் நடைபெறுகின்றன. கொஞ்சம் விளக்கட்டுமா?

ஒரு பௌத்த கோவில் (பன்சலை) முன்னால், நம் இளைஞர்கள் ஆட்டோக்களை நிறுத்துகின்றனர். ஓரிருவரில் ஆரம்பித்து, நாளடைவில் அது பெருகி, இன்று அவ்விடம் ஓர் "ஆட்டோ ஸ்டேன்ட்" ஆகவே மாறிவிட்டது. பொதுமக்களுக்கு பயன்தரும் தரிப்பிடமாகத்தானே திகழ்கிறது என்று அனுமதித்தால், நம் இளைஞர்கள் ஒழுங்குற அவ்விடத்தைப் பேணுகின்றார்களா என்றால், அதுதானில்லை. கண்ட கண்டபடி இங்குமங்குமாக தத்தம் ஆட்டோக்களை நிறுத்துகின்றனர். இதனால் அவ்விடம் வழமையாக வந்து போகும் வாகனங்கள் - நகரசபை சுத்திகரிப்பு லாரிகள்- மண்ணெண்ணெய் வண்டிகள் - நடமாடும் பொருள் விநியோக - விற்பனை லாறிகள் போன்றன, சீராக வந்து போக முடியாத நெருக்கடி, நம்மவர் ஆட்டோக்கள் ஒழுங்கின்றி நிறுத்தலால் சதாவும் ஏற்படுகிறது. பிற இன இதயங்களுக்கு இது சங்கடமன்றோ....?

ஆட்டோக்களை அலங்கோலமாக நிறுத்துவதோடு இது நின்று விடுகிறதா? போகிற வருகிற மனிதர்களுக்கு - குறிப்பாக வயோதிபர்களுக்கு - பெண்களுக்கு பாடசாலை செல்லும் உயர் வகுப்பு மாணவர்கள் நையாண்டி பண்ணும் நக்கல்- விக்கல் - முக்கல் முதலாய குரலொலி அங்க கத (ஹின்ட்) அவலங்கள் அன்றாடம் நடைபெறுகின்றன.

ஆட்டோக்களில் ரேடியோக்களை பலத்த குரலில் பாடல் இசை கேட்க திருகி வைக்கும் நம் இளைஞர்கள், பிறருக்கு பேரிரைச்சல் தரும் சங்கடங்களை எத்தனை நேரம் பொறுப்பது? பள்ளிவாசல் மினாராக்களிலிருந்து ஒலிக்கும் பாங்கோசையையே "கத்தல்" என, எதிர்மன விரோதங் கொண்டலையும் இனவாத சக்திகளை வலிய வம்புக்கிழுக்கும் பண்பற்ற செயலல்லவா இது?

சில பகுதிகளில் நம் இளைஞர்கள் நள்ளிரவு ஒரு மணி, இரண்டு மணி வரை வட்டமாக சந்திகளில் அமர்ந்து, சூதாடி மகிழும் ஷைத்தானிய காட்சிகள், இந்த இளைஞர் சமுதாயம் எந்தத் திசைநோக்கி விரைகிறது எனத்தேட வைக்கிறது. ஒருபக்கம் நள்ளிரவு வரை பாட்டுச் சத்தம் - மறுபக்கம் சூதாட்ட ஆரவாரம் - பிறிதொரு பக்கம் அயலவர்கள் அசந்து தூங்க முடியாத பேச்சரவம் எல்லாம், பிறரிடம் சரிவான பார்வைகளையே ஏற்படுத்தும்.

அது மட்டுமா? கொழும்பு நகர முஸ்லிம் இளைஞர்கள் நடுத்தெருவில் கிரிக்கெட்- கால்பந்து என விளையாடும் வினோதங்களும், அதனால் சில நேரங்களில் விபரீதங்களும் அடிக்கடி தேவையற்ற சூழல்களை உருவாக்குகின்றன. "இன்று கிரிக்கட்தான் எல்லா இடங்களிலும், எல்லா இனத்தவர்களாலும் வீதிகளில் விளையாடப்படுகின்றதே-இதில் முஸ்லிம் இளைஞர்கள் விளையாடுவதுதானா பிரச்சினையாகிறது" எனச் சொல்வோரின் குரலும் முல்லாவின் செவிகளில் விழாமலில்லை.

சிறுபான்மையிலும் சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம்கள் எப்படி நடக்கிறார்கள் என்பதை




அடியொட்டியே, முஸ்லிம் இளைஞர்களின் செயற்பாடுகள் இங்கு ஆராயப்படுகின்றனவே தவிர, "மற்றவர்கள் செய்யும் தவறை நாங்களும் செய்தாலென்ன" என நியாயம் தேடுவது பொருத்தமல்ல. அண்டை வீட்டானின் பசி போக்கிட விழையும் ஒரு சமுதாய கட்டமைப்பில், பிறருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவது; பிறர் செய்கிறார்கள் என்பதற்காக நாமும் செய்ய முனைவது சரியுமல்ல; சரீஆவின் நெறியுமல்ல.

சன்மார்க்க நெஞ்சங்களே-போதைவஸ்து இன்று இளைஞர் சமுதாயத்தை சீரழித்து, சின்னாபின்னப்படுத்தி வருவதை அறிவோம். கொழும்பை பொறுத்தவரை, நம் முஸ்லிம் இளைஞர்களில் ஒரு சாரார் இந்த போதை வஸ்துக்கு ஆளாகி, தெருவோரங்களிலும், கட்டடத் திண்ணைகளிலும், கண்ட கண்ட இடங்களிலும் தூங்கிவழியும் சோகம், சமுதாய நெஞ்சங்களை கவலையுறச் செய்கின்றது.

'கிட்ட இருந்தால் முட்ட பகை' என்பதற்கொப்ப, மேற்படி செயற்பாடுகளினால் - கருத்து முரண்பாடுகளினால் அடிக்கடி சன்மார்க்க இளைஞர்களிடையே கோஷ்டி மோதல்கள் ஏற்படுவதையும் தவிர்க்க முடியாதிருக்கிறது. சண்டியரில் அவரை - இவரை தெரியும் எனும் தைரியத்தில் வலிந்து மோதும் நிலை.

கல்வியை கட்டாயப்படுத்தியுள்ள ஒரு சமுதாயத்தில், தொழில் செய்வதை வலியுறுத்தும் ஒரு சமுதாயத்தில், பிறர் நலன் பேணுவதை வலியுறுத்தும் ஒரு சமுதாயத்தில் இப்படி முஸ்லிம் இளைஞர்கள் கொழும்பில் குறிப்பாகவும், முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஏனைய சில ஊர்களிலும் இவ்வாறு இலக்கு தெரியாமல், திசை புரியாமல் திணறுவது ஏன்? சமுதாயத்தின் இளைஞர் சக்தி இவ்வாறு வீண் விரயமாவது ஏன்?

முறையான வழிகாட்டல் கிடைக்காமை - உரிய கல்வியறிவு பெற்றிராமை - சமய விழுமியப் பண்புகளில் போதிய தெளிவில்லாமை - சமூக நலனில் எதிர்கால அக்கறை இல்லாமை என்பவையே, நம் முஸ்லிம் இளைஞர்களின் திக்குத் தெரியாத பயணத்திற்கு அடிப்படை காரணங்கள் என்ற உண்மையை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

பிரஸ்தாப காரணங்களை அலசி ஆராய்ந்து, அவற்றை களைவதற்கான முயற்சிகளில் தீவிர பங்காற்றல் செய்து, திசைக் காட்ட வல்லார் யார்? இசைந்து முன்வருவார் எவர்? முஸ்லிம் அரசியல் தலைவர்களா? மார்க்க அறிஞர்களான உலமாக்களா? சமூக அமைப்புக்களின் பிரமுகர்களா? முஸ்லிம் அதிபர் - ஆசிரியர்களா? முஸ்லிம் தனவந்தர்களா?

இந்தப் "பெரியவர்கள்" வரிசையில், எவருமே முன்வரும் நிலையில் இல்லை என்பதே முல்லாவின் முடிவான தீர்ப்பு. சமுதாயத்தின் எதிர்காலம் வினாக்குறியாக வளையாதிருக்க, நம் இளைஞர் சக்தியை காத்திட வேண்டும். எவருமே முன்வருவாரில்லை என்று சமூகம் வாளாவிருக்க முடியாது; கூடாது. சமூகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அதிகாரத்தில் உள்ளவர்களையும், உலமாக்களையும் தூண்டிவிட வேண்டும். சமூகம் விழிப்பாக இருந்தால், உரியவர்களின் பங்களிப்பை - பங்கினை எளிதில் பெறலாம்.

"துடிப்புள்ள பத்து இளைஞர்கள் என் பின்னால் வரட்டும். இந்த உலகையே புரட்டிக் காட்டுவேன்" என்றார், இந்தோனேஷியாவின் முன்னாள் ஜனாதிபதி சுகர்னோ. இந்தத் துடிப்புள்ள இளைஞர்களை நாமும் உருவாக்க முன்வருவோமாக! இது உடனடியாக ஆற்ற வேண்டிய அரிய பணி மட்டுமல்ல, அவசிய பணியுமாகும். இது குறித்து சிந்திப்போமா?

# வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கென
# தனியான இடைக்கால நிர்வாகம் வேண்டும்!



இன்று நமது நாட்டின் எல்லோரது கவனத்தையும் ஈர்ந்து வரும் ஒரு விடயம் வடக்கு கிழக்கிலே இடைக்கால நிர்வாகம் எப்படி அமைய வேண்டும் என்பதாகும். இதில் சில கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின்ற போதும் எப்படியும் இந்த இடைக்கால நிர்வாகம் கொடுப்பதற்கான முடிவில் இன்றைய அரசாங்கம் இருந்து வருகின்றமை ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

இதில் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களின் நிலை என்ன என்பதில் ஒரு தெளிவில்லாமல் இருக்கின்றது. வடக்கு கிழக்கிலே வாழும் முஸ்லிம் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெளிவில்லாத கருத்துக்களை ஆளுக்கொன்றாக மாறுபட்ட நிலையில் அறிக்கைகளாக அள்ளிவீசுகின்றார்கள். தமிழ் மக்களைப் பொறுத்தவரை நூற்றுக்கு நூறுவீதம் ஐக்கியப்பட்டவர்களாக தமது ஒன்றுபட்ட கருத்தைத் தெரிவித்து தகுந்த முடிவிற்காகக் காத்து நிற்கின்றனர்.

மேலும் வடக்கு கிழக்கிலே வாழும் முஸ்லிம்களையும், சிங்கள மக்களையும் பெயரளவில் உள்ளடக்கியதான இடைக்கால நிர்வாகமே எமக்கு வேண்டும் என்பதிலும் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள். இது எந்த அளவிற்குச் சாத்தியமாகலாம் என்பது ஒரு புறமிருக்க. அவர்களின் போராட்டத்தையோ, அல்லது அவர்களின் உரிமையையோ நாம் ஒருபோதும் உதாசீனம் செய்யக் கூடாது. கடந்த இருபது வருட யுத்தத்தின் பெறுபேறாக அவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் அரசியல் அதிகாரத்திற்கு நாங்கள் தடைக்கறகளாக இருக்கவும் கூடாது. அவர்களின் நியாயமான போராட்டத்தின் வெற்றி இலக்கு அது. ஆனால் வடக்கு கிழக்கிலே வாழுகின்ற 6 இலட்சம் முஸ்லிம் மக்களின் கடந்தகால வரலாறுகள், சம கால நிகழ்வுகள், எதிர்கால நடவடிக்கைகள் போன்றவற்றை நாங்கள் ஒவ்வொரு முஸ்லிமும் நன்றாக அலசி ஆராய வேண்டும். கிடைக்கவிருக்கும் இடைக்கால நிர்வாகத்தில் தமிழ் மக்கள் ஆளுந்தரப்பாக மாறுகின்றபோது எமது முஸ்லிம்களின் நிலை என்னவாக அமையும்? அப்படி அமையும் நிர்வாகத்தில் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் வாழ முடியுமா? அப்படி வாழ முடியுமன்றால் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு? இன்று அரசியல் தீர்க்க தரிசனம், மருந்துக்கும் இல்லாதவர்களெல்லாம் முஸ்லிம்களின் தலைவர்கள் என்று கதிரைகளைச் சூடாக்கி மக்களை மாடாக்கி வயிறு வளர்த்துத் திரிகின்றார்களே! இப்படியானவர்கள் இதற்கான உத்தரவாதத்தினைத் தருவார்களா?

நிச்சயமாக இல்லை ஏனெனில் அவர்களால் அது இயலாத காரியம். கடந்த கால நிகழ்வுகள் நமக்குக் கற்றுத் தந்த பாடங்கள் அவை. இந்த் அரசாங்கம் பதவியேற்று இரண்டு வருடங்கள் அண்மித்திருக்கும் இன்றைய நிலையில் இந்த வெற்று வேட்டுத் தலைவர்கள் சாதித்ததுதான் என்ன? வெறும் தலைகுனிவேயன்றி வேறென்னவாக இருக்கும்.

இப்படிப்பட்டதொரு சூழலில் பொறியில் அகப்பட்ட நிலையில் இன்று வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். எப்படியோ எமது காலம் ஒருவாறு கழிந்துவிடலாம். ஆனால் எமது வருங்கால சந்ததிகளின் எதிர்காலம் என்ன? என்பதை நாம் கவனத்தில் எடுக்காது போனால் அவர்கள் படப்போகும் துன்பங்கள், துயரங்களுக்கு நாங்களே வழியமைத்தவர்களாவோம் என்பதை நாம் மறந்துவிடலாகாது. எனவேதான் நாங்கள் உடனடியாக காரியத்தில் இறங்க வேண்டும். எங்களது தலைவிதியை அல்லாஹ்வின் உதவியினால் நாங்களே தீர்மானிக்க முடிவெடுக்க வேண்டும்.

**எம்.எல்.எம். முஸ்தபா, மருதமுனை.**

வடக்கு கிழக்கிலே வாழுகின்ற மக்களுக்கான இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவிருக்கும் இவ்வேளை தமிழ் மக்களுக்கான இடைக்கால நிர்வாகம் தமிழ் மக்களுக்காகவும், வடக்கு கிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம்களுக்கென தனியானதொரு நிர்வாக சபையை எங்களுக்காகவும் கோரி அதனைப் பெறுவதற்காக முஸ்லிம்களாகிய நாம் ஒவ்வொருவரும் உடன் கருமமாற்ற வேண்டும். இதனை விடுத்து இன்றைய பிரச்சினையை சற்று தணிய வைக்கும் முகமாக தற்காலிகமாக எடுக்கப்படும் எந்தவொரு தீர்வும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களை பாரியளவில் பாதிப்புக்குள்ளாக்கும். மேலும் இன்று சச்சரவுகளாகவிருக்கும் தமிழ், முஸ்லிம் உறவுகள் இன்னும் சில காலங்களில் விஸ்வரூபமெடுத்து மீண்டும் ஒரு அமைதியின்மையை உண்டாக்கி பெரும் அழிவுகளை ஏற்படுத்தும். எனவே இவைகளைத் தடுத்திட வடக்கு கிழக்கிலே வாழுகின்ற தமிழ் மக்களுக்கென ஒரு இடைக்கால சபையும், வடக்கு கிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம்களுக்கென ஒரு இடைக்கால சபையும் தனித்தனியாக வழங்கப்பட வேண்டும். இச்சபைகளூடாக அந்தந்த சமூகங்கள் தங்கள், தங்கள் தேவைகளை தடையின்றி நிறைவு செய்துகொள்ள முடியும்.

இதன் மூலமாக தமிழ் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாது. வடக்கு கிழக்கிலே வாழுகின்ற தமிழ் மக்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் உள்ளனவோ, அவையனைத்தும் வடக்கு கிழக்கிலே வாழும் முஸ்லிம்களுக்கும் உண்டு. தமிழ் மக்களுக்கு வழங்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாக சபைக்கு முஸ்லிம்கள் எவரும் எதிரானவர்களல்ல. ஆனால் அந்த நிர்வாகத்தினுள் முஸ்லிம்களும் அடக்கப்படவேண்டும் என்பதில்தான் சிக்கல் இருக்கின்றன. இந்த விடயத்தில் இன்று சில தலைவர்கள் மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தாலும். உண்மைகளை ஏற்றுக் கொள்வதுதான் தர்மமான முடிவாகும்.

எந்தவொரு பிரச்சினையும் வருமுன் காப்பதுதான் சிறந்த முறையாகும். இதைவிடுத்து எந்தவிதமான பிரச்சினைகளும் இனிமேல் வராதென்று எவரும் கூறிட முடியாது. ஏனெனில் இன்றைய அரசியலில், நிர்வாகத்தில், தலைமைகள் ஒன்று சொல்ல கீழ் நிலையிலுள்ளவர்கள் அதற்கு மாற்றமாக நடக்கின்றனர். விளைவு இனங்களுக்கிடையே சண்டை சச்சரவு, முடிவில் பாரிய உயிர்ச்சேதம், பொருள் சேதம் இவையனைத்தையும் கவனத்தில் கொண்டே தீர்வொன்று வரும்போது பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட இனங்களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு சிறந்ததொரு முடிவெடுக்கப்பட வேண்டும். ஆகவே நிரந்தர சமாதானத்திற்கு வடக்கு கிழக்கிலே முஸ்லிம்களுக்கென தனியானதொரு நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும். அதுதான் சிறந்ததொரு தீர்வாக முறையாகும்.

## "முஸ்லிம் குரல்" — நீ எங்கள் குரல்

"முஸ்லிம் குரல்" பத்திரிகை வெளியானதிலிருந்து எங்கள் குடும்பப் பத்திரிகையாக இது காணப்படுகின்றது. இது சுமந்து வருகின்ற ஆக்கங்கள் அனைத்தும் வரவேற்கத்தக்கவை. இப்பத்திரிகை ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் எங்கள் கதவைத் தட்டும். சில நேரம் வருவதற்கு தாமதமாகும். இறுதியாக வந்த இதழில் இருவாரங்கள் வெளிவராது என அறிவிக்கப்பட்டு இருந்தது. இதனை வைத்துப் பார்க்கின்ற போது இதற்கு முதல் வெளியான முஸ்லிம்களுக்கான பத்திரிகையை போன்று வெளிவராது நின்றுவிடுமோ என்ற பயவுணர்வு ஏற்படுகின்றது.

ஏனெனில் இன்று அரசியல் ரீதியாகவும் சமூகரீதியாகவும் பேரினவாதிகளாலும் சக சிறுபான்மையினர்களாலும் முஸ்லிம்களின் உரிமைகளும் அபிலாசைகளையும் ஒடுக்கப்பட்டுக் கொண்டு வருகின்ற காலகட்டத்தில் முஸ்லிம்களின் அரசியல் தலைவர்களும் ஏனைய பிரமுகர்களும் மௌனமாகி விட்ட நேரத்தில் எமது உரிமை களையும் அபிலாசைகளையும் அடைவதற்கு இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவர இறைவனின் துணைகேட்டு பிரார்த்திக்கின்றேன். இப்பத்திரிகை எவ்விதமான பக்கச் சார்புடனும் செயற்படாது. எல்லா பிரதேச மக்களின் ஆக்கங்களையும் சுமந்து வரவேண்டும் என விரும்புகிறேன்.

**-ஏ.பி.எம்.வபீஸ், தோப்பூர் 06.**

## உணர்க் கசிவு

பகற்பொழுதின் கரைந்துபோன வாழ்வின்
வியர்வைச் சிந்தலின் பெறுபேறு கப்பமாகிறது
குருதி கொதிக்க உரிமை கோரிய உண்மை
ஊமையாகிறது
நிருபணமற்ற செயற்பாடுகள் நிலைபெற
மனசாட்சி இறந்து கிடக்க ஆயுதம் தரித்த மிருகம்
ஜனநாயகப் போர்வையில் ஹிட்லரின் சகவாசம்
விடுதலை கோரி இரு தசாப்தம் போராடி மூச்சுவிடும்
விலங்கின் நாக்கில் தேனும் நஞ்சும் உமிழாய்
உலகின் குருடர்களுக்கு தேன் மாத்திரம் தெரிகிறது பாவம்
அப்பாவிகளின் உயிர் குடித்த விலங்கினது
கையிருப்பதிலும் நெஞ்சிலிருப்பதிலும் பயங்கரம் வேர்விட்டு
தென்றல் அணலாக அனைத்தும் எரிர்த்து தகிக்க வைக்க
இரவுகள் உறைந்துபோன அச்சத்தின் விழிம்பில்
உயிர் ஊசலாட நடையோசை கூட பெரு வெடியோசை
யாய்
தவித்துப் போன பொழுது நகரலில் உயிர் காவும் உண்மை
கடத்தி வெட்டினாலும் வாயிலில் வைத்துச் சுட்டாலும்
பயங்கரவாதி ஏற்கமாட்டான் மறுப்பறிக்கை பொய்
பாசிசம் கிண்ணங்களிலில் பரிமாறிப் பருகுகையில் பாலா?
என்ன விளங்கப் போகிறது அத்தனையும் சூனியம்
கனவுலகில் நடந்தால் கூட கடுமையால் கடுக்கிறது
விஷமேறிய வலி மிகுதலின் முனங்கல், உண்மையே பொய்
எனது ஓசையின் பலவீனம் தொடராது உறுதி
எனது குரல் தினமும் ஒலிக்கும் நாள் தூரமில்லை
காதைப் பொத்துகையில் கையிலுள்ளது விழுவது நிச்சயம்.

*SIM முஸ்டீன், காவத்தமுனை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

## குட்டு வாங்கும் நகரம்

தலை நகரின் போக்கு
வர, வரச் சரியில்லை!

குட்டி, நட்டியைக் கண்டால்
பின் கதவால் ஓடுவதும்,
இருதயம் வெடிக்க
ஊர் முழுக்க,
கத்தித் திரிவதும்தான்,
இதன் வேலை!

பெயர் போன நகரம்!
எத்தனையோ பெரும் புள்ளிகள்
சீவியம் கடத்திய இடம்
என் –
கிராமத்து வாசிகளுக்கே



சோறு போட்ட பீங்கான்!

அடிக்கடி,
கையில் நெருப் பெடுப்பதும்,
கழுத்தில் டயர் எரிப்பதும்தான்
இதற்கு எழுதிய எழுத்து!

கனங்கள்,
வந்து போய்
இராக் காலத்தை,
பகற் காலமாக்கிய தெல்லாம்
போச்சு!

சிறப்புக்கு ஒரு பள்ளி!
அது கூட
பெரும் சுமைதான்!

வந்தவன், போனவன் எல்லாம்,
தலையில் குட்டுப் போட்டு,
கடையடைப்பு செய்யும்
மா நகரம்!

ஒரு காலத்தில்
எங்கும் பேசப்பட்டதுதான்!

–முகமட் அபார்
கல்முனை

## என் சமூகத்தின் விழிப்புக்குரல்!

ஏன் நண்பர்களே இன்னும்
துங்குகின்றீர் நீங்கள்
துங்கியதால் அவர்கள்
விழித்து விட்டார்கள்.

நண்பா நீங்கள் விழிப்பதுக்கு முன்
அவர்கள் குழிதோண்டி விட்டார்கள்.

ஏன் இன்னும் யோசிக்கின்றாய்
மீண்டும் தூங்கவா?
இருந்த நிலத்தையும் விட்டு
அகதிகளாக ஓடவா?

இனியும் ஓடினால் மீண்டும்
அமர நிலம் கிடைக்குமா என்று
இன்னும் நம் இளைஞர்கள்
யோசிக்கின்றார்கள்.



நண்பா உன்னை கோழை
என்று நினைத்து விட்டார்கள்
உன் மனக்கண் முன்னால்
அநீதி கொட்டிக்கிடக்கின்றது
அதையும் மறந்து விட்டாயா?

மண்ணை விட்டு ஓடுவதா
மடிந்தாலும் இந்த மண்ணில்தான்
செத்து மடிவேன்
என்று நினைத்து நிலத்தில்
நிக்காமல் ஓடுவதா நண்பா
கோழையாக இருந்த காலம்
மலையேறிப் போச்சு

இனியும் கோழையா இருக்க மாட்டேன்
நெஞ்சை நிமிர்த்தி நிலத்தில் நிமிர்ந்து நில்

அடக்கு முறை வேண்டாம்
எங்களிடம் கப்பம் கேக்காதே
மீண்டும் எங்கள் குடியிருப்புகளில்
குடியிருப்பதுக்கு இடம் கொடு
இன சுத்திகரிப்பை நிறுத்திவிடு.

அவர்களை புதைத்து விடுவதுக்கு
இன்னும் ஏன் யோசிக்கின்றாய்
எழுந்து வா நண்பா.

–வாழைச்சேனை நகீர்

## நாளை நீ இருப்பாய்

உலகம் எனும் மாயையில்
உருகிவிட்ட சோதரனே – நீ கண்ட
உலகில்
உனக்கென்று எதைக் கண்டாய்?
உண்டென்று எதைக் கொண்டாய்?

பட்டம், பதவி,
பணம், படாடோப வாழ்க்கை
உன்னை மயக்கிவிட்டன
உளன்று கொண்டிருக்கின்றாய்!
இவைகளில்,
உனக் கென்று எதைக் கண்டாய்?
உண்டென்று எதைக் கொண்டாய்?

பஞ்சணை மெத்தை – உன்
எண் சாண் உடம்பை
பதுமையாக்கி விட்டது
புதுமையாய் உறங்குகிறாய்!
இவற்றில்
உனக் கென்று எதைக் கண்டாய்?
உண்டென்று எதைக் கொண்டாய்?

சொகுசான வாகனத்தில் – வெகு
ஜோராப் பயணிக்கிறாய்
காற்றாகப் பறக்கிறாய்
ஊர் ஊராய் அலைகிறாய்!
இதில்
உனக் கென்று எதைக் கண்டாய்?
உண்டென்று எதைக் கொண்டாய்?

சுற்றத்தார் உறவின்றி – உன்
சுயம்வரத்தில் சுதி கொண்டாய்
நயமாக வாழுகின்றாய்
நியாயம் தேடுகிறாய்
இங்கே
உனக் கென்று எதைக் கண்டாய்?
உண்டென்று எதைக் கொண்டாய்?

உன் வாழ்க்கைப் பயணம்
உன்னையே மறந்து
உன் இறைவனையே மறக்கடித்தால்
உன் பொருள், ஆவி எல்லாம்
உண்டென்று கண்டாலும்
உண்டன்று – இன்றே
நீ இறந்தாய்!

மறுமைக்காய்
மறு வாழ்வுக்காய்
மதிப்பு மிக்க உன் பயணம்
மற்றோரை மதித்திடும்
உற்றோரை இணைத்திடும்
எழியோரை அணைத்திடும்
இறையோனைத் தொழுதிடும்
வாழ்வாக மலர வேண்டும்
அப்போ!
உண்டென்று உள்ளதெல்லாம்
உண்டென்றே கொள்வாய்!

உன் வாழ்க்கைத் தொடர்
நிரந்தர தர்மத்தை
நிலை பெறச் செய்துவிட்டால்
நித்திய ஜீவனின்
சத்திய வழி நடந்தால்
உண்டென்று உள்ளதெல்லாம்
உண்டென்றே கொள்வாய்!
இன்று நீ மறைந்தாலும்
நாளை நீ இருப்பாய்

எம்.ஐ.எம். சுபைர்,
ஏறாவூர்

## சமூகத் தோட்டத்தின் சுவாசம்

அத்தோட்டப்பூக்கள்
மிக அழகாகவே
பூத்திருந்தது.

பொழுதுகள்
அச்சம் கொடுப்பதுதான்
எப்போதுமாயிற்று ....

சிரிக்கும் தோட்டம்
ஒவ்வொரு வீழ்தலிலும்
சுவாசங்களைத் தொலைத்து
கண்ணீர் வடிய வடிய
அதிர்வு கொள்கிறது.



சூழ அரண்கள் இருந்தும்
பாதுகாப்பை இழந்த சுவாசங்களால்
நாளைக் கழித்த தோட்டம்
தேடியது வேர்களை ....

வேர் முடுக்கவுமோ
தொற்றுப் புழுக்கள் மேய்ந்து
மாறியது நரகமாய் ....

அப்போதுதான்
சமூகத்துருவங்களும்
இடுப்புப் புதையவும் சேறுபூசி
நிதானம் கருகிய கண்களோடு
தோட்டத்தை நோக்கு(வே)
உணர்ந்ததாம் புதைவுகளைப் பற்றி

முஹம்மட் இஸ்மாயீல் சித்தி றபீக்கா
சம்மாந்துறை.

# எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்...!

## சிறுகதை

நான்குமாத லீவில் வந்த அஸ்ரப்பையும் சேர்த்துத் தனது கனத்த சரீரத்தை தூக்கிக் கொண்டு சிறிலங்கன் விமானம் மேலெழுந்தது. கட்டுநாயக்காவுக்கு விடைகூறி, சவூதியை நோக்கி முகம் திருப்பியது. அந்த விமானத்தின் பாரத்தை விட பன்மடங்கு கனத்த மனதுடன் அஸ்ரப் விமானத்துள் மௌனமாக இருந்தான்.

விமானம், றியாட் விமானத்தள ஓடுபாதையில் காலூண்றி அழுத்தமாகவும் நீளமாகவும் முத்தமொன்றை ஓடுபாதைக்குக் கொடுத்து களைத்துப்போய் நின்றது. அஸ்ரப் உற்சாகமின்றி இறங்கினான். செய்தியறிந்த சவூதி நண்பர்கள் வாகனத்துடன் வரவேற்க வந்திருந்தனர்.

"அந்தா வாறாண்டா மாப்புள" காத்திருந்த நண்பன் அஸீம் எயாப்போட் சூழ்நிலையை மறந்து கூவினான். எல்லோரும் அஸ்ரப்பைக் கண்டு கொண்டு ஆரவாரித்தனர். அஸ்ரப் வலிந்து ஒரு புன்னகையைப் பிரசவித்துக் கையசைத்தான். அருகில் வந்ததும் கை கொடுத்துக் கட்டியணைத்தனர்.

"கல்யாணமெல்லாம் எப்புடி" "ஊர் எப்புடிக் கெடக்கு"

"எல்லாருஞ் சொகமாரிக்காகலா"

விசாரிப்புகள் தொடர்ந்தாலும் அஸ்ரப் மௌனமாக நின்றான்.

"ஏய் அஸ்ரப் நாங்க விசாரிச்சிக்கிட்டுரிக்கிரம் நீ என்ன மச்சான் பேசாமரிக்கா...? ஏதாவது.."

"எல்லாத்தையும் ரூமுக்குப்போய் கதைப்போம்" அஸ்ரப் முற்றுப்புள்ளி வைத்தான். வாகனம் ரூமுக்கு வந்து சேர்ந்தது. நண்பர்கள் அஸ்ரப்பின் பொதிகளைத் தூக்கிச் சென்று வைத்துவிட்டு அவன் உடைமாற்றிக் கொண்டு வருமட்டும் ஆவலோடு காத்திருந்தனர்.

"அஸ்ரப் சொல்லுமச்சான் கல்யாணமெல்லாம் வடிவா முடிஞ்சிதுதானே?"

"கல்யாணம் முடியல்ல, ஆனால் பிரச்சின அதுயில்ல...."

"பின்ன"

"சொல்றன், நான் லீவுலபோய் மூதூர்ல எறங்கின ஒடன உம்மா வாப்பா எல்லாரும் கல்யாணப் பேச்ச எடுத்துட்டாக"

"பொண்ணு ஹைரியா நகர்லதான?" அஸீம் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்ததை உறுதிப்படுத்திக் கொண்டான்.

"ஓம் அந்தப்புள்ளதான்"

"பின்ன எப்புடிரா மச்சான் கல்யாணம் நிண்டுது" ரபீக் ஆர்வத்தை அதிகரித்தான்.

அஸ்ரப் குளிர்பானத்தைக் குடித்துவிட்டு "எல்லாத்தையும் வெளக்கமாச் சொல்றன், நான் மூதூருக்குப் போய் ரெண்டு மூனு நாளயில புலி முஸ்லிம் பொடியன்மார் ரெண்டு பேரக் கடத்திப்புட்டுது. அதுல ஒரு பொடியன் நம்மட எறச்சிக்கட ரெஸாக் நானாட மகன். அவன்ட உம்மா சியாத்துமா ராத்தா சாம்பூர், சேனஊர் என்று அலைஞ்சி எல்லாப் புலிக்கிட்டயும் மகனக்கேட்டா, அப்ப அனுப்புறன், இப்ப அனுப்புறனென சொல்லி கடைசியில புலி கொண்டு போட்டுது. உம்மாக்காறி மனவருத்தத்துல நஞ்சி குடிச்சி மௌத்தாப் பெய்த்து"

"இன்னாலில்லாஹி வயின்னாஇலைகி ராஜிஊன்"

"ஏன் அஸ்ரப் புலியிர இந்த அராஜகத்த பத்திரிகை ஒன்னும் கண்டுக்க இல்லியா"

"ஏன் கண்டுக்காம, இப்ப புலி என்ன அட்டகாசம் செஞ்சாலும் ஒட்டுமொத்தமா தமிழ் பத்திரிகை முதல் பி.பி.ஸி. வரை எல்லாமே புலியிர ஊது குழல்தான். புலி கொல்லுது, கொள்ளையடிக்குது, தீவைக்குது, ஆள் கடத்துது, கப்பம் கேக்குது என்ன செஞ்சாலும் தமிழ் பத்திரிகை, தமிழ் வானொலி எல்லாம் புலியின் வேலை என்று இனந்தெரிந்தும், இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டார், குத்தப்பட்டார் என்டுதான் செய்தி சொல்லுது.

"என்ன... இனந்தெரியாத நபரா"

"ஓம் இப்ப எல்லாத் தமிழர் ஊடகங்களும் ஒன்டுசேர்ந்து புலிக்கி சூட்டியிருக்கிற புதுப்பெயர்தான் 'இனந்தெரியாத நபர்'

"சா.. நம்மட பிரச்சினய எடுத்துச் சொல்ல நமக்கென்டு ஒரு பத்திரிகை இருந்திருந்தால்... எப்படியிருக்கும்...."

"இப்ப எல்லாத் தமிழ் பத்திரிகையும் முஸ்லிம்களுக்கு எதிரா சொற்போர் நடத்துது. அது தெரிஞ்சும் அதக் காசுகுடுத்து வாங்கி வாசிக்கிற நம்மட ஆக்களும் இரிக்கத்தான் செய்யிராங்க.. அதஉட்டு அது பெரிய கத..."

"உண்மதான் விசியத்துக்கு வருவோம். பிறகு என்ன நடந்துது சொல்லு"

"இப்புடி ஊர் கொளம்பிக்கிட்டு இருந்த நேரத்துலதான் என்ட கலியாண வேலையும் நடந்துக்கிட்டு இருந்துச்சி. நாளுக்கு நாள் ஊர்நெலம மோசமாகிக்கிட்டு வர கலியாணத்த கொஞ்சம் ஒத்திப் போடுவமென்டு முடிவெடுத்தோம். இப்போதைக்கு ரெஜிஸ்டரப்பண்ணுவோமென்டு ஆயித்தம் பண்ண, அண்டு வெள்ளிக்கெழம காலயில இருநூறு முன்னூறு எல்டிடிக்காரனுகள் பாலநகருக்குள் பூந்து முஸ்லிம்கள்ற ஊடுவாசலயெல்லாம் பத்த வெச்சிட்டானுகள்"

"யாஅல்லாஹ்.... பொறவு"

"ரெஜிஸ்டர் கொளம்பிட்டு. வந்திருந்த ஆக்களெல்லாம் ஆளுக்கொரு பக்கத்தால ஓடிட்டோம். பட்டாப்பகல்ல சனங்கள் புள்ளயலையும், அம்புட்டதயும் தூக்கிக்கிட்டு அக்கரைச் சேனைக்கும் நடுத்தீவுக்கும் ஓடினத நெனச்சா.... ஒருத்தரும் ஒழுங்கா ஜூம்மா தொழுவயில்ல. புலி ரெண்டு குரூப்பாப் பிரிஞ்சி ஒரு குரூப் ஊரப்பத்தவெக்க, ஒரு குரூப் ஜூம்மா தொழுவுர ஆண்களையெல்லாம் கொல்லுறயெண்டுதான் வந்தயாம். அல்லாஹ் காப்பாத்திப்புட்டான்.

"இரிக்கும் இரிக்கும் புலி செய்வானோளு. காத்தாங்குடி, ஏறாவூர்லயெல்லாம் தொழுவிக்கிட்டு இருந்த முஸ்லிம்கள்ற முதுகுல சுட்டவனுகள்தான.... தொடர்ந்து சொல்லு மச்சான்."

"கேளு அண்டுராவு றாக்குழியால கொஞ்சப்புலி வந்து ஹைரியா நகரக் கொள்ளையடிச்சிபுட்டு பத்தவெச்சானுகள். அதே நேரம் கரக்கடச்சேனயால கொஞ்சப்புலிவந்து தக்வா நகரப் பத்தவெச்சிப்புட்டானோள்"

"மச்சான் அஸ்ரப், குறுக்கால கதக்கிறனென்டு கோவிக்காத புலி இவ்வளவு அநியாயத்தையும் பகிரங்கமாச் செய்யக்குள்ள ஆமி பொலிசெல்லாம் தடுக்கயில்லியா"

"ஹூம்.. பாலநகரப் பட்டாப்பகல்ல புலி பத்தவெக்கக்குள பாதுகாப்பு அமைச்சரும் கண்காணிப்புக்குழு உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமாகும். பாலநகர் ஆமிக்கேம்புக்குள்ளதான் இருந்தாங்க. ஆமியோ பொலிசோ அந்த அழிவத் தடுக்கயில்ல"

"ஏன்" "ஏன்" "ஏன்"

"சமாதானமாம், தோக்க பொழக்க ஏலாதாம்"

"இதென்னடாது புதுணமாக் கெடக்கு. சமாதானமென்டா எல்லாரும் சந்தோசமாக வாழலாமன்டுதான அர்த்தம்"

"சமாதானமா...? அது பேச்சளவுலதான் இரிக்கி. சமாதானமென்ட போர்வயில இன்னமும் கப்பம் கேக்கிறதும் ஆடுமாடக் கடத்துறதும் கொலையும் கொள்ளையுமென்டு புலி செஞ்சிக்கிட்டுத்தான் இரிக்கான். செய்ய வேண்டியதச் செஞ்சிபோட்டு விசியம் பெரிசாப்போன ஒடன சமாதானம் பேசவாறான். பொறவு மாறியும் பழயபடி தோங்கிர்ரான்"

"சரி, சமாதான ஒப்பந்தம் ஒருபக்கம் இரிக்கட்டும். முஸ்லிம்கள் இலங்கைப் பிரஜைகள். இந்த நாட்டுக்கு விசுவாசமாக வாழ்ந்து வரியும் கொடுக்கிறார்கள். அதனால அதன் நாட்டுக் குடிமக்களப் பாதுகாக்கிற தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்துக்கு இரிக்கல்லவா"

துல்கர்னைன்

"நீ சொல்றதெல்லாம் கேக்கிறதுக்கு நல்லாத்தான்ரிக்கி. ஆனா அங்க இப்ப அதெல்லாங்கெடயாது"

"அப்போ நம்மட புத்திஜீவிகள், அரசியல் வாதிகளெல்லாம் என்ன செய்யிராங்க. முஸ்லிம்கள் ஆட்சியில பங்காளியிலுவா"

"பங்காளிதான். அப்படியென்டு நீயும் நானும் சொல்லி சந்தோசப்பட்டுக்க வேண்டியதுதான். ஒரு பிரயோசனமும் கெடயாது. முடிஞ்சவரைக்கும் மக்கள ஏமாத்தி ஓட்டுவாங்கி எம்பியாகி கொழும்புல ஊடு வாங்கிட்டானுகள். எல்லாரும் என்னென்னத்த முழுங்குனானுகளோ தெரியாது. நாவிழந்து பெய்த்தாங்க. எல்லாம் முடிஞ்சதுக்குப்பொறவு அரசாங்கத்துக்கும் புலிக்கும் நோவாம அறிக்க உர்ராங்க. போதாதத்துக்கு 'முஸ்லிம்கள் சமாதானத்தைக் குழப்புபவர்களாக இருக்கக் கூடாது' என்டு நம்மட எம்பிமாரே அறிவுகெட்டதனமா அறிக்க உர்றாங்க. இப்பஇடைக்கால நிருவாக சபை சம்பந்தமா பேச்சடிபடுவுது. முஸ்லிம்கள் தொடர்பா இடைக்கால நிருவாகசபைபற்றி இன்னமும் உருப்படியான எந்த ஏற்பாட்டையும் நம்மட அரசியல்வாதிகள் செய்யயில்ல. நடக்கிறதயெல்லாம் உண்ணிப்பாக் கவனிச்சா இது முஸ்லிம்கள அழிக்கிறதுக்கெண்டே கொண்டுவரப்பட்ட சமாதானம் மாதிரித்தான் தெரியிது. சனங்களுக்கும் இது மெல்லமெல்ல வெளங்குது. நம்மட கிழக்கு மாகாணத்துல உள்ள முஸ்லிம் கிராமங்கள் எல்லாத்தையும் புலி அழிக்கத் திட்டம் போட்டு நடைமுறைப்படுத்துறான். அரசாங்கமும் கண்டுக்குது இல்ல. கொல கொள்ள, தீவைப்பு, ஆள் கடத்தல், ஆடு கடத்தல், மாடு கடத்தல், அகதிமுகாம் எண்டு மீண்டும் இந்த ஆட்சியில வந்துட்டு. இதுல பகிடி என்னன்டா எல்லா அநியாயமும் சமாதான காலத்துல நடக்குது. அதவிடப்பெரிய பகிடி என்னண்டா முஸ்லிம்கள்ற நெலம சீரியஸாப்போக்கிட்டு இரிக்கக்குள நம்மட எம்பிமாரெல்லாம் கட்சிய ரெண்டுமூனா ஒடச்சி எடுத்து ஆளாளக் குத்தகஞ் சொல்லிக்கிட்டுத் திரியிராங்க. சந்தோசமான விசியம் ஒன்னு இரிக்கி... மூதூர் முஸ்லிம்கள புலிகள் குதறிப்புட்டாங்க என்டதும் இலங்க பூறா இருந்த முஸ்லிம்களுக்கிட்ட இருந்து நிவாரணப் பொருளும் ஆறுதல் 'வார்த்தைகளும் வந்து சேர்ந்ததுதான். 'முஸ்லிம் உம்மா'வுக்கு நடைமுறை வெளக்கம் தந்துட்டாங்க. அந்தப் பெருமக்கள் மீது அல்லாஹ் என்றென்றும் நல்லருள் சொரிந்தருள்வானாக"



"ஆமீன்... ஆமீன்... யாரப்பல் ஆலமீன்"

"கவலயான விசயம் என்ன தெரியுமா இவ்வளவும் நடந்ததுக்குப் பொறவும் ஊருக்கு எம்பிமார் வந்தஒடன ஓடிப்போய் மாலபோரதுக்கும், கட்டிப்புடிச்சி மோந்து பார்க்கிறதுக்கும், நாரே தக்பீர் சொல்றதுக்கும் செல எரியிர ஊட்டுல புடுங்கத் திரியிர நக்குத்தின்னிகள் இரிக்கத்தான் செய்யிது. நான் வாறதுக்கு ஒரு நாளக்கி முந்தி அல்ஹிலால் மகாவித்தியாலயத்துல ஒரு கூட்டம், என்னடாண்டா, வீடு எரிஞ்சவங்களுக்கு செக் குடுக்கயாம். அங்கயும் அதே பூமால, கிஸ், போட்டோக்குப்போஸ். ஊர் எரியாமப் பாதுகாக்கிறயா? ஊர் எரியிரதத் தடுக்கவக்கில்லாம இருந்துபோட்டு செக்குடுக்கிறயா, அதயும் ஒரு தேர்தல் விழா மாதிரி செஞ்சிபோட்டாங்க. என்ட அல்லாஹ்வே நம்மட அரசியல் எந்தப்பக்கத்தால எங்கபோவுதெண்டு யாருக்கும் வெளங்குதில்ல"

கூறிமுடித்த அஸ்ரப் உள்ளங்கையால் நெற்றியைப் பிடித்துக் கொண்டு பெருமூச்சு விட்டான்.

"நம்மட சனங்கள்ற நெலமயயும் அத வெளங்க விரும்பாத அரசியல் வாதிகளையும், இது எதையும் கணக்கெடுக்காத அரசாங்கத்தையும் நெனச்சா நெஞ்செரியிது" சலீம் ஆவேசப்பட்டான்.

"சரி சரி இப்ப ஒண்ட - விசியத்துக்குவா எடயில உட்டுட்டியே ஒன்ட கல்யாணத்துக்கு என்ன நடந்துச்சி" அஸீம் அஸ்ரப்பின் தோளை உசுப்பினான்.

"பின்ன என்ன ஹைரியா நகர்ல பொண்ணுட ஊடு. புலிபத்தவெச்சதுல அந்த ஊடும் பத்திப்பெய்த்து சனங்களெல்லாம் பள்ளிவாசல்லையும், பள்ளிக்கொடத்துலயும் அகதியாயிருக்கி இந்தக் கொளப்பத்துல நாளும் ஓடிப்பெய்த்து கடசில பத்து நாள் இருந்துச்சி லீவுமுடிய. கலியாணம் முடிச்சாக் கொறஞ்சது மூனுமாசமாவது தங்கனும். அதால அக்கரச்சேனப் பெரியபள்ளிவாசல்ல ரெஜிஸ்டர் முடிச்ச கையோட இந்தா வந்துட்டன். இப்ப என்ட கலியாணம் இல்ல பிரச்சின. இந்த நிமிசமும் நாட்டுல புலி, முஸ்லிம்களுக்கு ஏதாவது அநியாயம் செஞ்சிக்கிட்டுத்தான் இரிக்கும். ஒன்னு வயல்லவெச்சி அடிக்கும், இல்லாட்டி கடல்ல வெச்சி அடிக்கும். ரெண்டுமில்லாட்டி ஆளக்கடத்தி காசிகேக்கும். ஒன்னுங்கிட்டாட்டி முஸ்லிம்கள்ற ஆடுமாடு கோழி நாய் பூனை எல்லாத்தையும் சாச்சிக்கிட்டுப்போவும். இது எதுவுமே வெளங்காம எளவுகாத்த நம்மட தலைவர்மார் அறிவுகெட்டதனமாக அறிக்க உடுவாங்க. இருந்தாலும் நம்மட மக்கள் நமது அரசியல் வாதிகளாலும் ஏனையோராலும் நாம் கபடத்தனமாக ஏமாற்றப்படுகிறோம் என்கிறதை உணரத்தலைப்பட்டுவிட்டார்கள். அது ஒன்றுதான் நம்பிக்கையையும் ஆறுதலையும் தருகிறது யாஅல்லாஹ்...."

(யாவும் யதார்த்தம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையப்பா ரசிகர்களிடம் திருட்டு! கோடி கோடியாய்ச் சுருட்டு!

படையப்பா வெளியாவதற்கு முதல்நாள் இரவு சுமார் ஒரு மணி; திருச்சியில் ஒரு தேநீர்க் கடை; விறுவிறுப்பாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. வழக்கமாக இரவு 12 மணிக்குள் கடையை அடைக்காவிட்டால் கடையில் புகுந்து அடித்து நொறுக்கும் காவல்துறை, படையப்பா வெளியாவதையொட்டி விடிய விடியக் கடை நடத்த சிறப்புச் சலுகை வழங்கியிருந்தது. ரசிகர்கள் சிலர் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்தார்கள். 6 சுவரொட்டிகள் சேர்ந்த 15 அடிக்கு இருபதடி சுவரொட்டி ஒன்றின் விலை 50 ரூபாய். குறைந்தது 200 சுவரொட்டிகளாவது அடித்திருப்பார்கள். மொத்தம் 10,000 ரூபாய் செலவு.

ஒட்டி முடித்தபின் தேநீர் குடித்தபடியே மறுநாள் டிக்கெட் என்ன விலைக்குப் போகும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். தலைவர் படத்தின் டிக்கெட்விலை அதிகமாக, அதிகமாக பெருமை தான் என்றாலும், அவ்வளவு காசு கொடுத்துப் படம் பார்க்க முடியாதே என்ற வருத்தமும் அவர்கள் பேச்சில் கலந்திருந்தது.

படம் பார்க்க முடியாவிட்டாலும், 10,000 ரூபாய்க்கு சுவரொட்டி அடித்த ரசிகர்களில் ஒருவர் ஓட்டை உடைசல் பிளாஸ்டிக் வாங்கி விற்கும் தள்ளுவண்டி வியாபாரியாம்.

ரஜினியின் புதுப்படம் வெளிவந்தால் கொஞ்ச நாட்களுக்கு கள்ளச் சந்தையில் தான் டிக்கெட் விற்கும் என்பது ஊரறிந்த சேதி. ஆனால் இந்தப் பணமெல்லாம் யாருக்குப் போகிறது? திரையரங்க முதலாளியும் உள்ளூர் ரசிகர் மன்றத் தலைவர்களும் தான் இந்தக் கொள்ளையைப் பங்கு போட்டுக் கொள்வதாக ரசிகர்கள் பலர் நினைக்கிறார்கள். இது உண்மையல்ல.

ரஜினிக்கு ஒதுக்கியது 100 கோடி!

உள்ளூர் ரசிகர் மன்றத் தலைவனுக்கு எலும்புத் துண்டு. திரையரங்க முதலாளிக்கு கறியோடு சேர்ந்து எலும்பு ரஜினிக்கு எலும்பே இல்லாத கறி என்ற விகிதத்தில்தான் இந்தக் கள்ளச் சந்தைக் கொள்ளை பங்கு போடப்படுகிறது.

இதைச் சொன்னவுடனே ஒரு கேள்வியை எதிர்பார்க்கலாம். "20 ரூபாய் டிக்கெட்டை 500 ரூபாய் கொடுத்து வாங்குன்னு ரஜினி சொன்னாரா? 10 நாள் பொறுத்துதான் படம் பார்க்குறது: உனக்கு திமிரு. வெறி. அதுக்கு அவரு என்ன செய்ய முடியும்?" என்பதுதான் அந்த வழக்கமான கேள்வி.

அப்படிப் பார்த்தால் நாம் கொடுப்பதனால்தான் அரசியல்வாதி இலஞ்சம் வாங்குகிறான்; நாம் கவனக் குறைவாக இருப்பதனால் தான் திருடன் கொள்ளையடிக்கிறான் என்று வியாக்கியானம் செய்ய வேண்டியதுதான்.




ரசிகன் கண்டிக்கப்பட வேண்டிய முட்டாள். ரஜினியோ தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி.

ரசிகர்களின் வெறி தானாக உருவாவது அல்ல, உருவாக்கப்படுவது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தாங்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தமிழக இளைஞர்கள் ரசிகர் மன்றம் வைத்துத் தங்களைத் தொல்லை செய்வது போலவும், வேறு வழியில்லாமல் தாங்கள் அதைச் சகித்துக் கொண்டு, அவர்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பதைப் போலவும் பம்மாத்துக் காட்டுகிறார்கள் நடிகர்கள்.

வெறி உருவாக்கப்படுகிறது!

"விபச்சாரத் தரகன் - விடுதிக்காரன் - விலைமாதர்" கூட்டணியைப் போல, "சாராயக்கடை - சாக்கனாக்கடை - வட்டிக் கடை" கூட்டணியைப் போல "சினிமா கதாநாயகன் - முதலாளிகள் - பத்திரிகைகள் - ரசிகர் மன்ற" கூட்டணி வேலை செய்கிறது.

படம் வெளிவருவதற்கு முன்பே "ரஜினி ரசிகன் " பத்திரிகை 8 படையப்பா சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளது: 15 இலட்சம் ரஜினி போஸ்டர்களை விற்றுள்ளது; ஆட்டோக்களில் ஒட்ட ரஜினி ஸ்டிக்கர்கள் இலட்சக் கணக்கில் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. படம் வெளி வருவதற்கு முன் தமிழ் தினசரிகளும் வார இதழ்களும் சினிமா செய்தி என்ற பெயரில் வெளியிட்ட "படையப்பா" பட விளம்பரங்களுக்கு விளம்பரக் கட்டணத்தின் அடிப்படையில் கணக்கு போட்டால் பல கோடி ரூபாய் வரும்.

இவையன்றி "பட பூசையில் உடைத்த தேங்காய்க்குள் பூ இருந்ததனால் வெற்றி உறுதி" என்பன போன்ற சகுனச் செய்திகள்; "அரசியலுக்கு வருவதைப் பற்றி இந்தப் படத்தில் தெளிவாக அறிவிக்கப் போகிறார்" என்ற வதந்திகள்; படையப்பா படத்தை உலகெங்குமுள்ள பயங்கரவாதிகளை வைத்து ஜெயலலிதா தடுப்பதைப் போலவும் ரஜினி அதையெல்லாம் எதிர்த்து உயிரைப் பணயம் வைத்துப் போராடி: படத்தை வெளியிடுவது போலவும் கட்டுக் கதைகள்; படத்தின் கதை என்ன, கதாநாயகி யார் என்பது பற்றிய ரகசியத் தகவல்கள், புலனாய்வுகள்...

நந்திப் பிழைக்கும் பத்திரிகையாளர்கள் மூலம் ரஜினி கும்பல் திட்டமிட்டே உருவாக்கிய பரபரப்புகள் இவை.

ரஜனி ரசிகர் மன்றம்

உறுதிரியாக இருக்கும் ரசிகர்கள் மன்றமாக ஆக்கப்படுவதும், அவை பதிவு செய்யப்படுவதும், மாவட்டச் செயலாளர்கள் மேலேயிருந்து நியமிக்கப்படுவதும், அவர்கள் ஏதோ பன்னாட்டுக் கம்பெனியின் பிராந்திய அதிகாரி போல மாருதிக்கார் செல் ஃபோனுடன் அலைவதும் எதற்காக? கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்று ரஜினிக்கு கோடிக் கணக்கில் சுருட்டிக் கொடுத்து மிச்சம் மீதியைப் பொறுக்கித் தின்னவும்தான்.

ஒரு சாதாரண மனிதனின் பொது அறிவுக்கு எட்டக் கூடிய உண்மைதான் இது. ஆண்டுக்கு ஒரு படம் நடிக்கும் ஒரு நடிகரின் (இப்போது இரண்டு ஆண்டுக்கு ஒன்று) "அகில உலக" ரசிகர் மன்றத் தலைவர் சத்திய நாராயணன் மாவட்டந் தோறும் சுற்றுப் பயணம் செய்தபடி இருக்கிறாரே எதற்கு? குளம் வெட்டுவது பாடசாலை கட்டுவது. சாலை அமைப்பது போன்ற பணிகளில் ரசிகர் மன்றங்கள் ஈடுபட்டிருக்கின்றனவா. அவற்றை பார்வையிட இவர் சுற்றுப் பயணம் போகிறாரா?

படம் வராத காலத்திலும் கள்ளச் சந்தைத் தலைவர்களான மாவட்ட செயலர்கள் கலைந்து விடாமல் பார்த்துக் கொள்வது. அவர்களிடையிலான தகராறுகளுக்கு கட்டை பஞ்சாயத்து செய்வது. அன்னதானம், தையல் மிஷின், பாடப் புத்தக விநியோகம் போன்ற நாடகங்கள் மூலம் படம் வராத காலத்திலும் ரசிகர்களுக்குப் போதை இறங்காமல், கலைந்து விடாமல் பார்த்துக் கொள்வது இதுதான் அகில உலகத் தலைவரின் வேலை.

தமிழ்த் திரையுலகமே கஷ்டநிலையில் மூழ்கிக் கொண்டிருக்கும் போது ரஜினி படம் மட்டும் கோடி கோடி ரூபாய் குவிப்பதும் 50 நாள் ஓடிய படங்களெல்லாம் அசல் கூடத் திரும்ப வராமல் தடுமாறும் போது ரஜினி படம், போட்ட முதலையும் மூன்று மடங்கு இலாபத்தையும் முதல்நாள் வசூலிலேயே பார்த்து விடுவதும் இப்படித்தான்.

வரி ஏய்ப்புக்கு

அரசு உடந்தை!

மின்சார வரி கட்டவில்லையென்றால் மறுநாளே பியூஸ் கட்டையைப் பிடுங்கும் அரசு, கோடிக் கணக்கில் வரி ஏய்க்கும் ரஜினியிடம் எதைப் பிடுங்கப் போகிறது? "அளவுக்கதிகமாக ஆசைப்பட்ட ஆணும், அளவுக்கதிகமா கோபப்பட்ட பெண்ணும் நன்றாக வாழ்ந்ததா சரித்திரமில்லே" என்பது படையப்பாவின் கைத்தட்டல் பெறும் வசனம். 5 கோடி ரூபாய் முதல் போட்டு 100 கோடி கொள்ளையடிப்பது ரொம்பவும் அளவான ஆசை போலும்!

உதவுங்கள் - சரத்குமார்.

**தாலி அறுத்த காசில்**

**தருமம் செய்கிறார் எசமான்!**

படையப்பாவின் வருமானம் சிந்தாமல் சிதறாமல் தன் கைக்கு வந்து சேர வேண்டும் என்று ரஜினி இப்படி அரும்பாடு படுவதற்குக் காரணம் இருக்கிறதாம்.

"இந்தப் படத்தின் மூலம் வரும் வருவாயை வைத்து கல்வி அறக்கட்டளை தொடங்கப் போறதா அறிவிச்சிருக்கார் ரஜினி சார். இதன் மூலம் பணக் கஷ்டப்படுகிற ஏழை மாணவர்கள் கல்வி அறிவு



பெற முடியும். அவர்களின் குடும்பம் தழைக்கும். ரஜினி என்கிற நல்ல உள்ளத்திடம் உள்ள இந்த உன்னத எண்ணம் ஈடேறணும். அதற்காக இந்தப் படம் மாபெரும் வெற்றியடையனும்" (சத்திய நாராயணன் பேட்டி)

கந்து வட்டிக்கு கடன் வாங்கி, பெண்டாட்டி நகையை அடமானம் வைத்து, பாத்திரம் பண்டத்தை விற்று, வீட்டில் காசைத் திருடி... எதையாவது செய்து கள்ளச் சந்தையில் டிக்கெட் வாங்கி அந்த "நல்ல உள்ளத்திடம்" 100 கோடி ரூபாயைக் கொடுத்தால் அதை வைத்து அவர் ஏழை மாணவர்களுக்கு "உதவி" செய்வாராம்.

எவ்வளவு உதவி என்பதும் எல்லா பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்தில் வந்துவிட்டது. ஒரு மாவட்டத்துக்கு ஒரு இலட்சம் வீதம் 29 இலட்சம் ரூபாவை அள்ளிக் கொடுத்திருக்கிறார். 100 ரூபாய் திருடி 30 காசு இனாம். பழனி படிக்கட்டுப் பிச்சைக்காரனிடம் கையேந்தினால் கூட அதிகம் கிடைக்கும் இந்த 29 இலட்சம் தருமத்துக்கு பத்திரிகை செய்திகள் தந்த விளம்பரத்தின் மதிப்பு 30 இலட்சம் இருக்கும்.

ஒவ்வொரு திருடனும் கிடைக்கின்ற முதல் சந்தாப்பத் திலேயே வள்ளலாக மாற விரும்புகி றான். பிறகு வள்ளலோ அதிகார பூர்வமாக ஊரைக் கொள்ளைய டிக்கும் பொருட்டு விரும்பும் வள்ள லோ முதல்வராக விரும்புகிறான்.

"என் ஒரு துளி வியர்வைக்கு ஒரு பவுண் தங்கக் காசு கொடுத்தது தமிழல்லவா" என்று பாடுகிறார் படையப்பா. முற்றிலும் உண்மை! ஆனால், அந்தத் தங்கம் ஊர் தாலியறுத்த தங்கம்! ●

# கிழக்குமாகாண இன விகிதாசாரத்தில் பெரும்பான்மையினர் முஸ்லிம்களா? தமிழர்களா?

*(மூதூர் எம். அனஸ்)*

கிழக்கு மாகாணத்தில் வதியும் தமிழ், முஸ்லிம், சிங்களவர்களது இனவிகிதாசாரம் தொடர்பாக பல்வேறு தரவுகள், புள்ளிவிபரங்கள் அச்சு ஊடகங்கள் வாயிலாக அண்மைக்காலமாக வெளியிடப்பட்டு, மக்களைக் குழப்பிவிடும் முயற்சிகள் மிக லாவகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், 1. 'கிழக்கு மாகாண இன விகிதாசாரம் தொடர்பாக விசமப் பிரச்சாரம்', 2. 'கிழக்கு மாகாண இன விகிதாசாரம் தொடர்பான விசமப் பிரச்சாரம் - முஸ்லிம்களே பெரும்பான்மையினர்' 3. 'கிழக்கு மாகாணத்தின் தனிப்பெரும்பான்மை இனத்தவர்கள் தமிழர்களே' என்ற தலைப்புக்களில் மூன்று பத்திரிகைகளில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதல் தலைப்பில் எழுதியவரே இரண்டாவது தலைப்புத் தொடர்பாக மூன்றாவது தலைப்பிலும் எழுதியுள்ளார். எதிலும் தகவல்கள் வெளியான பத்திரிகையின் பெயர், தினம் ஏதும் இடம்பெறவில்லை. இதிலும் அவை இடம்பெறவில்லை.

முதல் தலைப்பில் கிழக்கு மாகாண இன விகிதாசாரம் பற்றி; 'குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் கிழக்குமாகாணத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் ஐந்து வீதமானவர்கள் கூட இருக்கவில்லை. அப்போது கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் 65சத வீதமாகவும், முஸ்லிம்கள் 30 சதவீதமாகவும் வாழ்ந்துள்ளார்கள் எனப் புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகிறது.' என எழுதிய கட்டுரையாளர்,

மூன்றாவது தலைப்பில், '1981ஆம் ஆண்டின் குடிசனக் கணக்கெடுப்பின்போது, கிழக்கு மாகாணத்தின் இனவிகிதாசாரம் தமிழர்கள் 67, முஸ்லிம்கள் 30, சிங்களவர்கள் 03 என்ற அளவிலேயே இருந்தது.' என்கிறார்.

தமிழர்களின் விகிதாசாரம் கிழக்கு மாகாணத்தில் வீழ்ச்சியடைந்தமைக்கு பெரும்பான்மையினரின் திட்டமிட்ட குடியேற்றமும் ஒரு காரணம் எனக்காட்டும் கட்டுரையாளரின் தரவுகளில், அத்தகைய வேறுபாடு எதனையும் காணவில்லை. ஆனால்

**கிழக்கு மாகாண சனத்தொகைப் பரம்பல் 1981**

| | அம்பாறை | வீதம் | மட்டக்களப்பு | வீதம் | திருமலை | வீதம் | மொத்தம் | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| முஸ்லிம் | 161.568 | 41.54 | 78.829 | 23.86 | 75.039 | 29.32 | 315.436 | 32.34 |
| தமிழ் | 79.237 | 20.37 | 237.789 | 71.98 | 93.132 | 36.39 | 410.158 | 42.06 |
| சிங்களம் | 146.943 | 37.79 | 11.255 | 03.41 | 85.503 | 33.41 | 243.701 | 24.98 |
| ஏனைய | 1.222 | 00.32 | 2.462 | 00.79 | 2.274 | 00.48 | 5.958 | 00.62 |
| மொத்தம் | 388.970 | 100.00 | 330.333 | 100.00 | 255.948 | 100.00 | 975.251 | 100.00 |

இத்தரவுகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே 1981 இன் குடிசனக் கணக்கெடுப்பின் மக்கள் தொகை வீதங்கள் காணப்படுகின்றன.

1961.04.10 இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கனிசமான நிலப்பரப்பு பிரித்தெடுக்கப்பட்டு, அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. 1921இன் கணக்கெடுப்பில் அம்பாறையையும் உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர் எவரும் இருக்கவில்லை. திருமலை மாவட்டத்தில் மட்டும் 250 பேர் இருந்துள்ளனர். 1963இன் கணக்கெடுப்பின்படி கிழக்கு மாகாணத்தில் 107.750 சிங்களவர்கள் வாழ்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. மட்டக்களப்பு -6680. அம்பாறை - 40.950. திருமலை - 60.120

எனவே, குடியேற்றத் திட்டங்களால் 1981க்கு முன்பே அதிகமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 1981 இன் மதிப்பீட்டின்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறே சனத்தொகை வீதம் காணப்பட்டது.

இது இவ்வாறிருக்க, மூன்றாவது தலைப்பில் 'கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்களின் எண்ணிக்கை பற்றி ஒவ்வொருவரும் தாம் நினைத்த படி கூறிவருகின்றனர். அண்மையில் மக்கள் கணக்கெடுப்பு ஏதும் நடைபெறாதபோதும் கூட புதிய கணக்கொன்று கூறப்பட்டுள்ளதாகக் கூறும் கட்டுரையாளரின் கருத்தை ஏற்கமுடியாதுள்ளது.



பதில் கட்டுரை

தனக்கும் தான் சார்ந்தோருக்கும் சாதகமாக தன் கருத்தை திணிக்க முற்படும் கட்டுரையாளர், 2001.07.17இல் நடந்த 13ஆவது குடிசன மதிப்பீட்டைப்பற்றி என்ன சொல்லப் போகிறார். 2001 ஜூன் 25 முதல் ஜூலை 05 வரை ஆரம்பக்கட்டக் கணக்கெடுப்பும், ஜூலை 17இல் இறுதிக் கணக்கெடுப்பும் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது யாவரும் அறிந்த உண்மை.

சில சுயநலவாத சமூக விரோத சக்திகள் இறுதிக் கட்டக் கணக்கெடுப்பை சில பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராமங்களில் நடாத்தவிடாமல் தடுத்ததற்கு 'அண்மையில் மக்கள் கணக்கெடுப்பேதும் இடம்பெறவில்லை' என்பவர் பற்றி என்ன சொல்வது.

2001இன் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 16.864.686 பேர்கள். இவர்களில் ஆண்கள் - 8.343.363 (49.22%) பெண்கள் -

**கிழக்கு மாகாண சனத்தொகைப் பரம்பல் 2001**

| | அம்பாறை | வீதம் | மட்டக்களப்பு | வீதம் | திருமலை | வீதம் | மொத்தம் | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| முஸ்லிம் | 245.089 | 41.58 | 118.473 | 36.13 | 137.453 | 38.76 | 496.015 | 39.38 |
| தமிழ் | 110.590 | 18.77 | 195.689 | 62.30 | 112.007 | 31.58 | 418.286 | 33.25 |
| சிங்களம் | 231.771 | 39.32 | 2.439 | 00.78 | 103.808 | 29.27 | 338.018 | 26.95 |
| ஏனைய | 1.894 | 00.33 | 2.487 | 00.79 | 1.285 | 00.36 | 5.666 | 00.46 |
| மொத்தம் | 589.344 | 100.00 | 314.088 | 100.00 | 354.553 | 100.00 | 1.257.985 | 100.00 |

8.521.324 (5.78%) பௌத்தர்கள் 12.936.950 (76.71%) முஸ்லிம்கள் 1.425.698 (8.45%) இந்துக்கள் 1.330.584 (7.89%) கத்தோலிக்கர்கள் 1.021.997 (6.06%) கத்தோலிக்கர் அல்லாதோர்கள் 140.483 (0.83%) ஏனையோர்கள் 8.975 (0.06%) எனக்காணப்படுகிறது.

மேலும் 'கிழக்கு மாகாண சனத்தொகையில் முஸ்லிம்கள் 41 வீதம் என்றும், தமிழர்கள் 30 வீதம் என்றும், சிங்களவர்கள் 29 வீதம் என்றும் ஒரு பிரமுகர் அறிக்கை விட்டுள்ளதாக' எழுதி, 'யார் இந்தக் கணக்கெடுப்பை எப்போது நடாத்தினார்கள்' என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இப்பந்தியில் குறிப்பிட்டது போலன்றி, அட்டவணையில் உள்ளவாறே கிழக்கு மாகாண இனவிகிதாசாரம் தற்போது காணப்படுகிறது.

இத்தரவுகள் யாவும் வடக்கு கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தின் 'புள்ளி விபரத் தகவல்கள் - 2002' திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் 'திருமலை மாவட்ட புள்ளி விபரக்கையேடு - 2002', திருகோணமலை மாவட்ட திட்டமிடல் செயலகப் பிரிவின் 'திருமலை மாவட்ட மீள்குடியேற்ற தகவல் கையேடு - 2002' என்பவற்றில் இருந்து பெறப்பட்டவையாகும். யார் இந்தக் கணக்கெடுப்பை எப்போது நடத்தினார்கள் என்று இவ் அறிக்கைகளைப் பார்வையிடுவதன் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

இதேவேளை இக்கட்டுரையின் மற்றொரு பந்தியில் 'அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகை இன அடிப்படையில் முஸ்லிம்கள் 41 வீதமும், சிங்களவர்கள் 29 வீதமும், தமிழர்கள் 20 வீதமும் என்பதே அண்மைய கணக்கெடுப்பின் முடிவு' என்று குறிப்பிடுவதன் மூலம் மேற்படி

தொடர் 10 ஆம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடி ஏன் நரைக்கிறது?

வயதான பிறகு முடி நரைப்பது இயற்கை. இது பார்ப்பதற்கு சற்று கம்பீரமாகவும் அழகாகவும் இருக்கும். மதிப்பையும் கொடுக்கும். ஆனால் தற்பொழுது பலருக்கு இளம் வயதிலேயே தலைமுடி நரைத்து விடுகிறது.

இளம் வயதில் தலைமுடி நரைப்பதை இளநரை என்று பெரியவர்கள் சொல்வது உண்டு. இப்படிப்பட்டவர்களுக்குச் சில நாள் கழித்து முடி மீண்டும் கருமை அடைவது உண்டு. ஆகையால் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நடுவயதை அடையும் போது தலைமுடி நரைக்க ஆரம்பமாகும். அப்போது பலர் வயதானவர்கள் போலத் தெரிவோமோ என்று கவலைப்படுவது உண்டு. அப்படிப்பட்டவர்கள் கண்ணாடி முன்பு உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு நரைத்த முடியையும் தேடிப் பிடித்து அப்புறப்படுத்துவதும் உண்டு. இது தவறான முறை. ஏன் என்றால் ஒரு நரைத்த முடியைப் பிடுங்கினால் பக்கத்தில் உள்ள மற்ற முடிகளும் நரைத்து விடும். வேறு சிலர் ஒன்று இரண்டு முடி நரைக்க ஆரம்பித்ததும் டை போடத் தொடங்கி விடுவார்கள். டையில் பயன்படுத்தும் இரசாயனப் பொருட்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றால், அலர்ஜி. மண்டைத் தோல் பிரச்சினை தலைவலி போன்றவை வரும். சிலருக்கு டை வெள்ளை முடி கருமையாவது ஒருபுறமிருக்க கருத்த முடியும் வெள்ளையாவது உண்டு. டை போடுவதில் கவனம் குறைந்தால் தலைமுடியில் வகை வகையான வண்ணங்கள் தோன்றும்.

### முடி நரைப்பதற்கு என்ன காரணம்?

தலை முடி நரைப்பதற்கு அடிப்படைக் காரணம் உண்ணும் உணவில் குறையா? இது பரம்பரையாக வருவதா? வசிக்கும் சூழ்நிலையா? என்ற சந்தேகங்கள் பலருக்குத் தோன்றும். தலைமுடி நிறத்தை நிர்ணயிப்பது "கோரெடெக்ஸ்" அடியில் உள்ள பிக்மெண்ட் கால்களில் இருக்கும் மெலானின். இந்த மெலானில் இருக்கும் "மெலானோ செல்ஸ்" காரணமாகத்தான் தலைமுடி கருப்பாக இருக்கும். இந்த மெலானிலேயும் சில வகைகள் உள்ளன. "யூமெலனின்" கருப்பு நிறத்தையும், பழுப்பு நிறத்தையும் உண்டாக்கும். ஃபியாமெலனின் கோதுமை நிறத்தையும், பொன் நிறத்தையும் உண்டாக்கும். "எர்த்ரோ மெலனின்" செம்பட்டை நிறத்தையும், சிவப்பு நிறத்தையும் உண்டாக்கும். இந்த பிக்மெண்ட் செல்ஸ்ல் இருக்கும் மெலனின் நோய்வாய்ப்பட்டால் முடி நரைத்துவிடும்.

முடி நரைப்பதற்கு மற்ற சில காரணங்கள் :

1. டைபோய்ட், மலேரியா போன்ற ஜுரங்கள்
2. இரத்த சோகை
3. நீரிழிவு நோய்
4. ஹைபர் தைராயிடிஸம்
5. தொற்று நோய்
6. கதிர்வீச்சு
7. மன இறுக்கம்
8. மன உளைச்சல்
9. பரம்பரை
10. வைட்டமின் சத்துக்குறைவு
11. தரம் குறைந்த எண்ணெயைப் பயன்படுத்துதல்
12. சில வகை ஷேம்புவை பயன்படுத்துதல்



### அதற்கான தீர்வுதான் என்ன?

1. எல்லாவற்றையும் விட மனம்தான் முக்கியம். இதுதான் எல்லாவற்றிற்கும் அடிப்படை. ஆகையால் மனதை அல்லல்படாமல் வைத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். முடிந்தால் மனதை ஒருமைப்படுத்தும் பிராணாயாமம் தியானம் முறைப்படி கற்று தினமும் செய்ய வேண்டும்.

2. யோகாசனங்களில் சர்வாங்காசனம் போடுவதால் நரை குறையும். மறையும் அது மட்டுமல்ல "தைரோய்ட்" சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறையும்.

3. உணவில் கறிவேப்பிலையை அதிகமாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

4. விட்டமின் "ஏ", "பி" வகையுள்ள உணவுகள், கீரை வகைகள் உட்கொள்ள வேண்டும்.

5. வெள்ளை முடியை பிடுங்கக் கூடாது. அப்படி அகற்ற வேண்டுமானால் கத்தரித்து எடுத்துவிடலாம்.

6. டையைப் பயன்படுத்த விரும்பினால் நன்றாக யோசித்து முடிவெடுக்க வேண்டும். அதனால் வரும் அலர்ஜி மண்டைத் தோல் பிரச்சினை போன்றவைகளைத் தடுக்க நீங்களே தயாரித்த "டை"யை பயன்படுத்தலாம்.

### வெள்ளை முடியை கருப்பாக இயற்கையான முறைகள்

நரைத்த முடியை கருமை நிறமாக்குவதில் மருதாணி முதல் இடம் வகிக்கிறது. மருதாணி என்றவுடன் பலருக்கு அது முடியை சிவப்பாக அல்லவா மாற்றிவிடும் என்ற சந்தேகம் ஏற்படலாம். உண்மைதான். வெறும் மருதாணியால் முடி சிவப்பாக மாறும். ஆனால் அத்துடன் சில மூலிகைகளைச் சேர்ப்பதால் முடி கருமையாக மாறுவது மட்டுமல்லாமல் கூந்தல் நன்றாக வளரும்.

### இயற்கையான டை தயார் செய்வது

அரைத்த மருதாணி மூன்று பங்கு, திரிபலா பொடி (கடுக்காய் நெல்லிக்காய், தாந்திரிங்காய் சேர்த்து மருந்துக்கடைகளில் கிடைக்கும்) ஒரு பங்கு, ஒரு எலுமிச்சம் பழச்சாறு இந்த மூன்றையும் கலந்து ஒரு இரும்புச் சட்டியில் போட்டு ஒரு இரவெல்லாம் ஊற வைக்க வேண்டும். காலையில் அதில் கொஞ்சம் தண்ணீர் விட்டுக்கலக்கி, கூந்தலுக்குத் தடவி மூன்று மணிநேரம் கழித்து தலைக்குக் குளிக்க வேண்டும். பத்து நாட்களுக்கு ஒரு முறை இப்படிச் செய்து வந்தால் விரைவில் கூந்தல் கருமையாக மாறும்.

### மற்றொரு முறை

மருதாணி, கரிசலாங்கண்ணி இரண்டும் சமமாக எடுத்துக் கொண்டு அரைத்து ஒரு மணி நேரம் ஊற வைத்து அதன் பிறகு தலை முடிக்குத் தேய்த்து மூன்று மணி நேரம் கழித்துக் குளிக்க வேண்டும். வாரத்திற்கு ஒரு முறை இப்படிச் செய்தால் முடி கருமை நிறமாகும். முடி கருமையாக மாற மருதாணி எண்ணெய் அல்லது நெல்லிக்காய் எண்ணெயைப் பயன்படுத்தினால் அல்லது இரண்டையும் சேர்த்துப் பயன்படுத்தினால் முடி வெள்ளையாக மாறாது.

# இப்படியும் சொன்னார்கள்!

### முஸ்லிம்கள் என்னதான் செய்ய வேண்டும்?



வடக்கு, கிழக்கு பிரிப்பு விடயத்தில் முஸ்லிம்கள் தவறிழைக்க மாட்டார்கள். வடக்கு, கிழக்கு மாகாணத்தை பிரிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு பெரும் பிரச்சினைகளை உருவாக்கக் கூடியதாகும். வடக்கு, கிழக்கை ஜனாதிபதியால் பிரிக்க முடியாது. வடக்கு, கிழக்கினை பிரிப்பதாகக் கூறி முஸ்லிம்களின் வாக்குகளை ஏமாற்றிப் பெறலாம் என சில சக்திகள் எண்ணுகின்றன. முஸ்லிம் மக்கள் இவ்விடயத்தில் ஒரு போதும் தவறிழைக்க மாட்டார்கள்.

### எந்த ஊரில் இருக்கிறார்?



அம்பாந்துறையில் இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமைக்கும் இரு இளைஞர்கள் காணாமல் போனமைக்கும் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித தொடர்புமில்லை. தற்போது பொலிஸ் சேவைக்கும் இராணுவச் சேவைக்கும் ஆட்களை சேர்ப்பதை கண்டிக்கிறேன்.

-அலீஸாஹிர் மௌலானா


# மொழிபெயர்ப்பாளர்கள் தேவை!

அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டுரைகளை மொழிபெயர் ப்பதற்கான தேர்ச்சிபெற்ற மொழி பெயர்ப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு
2. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு
3. சிங்களத்திலிருந்து தமிழுக்கு
4. தமிழிலிருந்து சிங்களத்திற்கு

மேற்கூறப்பட்ட வகையில் மொழிபெயர்ப்புச் செய்வதற்கான ஆற்றலும் தேர்ச்சியும் உள்ளவர்கள் உடன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

ஆகக்குறைந்தது மேலே கூறப்பட்ட 4 செயற்பாடுகளில் 2 செயற்பாடுகளைச் செய்யக்கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப இறுதித் திகதி 25 செப்டம்பர் 2003.

நான்கு செயற்பாட்டுப் பணிகளையும் செய்பவர் இருப்பின் அதிக முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு,

**Director,**
**Muslim Kural Publication,**
**181/1, Ananda Mawatha,**
**White Park, Colombo 10.**
**Tel : 0777 389127.**


# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

8

குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

## அத்தியாயம் 5

"டே கொறுக்கா! என்னடா சென்ன தலவரு? ஒன்னோடயெல்லாம் கதைக்கிறளவுக்கு என்ன கதடா அது? செல்லண்டா!'

ஒன்டுமில்ல ஹாக்கா! கூட்டத்துக்கு கொளும்புக்கு வெரச்சென்ன!'

'அட! அவ்வளவு பெரியாளா நீ? தலைவரு டெலிபோனுல கூப்பிர்ரளவுக்கு.... வேறென்டா சென்ன? நீ ஒண்டும் கதைக்கல்ல.... வாயில முட்டப்பனா?

'வேறொண்டும் செல்லல்ல ஹாக்கா! கூட்டத்துக்கத்தான் ஒங்களோட வெரச்சென்ன....'

தாடி மாஸ்டர் இடையில் புகுந்து-

மையத்து ஊட்டுல இவனுட்ட காசி ரெண்டாயிரம் குடுத்தல்லோ தலைவரு? அதுக்கு கணக்கு வழக்கு கேட்கக் கூப்பிட்டாரோ...ல்ல பள்ளிமுனை இளைஞர் அணி தலைவர் ண்டு...?'

'ல்ல சேர்! கூட்டத்துக்குத்தான்....' டெலிபோன் பிரமை இன்னும் நீங்கவில்லை.

'ம் செரி. தலைவருக்கும் செல நேரம்... தலை வேல செய்றல்ல. எங்கயோ கெடக்குற கொறுக்காப் புளியிட பேரனையெல்லாம் டெலிபோனுல கூப்பிர்ரதும்... எளஞருக்கு தலைவராக்குறதும்... வேன்லாம் பெரியாளா? வேனுக்கு என்ன தெரியிம்? டேய், கொறுக்கா! நோக்கு என்னயும் தெரியுமாடா? நோமிநேசன், பெலபாளி, அர்த்தால், இதெல்லாம் என்னண்டு தெரியுமாடா..... அவனுக்கு அப்பாக்காரிர மகள 'லைன்' அடிக்க மட்டுந்தான் தெரியும்.... க்ஹி...ஹி....' சிரித்தார் செய்லான் ஹாஜியார்.

'......' முத்துமுகம்மதுக்கு அவமானமாயிருந்தது.

'இன்னமும் ன்னா காலுக்க இரிக்கிற கலுமுனைக்கிப் போகத் தெரியா பேக்கயன் கொழும்புக்கு பொதுக் கூட்டத்துக்கு எப்பிடிப் போற... டேய், எப்பிர்றா கொளும்பு போற... கொழும்பு ஞ்சாலயா? ல்ல ஞ்சாலாயா?

கொழும்பு என்ன கலர் ண்டு செல்றா பாப்பம் முத்தும்மது?'

'தெரியா சேர்!'

செய்லான் ஹாஜியாரும் தாடி மாஸ்டரும் சிரித்தனர்.

'அப்ப...? தெரியாட்டி எப்பிர்றா போவாய் கொழும்புக்கு?'

'ஓங்களோட வெரச் சென்ன ஹாக்கா!'

'என்னோடயா? நீயா? செரி... பாப்பம்!'

'இடையில "தாட்ட பங்குல" எறக்கி உட்டாச் செரி!'

'...' முத்துமுகம்துக்கு ஆத்திரமாக இருந்தது. 'செரி நீ போ முத்தும்மது.'

செய்லான் ஹாஜியார் கட்டளையிட்டதும் முத்துமுகம்மது நடந்து வீடு வந்து சேர்ந்தான். வெறுந்தரையில் விழுந்து படுத்தான். சுல்தானின் பிஸ்டலும், மைமுனாவின் முத்தமும், தலைவரின் டெலிபோன் உரையாடலும், ஹாஜியாரின் நக்கலும் நினைவுகளில் அழுந்தி நிம்மதி இழக்க வைத்தன.

அடுத்த வாரமே கொழும்பு 'ஏஜென்ஸி' யிடமிருந்து மைமுனாவுக்கு தந்தி வந்து விட்டது.

'FLIGHT CONFIRMED ON 10[Th] COME IMMEDIATELY'

கொழும்பிலிருந்து சப்புச் சுல்தானும் இங்கே பள்ளிமுனை போஸ்ட்மாஸ்டருக்கு மைமுனாவைப் புறப்பட்டு வரும்படி பேசியிருந்தான்

அடுத்தநாளே கொழும்பு போக ஏற்பாடாகி, முத்து முகம்மது மைமுனா, மாமி, யாஸின் ஆகியோர் 'மையோன் மினி பஸ்'ஸில் ஏறினர். வாழ்க்கையில் ஒரு நாளும் கண்டேயிராத சொர்க்கமான கொழும்பு காணும் பேராவலும், செய்லான் ஹாஜியாரின் தயவு தேவைப்படாத பயண ஏற்பாடும் முத்து முகம்மதை மகிழ்வித்தாலும், மைமுனாவைப் பிரியும் மகாகவலை போட்டுக் குடைந்து கொண்டிருந்தது.

ஒரு நாளுமில்லாத பதிவை மணி நேர வாகனப் பயணம்! வழியெங்கும் பயத்துடன் தொல்லை தரும் இராணுவ, பொலிஸ் காவலரண்கள்... முகாம்கள்... ஏறி இறங்கல்கள்... பொதிக் குடைதல்கள்... பிரமாண்ட புத்தர் சிலைகள்... சிங்கள எழுத்துக்கள்.. விஷேட அதிரடிப் பெண்கள் மைமுனாவுடன் புன்னகைத்தனர். புரியாத சிங்களம்... அடையாள அட்டைகள்...



மஹஓயாவில் யாஸினுக்கும் மைமுனாவுக்கும் உப்புத் தண்ணீர் தெளித்த உடனவித்த சோளகம்... நவமெதகமவின் பதினெட்டு மலை வளைவுகள்... குளோரீன் தேநீர்... மலைவாழைப்பழம்... ஹஸின்னஸ்கிரிய நீர் வீழ்ச்சி... (பாருஹா லாத்தோவ்! பாருங்க முத்து மச்சானோவ்!!) கீழே அதல பாதாளம்... காதுகளில் 'டப் ப்ப்ப்ப...' பஸ்ஸினுள் எந்நேரமும் 'அரச்ச சந்தனம்... மணக்கும் குங்குமம்...' இடையிடையே நாகூர் ஹனிபா... 'பெரியார் பிலாலின் தியாக வாழ்வைக் கூறுவேனிதோ...'

மாமிக்கு கடுகண்ணாவையில் மலைவெற்றிலை.. அடிக்கடி காதலும் கண்ணீருமான மைமுனாவின் பார்வைகள் ... அருகிலேயே கொஞ்சதூரம் கூடவே ஓடி வந்த புகைவண்டி... உயரக் கட்டிடங்கள்... மனிதர்கள்.. வாகனங்கள்.. நெசரிசல்கள்... கட்சிக் கொடிகள்.. மகா அலுப்பாக 320 கிலோ மீற்றர்கள்.... எங்கும் வர்ணவிளக்குகள் பளீரிட்டு மினுமினுங்க கொழும்பின் ஆரம்பங்கள் பிரமிப்புடன் தென்பட....

'கொழும்பு மாநகர சபை தங்களை வரவே...'ற் கிடையில் கடந்து புகுந்து மூச்சுத்திணறி மருதானை 'யூக்கே லொட்ஜ்' வாசலில் பஸ் நின்றதுமே... வாயிற் கதவருகிலேயே... சப்புச் சுல்தான்!

அட, அடிடாஸ் காற்சட்டையும் ரீ சேர்ட்டும், தொப்பியுமணிந்து கொழும்புவாசி போல நின்றிருந்தான்... சிரித்தான்!

'வாங்க.. மாமி! மைமுனா.. வந்துட்டிங்களா... எப்பிடி 'ரவல்?'

'...ம்மா.. மய்.. இடுப்புர பாடு பெய்த்துரா மனே...'

'அட! வா.. தலைவரு...? நீயும் வந்துட்டியா... எக்கா மாமி, வேன் முத்தும்மத ஏங்கா கூட்டிட்டு வந்த... சும்மா தேவல்லாம...'

'அவன் கொழும்பும் யாப்போட்டும் பாக்கனுமாம்'

'ல்லல்ல.. நான் தலைவர சந்திக்கத்தான் வந்த!'

'செரி வாங்க' மொதல்ல ஒரு டீ அடிச்சிட்டு லொச்சிக்கி போவம்'

பிரமிப்புடன் பின்தொடர்ந்தனர். சப்புச் சுல்தான் மைமுனாவின் பெரிய பெட்டியை வாங்கிக் கொண்டான். முத்துமுகம்மது வெறுப்புடன் அதை அனுமதித்து சப்புச்சுல்தானின் ஆடைக்கோலத்தை பொறாமையுடன் கண்காணித்தான். தன் பச்சைவடச் சாறனையும் கிராமிய எண்ணெய்த் தலையையும் எண்ணி பச்சாதாபமாய் நடந்தான்.

கமகமவென்ற சாம்பிராணிப் புகையினூடே இட்லியும் சாம்பாரும் 'விநாயகர் கபே'யில் மலிவாக முடித்துவிட்டு மறுபடி லொட்ஜுக்குத் திரும்பினர். சப்புச் சுல்தான் மாமியிடமும், மைமுனாவிடமும் கொழும்புத் தமிழில் உரையாடி வந்தான். முத்துமுகம்மது வாய்திறக்கவில்லை. ஒன்றும் பிடிக்கவுமில்லை. மைமுனாவை சப்புச்சுல்தான் நடக்கும் போதே உரசுவதாகவும்பட்டது.

யூக்கே லொட்ஜின் மேல்மாடியில் சப்புச் சுல்தான் அறை எடுத்திருந்தான். 8ம் 9ம் எண் அறைகள். எட்டில் மைமுனாவும், மாமியும், யாஸினும் ஒன்பதில் சப்புச்சுல்தானுடன் முத்துமுகம்மதும் தங்குவதாக தீர்மானமாயிற்று.

குளோரின் நீரில் குளித்து உடைமாற்றி பார்சல் எடுத்து சாப்பிட்டனர். எல்லாம் சப்புச் சுல்தானின் செலவுதான். சிங்களக் கூலிப் பையன்கள் அவனை 'மஹத்தயா, மஹத்தயா' என்று அழைத்த போதெல்லாம் முத்துமுகம்மதுக்கு கோபமாயிருந்தது. பின் பொக்கட்டிலிருந்து சுல்தான் அவ்வப்போது மணி பேர்சை எடுத்து விர்.. விர்ரென்று ரூபாய் நோட்டுக்களாகப் புழங்கியது பொறாமையாக இருந்தது.

"மாமி, மைமுனா, கவனமாக கேளுங்க! நாளைக்கு பத்து மணிக்கு "பெட்டா"க்கு போய் மைமுனாக்கு "மெடிக்கல்" முடிக்கணும். ஒடன ஏஜென்ஸிய சந்திக்கனும். இன்சுரன்ஸிக்கி காசி கட்டனும். பேங்குல எக்கௌண்டு தொறக்கனும். வேல தலக்கி மேல இரிக்கி. அங்க ஞ்ச வஸ்ஸில ஓடித்திரியயேலா... ஒரு ஆட்டாவ வாடகைக்கி எடுப்பம். காசி கொண்டாந்தையா மாமி?"

"ரெண்டாயிரம் ரூவா இரிக்கியாப்பா!" என்றாள் மாமி.

"செரி, ஆயிரத்தக் கொண்டா! அங்க "ஞ்ச டக்குடக்குண்டு" செலவு வெரும். செரி பாப்பம். மறுகா, இது கொழும்பு. ஆட்டாவுல மூணு பேருக்கு மேல ஏத்தமாட்டான். நானும் மாமியும் மைம்னாவும் போவம். முத்தும்மது வெரத்தேவயில்ல. யாஸினுக்கு காவலா ஞ்ச ரூமுல இரிக்கட்டும்.

'ல்ல, முத்து மச்சானும் வெரட்டும்' உடன் குறுக்கிட்டாள் மைமுனா.

'அப்படியெண்டா ரெண்டு 'ஆட்டா' வேணும். செலவு கூட!'

'ஒரு ஆட்டா காணும். சும்மார்ரி மைம்னா! முத்தும்மதும் யாஸினும் ஞ்ச இருக்கட்டும். நான் பெத்த தாய் இருக்கன்தானே ஒன்னோட! மறுஹா என்ன... சும்மாரி!

'செரி படுங்க எல்லாரும் நாளக்கி பாப்பம்! தலவரு, வா!'

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் வளர்ச்சியும் மேம்பாடும் பற்றியது

மு.இ.சித்தி றபீக்கா, சம்மாந்துறை



முக்கியமாக பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் அளந்தறிய முடியாப் பாசமும், நேசமும் உண்டு. இவை கிடைக்காத போதே பிரச்சினை. எதிர்காலத்தின் சிறந்த சமுதாய உருவாக்கத்திற்கு இன்றைய குழந்தைகளின் வளர்ச்சிக் கண்காணிப்பிலும் மேம்பாட்டிலுமே தங்கியுள்ளது என்பதை யாமறிந்தாக வேண்டும். அதனடிப்படையில் குழந்தைகளின் வளர்ச்சி மேம்பாட்டிலே பின்வரும் விடயங்களை முதலில் விளங்க வேண்டுமெனக் கருதுகிறோம்.

1. சிறுவர் மேம்பாட்டின் கட்டங்கள்

2. குழந்தை வளர்ச்சி, மேம்பாடு என்பற்றின் விளக்கம்

3. இயல்பான ஆரோக்கியமான குழந்தை வளர்ச்சிகளின் விளைவுகள்.

4. குழந்தையின் விருத்தியைப் பாதிக்கும் அம்சங்கள்

5. குழந்தைகளின் பருவக் காலகட்டங்களின் வளர்ச்சிக் கவனிப்புகள். குழந்தைகளின் வளர்ச்சி மேம்பாட்டின் பிரதான பகுதிகள் ஐந்தினையும் விளக்கும் பகுதிக்கு இப்போது செல்கிறேன்.

1. சிறுவர் மேம்பாட்டின் பாகங்கள் வளர்ச்சி மாற்றம் - குழந்தையின் கலங்களின் உருமாற்றம் மற்றும் சூழலை இனங்காணும் வளர்ச்சி நிலையடைதல்

+ பேச்சு - தொடர்பாடல் - குழந்தை தனது மழலை மொழியில் கருத்துக்களை வெளியிடும் ஆற்றலைப் பெறும் சூழலுக்காகுதல்.

+ கற்றல் - குழந்தை தன்னைச் சூழவுள்ள உலகைப் பற்றி அறிவதோடு தம் புலன்கள் மூலம் பயன்படுத்தும் சந்தர்ப்பம் பெறல்.

+ சுய நகர்வுக்காதல் - சூழலில் முற்று முழுதாகத் தங்கி இருத்தலை (பெற்றோர்) விட்டும் தன் ஆற்றலை இனங்காணும் நிலைக்காதல் (பாடசாலை செல்லும் ஆயத்தம்)



+ சமூகப் பணியை ஏற்றல். சமுதாயத்தில் தன் இனங்காட்டலுக்கு சமூக நியதிகளுக்குள் தன்னைக் கற்றுக் கொள்ளும் சூழ்நிலையோடு பொறுப்புக்களையும் அவதானங்களையும் சமூகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளல்.

மேற்படி சிறுவர் மேம்பாட்டின் பாகங்களில் ஒவ்வொன்றிலுமே உளவியல் மற்றும் எம் பொறுப்புக்கள் தமக்கான கடமைகள் இதர வளர்ச்சிப் படிகள் எனும் பல கட்டங்களுக்குள் செல்ல வேண்டியிருக்கிறது. ஆரோக்கியமான குழந்தை வளர்ச்சிக் கட்டங்கள் இடையே மிக நுண்ணிய தாண்டல்களை சூழலிலுள்ள பொறுப்பாளர்கள் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது.

## புகழ் பெற்ற ஜோக்ஸ்



### சோம்பேறி விரும்பும் பெண்

பெரியவர் ஒருவர் ஆற்றங்கரை ஓரமாக வந்து கொண்டிருந்தார். அங்கே ஒருவன் தூங்கி விழித்தபடி தூண்டில் போட்டுக் கொண்டு இருந்தான்.

தூண்டில் தக்கை நீருக்குள் அமிழ்வதைக் கண்ட அவர், "உன் தூண்டிலில் மீன் சிக்கியுள்ளது வெளியே இழு" என்றார்.

"ஐயா! நீங்களே அந்த மீனை வெளியே இழுத்து எனக்கு உதவி செய்யுங்கள்" என்றான் அவன்.

அவரும் தூண்டிலை இழுத்தார். அதில் பெரிய மீன் சிக்கியிருந்தது. "நல்ல பெரிய மீன்" என்றார் அவர்.

"ஐயா! தயவு செய்து தூண்டிலிலிருக்கும் மீனை எடுத்துப் பக்கத்தில் இருக்கும் கூடையில் போட்டு விடுங்கள்" என்றான் அவன்.

அவரும் அப்படியே செய்தார்.

"ஐயா! உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும் இங்கே இருக்கும் புழுவைத் தூண்டில் முள்ளில் கோர்த்துத் தண்ணீரில் போட்டு விட்டுச் செல்லுங்கள்"

"மீண்டும் மீன் பிடிக்க நினைக்கிறாய். நல்லது அப்படியே செய்கிறேன்" என்ற அவர் தூண்டில் முள்ளில் புழுவைக் கோர்த்து நீரில் போட்டு விட்டு கழியை அவன் கையில் கொடுத்தார்.

"நீங்கள் நல்லவர்" என்றான் அவன்.

"நான் பார்த்ததிலேயே பெரிய சோம்பேறி நீதான். யாரையாவது திருமணம் செய்து கொண்டு ஒரு மகனைப்பெற்றெடு. அந்த மகன் உன்னுடன் வருவான். தூண்டிலில் புழு கோர்ப்பது. மீனைக் கூடையில் போடுவது போன்ற எல்லா வேலைகளையும் செய்வான்" என்றார் அவர்.

"நீங்கள் சொல்வது நல்ல யோசனைதான். நான் திருமணம் செய்து கொள்வதற்குக் கற்பிணியான ஒரு பெண் வேண்டும். எங்காவது கிடைப்பாளா? சொல்லுங்கள்" என்று கேட்டான் அவன்.

# எங்கே செல்கின்றன நமது பாதைகள்

இந்நிலையில் மீள் குடியேற்றம் சென்று வாழ்தல் என்பது சாத்தியப்படக் கூடிய நிகழ்வுகள் அல்ல.

மோசமாய் போயுள்ள சமுதாய சூழலில் சகல சுய நிர்ணய உரிமைகளுடன் மீண்டு போய் வாழ்தல் என்பது இன்றைய நாளில் மிகவும் சந்தேக மனசுடனேயே அதிலும் அச்சம் கலந்த பீதியுடனேயே நோக்க வேண்டியுள்ளது.

வன்னியிலும், திருகோணமலையிலும் தமிழ் சகோதரர்களை மீள்குடியேற்றி ஓர் ஒத்திகை பார்த்தார்கள். அதுவும் சாத்தியப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளின் பிரதேச எல்லைக்குள் குடியேறியோரின் நிலைமை எப்படி என்று நாமறியோம். ஆனால், அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வாழச் சென்றோருக்கு எதிர்பார்ப்புகள் பிழைத்துப் போனதாகவே அறிகிறோம்.

இந்தக் கட்டத்தில்தான் மீண்டுபோய் வாழ்தல், முஸ்லிம்களுக்கு ஏற்றதாய் இருக்கின்றதா என நாம் சிந்தித்தல் வேண்டும். நமது இருந்த இடம் தெரியாமல் காடு வளர்ந்து போய் உள்ள நில புல சொத்துக்களில் எதன் மூலம் நமது பிரகாசத்தையும், ஆறுதலையும் காணமுடியும்?

இரவுபட்டால் யானைகளும், காட்டுப் பன்றிகளும், கபளீகரம் பண்ணும் பூமியில் உருப்படியாய் எந்தவிதப் பேச்சுக்களின் போதும் அகற்றப்படாத இப்பிரதேசங்களில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கன்னி வெடிகளின் அச்சுறுத்தல் வேறு விதமாய் பயமுறுத்தி மரணத்தைத் தருவதற்கு காத்திருக்கிறது. இந்தக் காடுகளாகி மண்டியிட்டுக் கிடக்கும் கிராமங்கள் பற்றி வாசகர்கள் நாம் வெறும் கற்பனையில் எழுதுவதாக யாரும் கருதி விடக்கூடாது.

இரு மாதங்களுக்கு முன்னர் எமது குடும்பத்தோடு ஊர் பார்க்கப் போயிருந்தோம். 8000 ரூபாவுக்கு வாகனம் ஒன்றை கூலிக்கு அமர்த்தி புத்தளத்திலிருந்து வெளிக்கிட்டோம். ஊருக்கு கிட்டவுள்ள பாதைகள் உடைந்துதான் கிடந்தன. பழகிய தென்னைகள், விதைப் போட்டு வளர்த்த (பனைமர) வடலிகள், செம்மண் தரையெங்கும் அப்பிக்

**விடத்தல் தீவு றுஸ்தா — அங்கம் 6**

கிடந்த சோகாஞ்சலிகள் உள்ளத்தைக் கரைத்த உருக்குலைந்த தேசத்தில் எமது ஆத்மாக்களின் உச்சியிலிருந்து எந்தக் கீர்த்தனமும் தோன்றாத தருணத்தில் எங்கு பார்த்தாலும் ஒரு புதுவகையான காடுதான் வளர்ந்திருந்தது. இது இயற்கையாய் வளர்ந்ததா? அல்லது விதைகளாய் வீசப்பட்டதால் வளர்ந்துள்ளதா? என நம்ப முடியவில்லை. நாங்கள் வாழ்ந்த பரம்பரை வீட்டைக்கூட கண்டு பிடிக்க முடியாமலேயே போய் விட்டது. காட்டு மிருகங்களும், கால் நடைகளும், நடை சென்ற ஒற்றையடி பாதைகளில் முள் கொப்புகளைக் கைகளால் விலக்கியவாறு ஒரு சில வீடுகளை அடையாளம் காணமுடிந்தது.

நாங்கள் வெளிக்கிட்டு வந்த போது அழுது கண்ணீர் வடித்து, சதை மீனாய் பொரித்துத் தந்த நேசத்துக்குரியவர்களையும் காணமுடியவில்லை. ஊரில் எஞ்சியிருக்கும் மிச்ச சொச்சங்கள் உருமாறிப் போய் வறுமையுடனும், விரக்தியுடனும் வாழ்க்கையின் மிகுதியை வாழ்ந்து கழிப்பதாகவே காணமுடிந்தது.

கைவிடப்பட்ட வாழ்க்கையில் கறுத்துப் போன முகங்களாக அவர்களின் வாழ்க்கையும் துன்பத்திலேயே கழிந்து கொண்டிருக்கின்றன. மிகவும் பலமான அறிவுச் சேனையை வளர்த்தெடுத்த முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பல கட்டிடங்கள் வீழ்ந்து சிதைவுற்று கிடந்தன. நெஞ்சை உருக்கும் நிலையாய் வணக்கஸ்தலங்களின் நிலமை இருந்தன. (வடக்கில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்களில் பல அழிக்கப்பட்டுள்ளன).

கவலையையும் ஏற்படுத்தும் போது ஊரில் எல்லா வசந்தங்களும் வீழ்ச்சி கண்ட பிற்பாடும் வடக்கு நோக்கி எந்த நம்பிக்கையுடன் மீண்டும் போய் வாழ்வது? எத்தனையோ உயிரிழப்புகளையும், சொத்திழப்புகளையும் எதிர்கொண்டும், சொந்தப் பிரதேசங்களில் அடங்கிப் போயுள்ள அடக்கஸ்தலங்களையும் காண முடியவில்லை.

## வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த வாழ்க்கை



ஒரு சமுதாயத்தின் வாழ்தலுக்கு அனுகூலமும் அடையாளமுமாக வணக்கஸ்தலங்களே மிளிர்கின்றன. அந்த ஆதாரப் பொக்கிஷங்களும், நல்லடியார்களின் அடக்கஸ்தலங்களும் தனிமைப்படுத்தப்பட்ட பிறகு இருண்டு கிடந்த நாட்களில் அவ்லியாக்களின் (இறை நல்லடியார்களின்) கபுறுகளையும் அசிங்கப்படுத்த முயன்றோரும், அதன் மீது மனிதத்தன்மை கூட இன்றி உடைத்தெறியப்பட்டிருப்பதும் மார்க்க ஒழுங்குகளும் சொல்லிக் கொடுக்கும் மத்ரஸாக்கள் உடைந்து மனச் சோர்வையும்

இந்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தக்காலத்தில் வடக்கிற்கு சென்று வந்த முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் மத்தியில் சமாதான காலகட்டத்திலும் அச்சத்துடனேயே செல்ல வேண்டியுள்ளதாக அவர்கள் மூலமாக அறியக் கிடைக்கிறது.

உண்மையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி வடக்கு முஸ்லிம்களுக்கு எப்படிப்பட்ட தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் நோக்குதல் வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் தலைவர் என்போர் வன்னி சென்றதும், பேச்சுவார்த்தை மகாநாடுகள் நிமித்தம் வெளிநாட்டு பயணங்கள் சென்று களைத்துப் போனது தான் மிச்சமாகி விட்டதா? வடக்கு முஸ்லிம் சமூகத்துக்காக இவர்களால் எதனை சாதிக்க முடிந்தது. இந்த மக்களின் கண்ணீரை துடைக்கத் தெரியாதவர்கள் எப்படி ஆறுதலையும், ஆழுமையையும் கொடுக்கப் போகிறார்கள்.

*(பயணம் தொடரும்)*

# நன்றி மறவாத நாயகன்... இந்த கலீல் நானா!

## நடந்த கதையின் நகல்

முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்து வரும் அந்தப் பகுதியில், ஒரு காலத்தில் தென்னிந்தியாவின் கேரளம் மாநிலத்தின் "மலையாளி"கள் பெருவாரியாக வாழ்ந்து வரலாயினர். மலையாள இந்துக்களும், முஸ்லிம்களும் அதில் அடங்குவர். அவர்களில் ஒருவர்தான்...

இந்த குஞ்சு நைனார்...

இவருக்கு அந்தப் பகுதியில் தேனீர் கடையொன்று இருந்தது. சுபஹூக்கு பாங்கு சொன்னதுமே, இந்த குஞ்சு நைனார் தேனீர் கடையை திறந்திடுவார். சாம்பிராணி புகையும், பத்தி எரியும் வாசனையும் கடையருகில் நடந்து செல்வோரை திரும்பிப் பார்க்க வைக்கும்.

அவரது கடைக்கு பெயர்ப் பலகை

**-அபு ருஸைக்-**

எதுவுமில்லை. ஆனால், அப்பகுதி மக்களுக்கு "குஞ்சு நைனார் கடை" என்றால் தெரிந்துவிடும். அந்தளவிற்கு பிரசித்தமான கடை அது!

"குஞ்சு நைனார் கடைக்கு" வேலை செய்ய வரும் தொழிலாளிகள் எவருமே நிலைப்பதில்லை. ஓரிரு மாதங்களில் விலகிச் செல்ல... வேறு தொழிலாளிகள் வருவர்; வேலை செய்வர். ஆனால் - சுமார் பதினைந்து வயது பையனாக - மலையகத்தின் தலவாகெல்ல ஊர்வாசியாக வந்து சேர்ந்த அந்தத் தமிழ்ப் பையன் மட்டும் நிலைத்து விட்டான்...

குஞ்சு நைனார், வேலை செய்வதில் சிப்பந்திகள் ஏதும் தவறு செய்துவிட்டாலோ...கண்டபடி மலையாளம் கலந்த தமிழில் கத்துவார்; ஏசுவார்.. இப்படி ஏசுவதுதான், தொழிலாளிகள் நின்று நிலைக்காமல் விலகிச் செல்ல காரணம் என்பார்கள். ஆனால் - இந்தத் தமிழ்ப் பையனோ... வந்த காலத்திலிருந்தே முதலாளி ஏசுவதை - கத்துவதை - விமர்சிப்பதை கேட்டு கோபப்படாமல், "தனக்கு எல்லாமே முதலாளிதான்" என்று, அந்தக் கடையிலேயே பெயர் பதித்து விட்டான்...

முதலாளி எப்படி ஏசுவார்; எதற்காக ஏசுவார்; எப்போது சாப்பிடுவார்; எப்போது தூங்குவார்; பள்ளிக்குத் தொழ எந்தெந்த நேரங்களில் போய்வருவார் என்று முதலாளி பற்றிய எல்லா விஷயங்களையும் இந்தத் தமிழ்ப் பையன் தெரிந்தும் - புரிந்தும் வைத்திருக்கிறான்...

குஞ்சு நைனார்... சின்ன வயசிலேயே இலங்கை வந்தவர். அதனால் தென்னிலங்கையில் ஒரு முஸ்லிம் கிராமத்தில் ஒரு ஏழைப் பெண்ணை மணந்தார். ஒரேயொரு பெண் குழந்தை மட்டுமே, குஞ்சு நைனாரின் வாரிசாகப் பிறந்தது. மாசத்திற்கு ஒருமுறை மனைவியின் வீட்டுக்குப்போய்,



ஓரிரு நாட்கள் தங்கிவிட்டு வருவார். மனைவியின் செலவுக்கும், மகள் கிடைத்தபின் மகளின் செலவுக்கும் தவறாமல் குஞ்சு நைனார் பணம் அனுப்பி விடுவார்.

எத்தனையோ தொழிலாளர்கள் வந்தும், விலகிச் சென்றும், இந்தத் தமிழ்ப் பையன் மட்டும் விலகிச் செல்லாமல், முதலாளியுடன் ஒட்டி வாழ்ந்ததால், முதலாளியின் மனைவி - மகள் பற்றிய எல்லா விஷயங்களும் நல்ல பரிச்சயம். சில வேளைகளில் முதலாளி இந்தத் தமிழ்ப் பையனிடம் மனைவிக்கு பணம் அனுப்பி வைத்ததுமுண்டு.

நாளடைவில் மனைவி நோய்வாய்ப்பட்டு, எதிர் பாராமல் கண்ணை மூடி விட்டாள். குஞ்சு நைனார் இடிந்து போனார். மகளை கொழும்புக்குக் கூட்டி வந்து, தன் கடையில் வைத்துக் கொள்ளவும் முடியாது. பன்னிரண்டு வயது நிரம்பிய மகள், இன்றோ... நாளையோ மகள் ருதுவாகி விடுவாள் என்ற எதிர்பார்ப்பும் இருந்ததால், மாமியுடனே, உம்மம்மாவுடனே வாழ்ந்துவர அனுமதித்தார். மனைவி இறந்து போனாலும், மாதாந்தம் மகளுக்கும் - மாமி வீட்டாருக்கும் பணம் அனுப்ப, இந்த குஞ்சு நைனார் மறப்பதில்லை.

எதிர்பார்த்தபடியே மகள் பெரிய மனுஷியாகி விட்டாள். படிப்பை இடை நிறுத்திவிட்டு, மாமியுடனே வாழும்படி செய்துவிட்டார்... முதலாளி!

நாட்கள் ஓடின. மனைவி இறந்து ஐந்து வருடங்களாகி விட்டன. தமிழ்ப் பையன் கடைக்கு வந்து பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டன. தமிழ்ப் பையன் இப்போது வாலிப மிடுக்கில், அந்தக் கடையின் கெஷியராகி, "குட்டி முதலாளி" எனக் கூறுமளவிற்கு நம்பிக்கையை வளர்த்த வாலிபனாக உயர்ந்து விட்டான்.

திடீரென ஒருநாள் இரவு முதலாளிக்கு மாரடைப்பு வந்தது. குட்டி முதலாளி உடனே கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று 'எட்மிட்' பண்ணினான். இறைநாட்டம் போல் மறுநாள் பகலில் முதலாளி இறந்துவிட்டதாக ஆஸ்பத்திரியிலிருந்து செய்தி வந்தது.

முதலாளி வருடாந்தம் தவறாமல் மௌலூது ஓதி, கந்தூரி நடத்துவார். இதனால் பகுதி பள்ளிவாசலின் பேஷ் இமாம், முஅத்தின் எல்லாருமே குட்டி முதலாளிக்கும் நன்கு பழக்கம். பள்ளிவாசலுக்குப் போய் முதலாளியின் இறப்பு குறித்து சொன்னான். முதலாளியின் விருப்பம் போல, கொழும்பிலே - குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்தான்.

குஞ்சு நைனாரின் கதை முடிந்துவிட்டது. இப்போது என்ன செய்வது?

கடையை உரிமை கொண்டாட, தென்னிலங்கையிலிருந்து, மனைவி வழியில் எவருமில்லை. எந்த ஆண்வாரிசுமில்லை. மாமியோ ஏழைக்கிழவி. இருபத்தைந்து வயது வாலிபனாகிய குட்டி முதலாளியான தமிழ்ப் பையன் என்ன செய்வான்? என்னதான் செய்ய முடியாது? தன் பெயருக்கு கடை விஷயங்களை மாற்றிக் கொண்டாலும், கேட்பார் எவருமில்லை. அதாவது 'ஜில்மால்' செய்து, கடையை தனதாக்கிக் கொள்ள முடியும். முதலாளியின் மகளோ உம்மம்மாவை கவனித்துக் கொண்டு, இறந்துபோன பெற்றோரை நினைத்தபடி வாழ்ந்துவரும் வண்ணக்குமரி. அவளால் கொழும்பிலுள்ள தேனீர்கடையை என்னதான் செய்ய முடியும்.?

அப்படியானால் தமிழ் இளைஞனுக்குத்தான் சுவிப் விழுந்தமாதிரி வாய்ப்போ? வாசியோ?

ஆனால்... நடந்தது என்ன தெரியுமா? தமிழ்ப்பையன் - தமிழ் இளைஞன் கொழும்பு தெரியாமல் வந்த தன்னை ஆளாக்கிய முதலாளி குஞ்சு நைனாரின் அடிச்சுவட்டை பின்பற்றியொழுக தீர்மானித்தான்.

ஆம்... இஸ்லாத்தைத் தழுவி "கலீல்" ஆனான். நேரே முதலாளியின் மகளையும் - மாமியையும் காண, அந்த தென்னிலங்கை முஸ்லிம் ஊருக்குப் போனான். காணவேண்டிய இரு பெண் ஜென்மங்களையும் கண்டான்.

"மாமி... மகள்... நான் இஸ்லாத்தை தழுவிட்டேன். என் பெயர் இப்போது கலீல். எனது தந்தை மர்ஹூம் குஞ்சு நைனார்தான். அவர் மகள் என் தங்கை. நீங்கள் இருவரும் எதுக்கும் கவலைப்பட வேண்டாம். என் தந்தையாக நான் மதிக்கும் என் முதலாளி செய்துவந்தவைகளை நானும் தொடர்ந்து செய்வேன்." என்றவன் சற்றே நிறுத்தி மீண்டும் தொடர்ந்தான்.

"தங்கச்சிக்கு நல்ல மாப்பிள்ளையா பாருங்க... கல்யாணத்தை நாம சிறப்பாக செய்திடுவோம். நான் இன்ஷாஅல்லாஹ் செய்வேன்..." என உறுதியாக சொன்னான் கலீல்.

நாளாவட்டத்தில் கலீல் தன் தங்கையாக வரித்துக் கொண்ட முன்னாள் முதலாளி மகளுக்கு மணஞ் செய்து வைத்தான். வருடாந்தம் மௌலுது ஓதி, சிறப்பாக கந்தூரி கொடுத்து, முதலாளி பெயரில் கத்தம் ஓதி வரலானான். இப்போதும் மௌலூது - கந்தூரி - கத்தம் தொடரவே செய்கிறது.

கடை இருக்கும் அதே பகுதியில், ஒரு நடுத்தர முஸ்லிம் குடும்பப் பெண்ணை நாளாவட்டத்தில் கைப்பிடித்தான் கலீல். பிள்ளைகள் பிறந்தன. மூத்தது பெண் குழந்தை. கால ஓட்டத்தில் தன் மகளையும் கரையேற்றிவிட்டான் கலீல்.

சந்ததி மாறிவிட்டது. "கலீல் நானா" என்றே எல்லோரும் அழைக்கின்றனர். பழைய கதை தெரிந்தவர்கள் ஒரு சிலர் மட்டுமே!

எப்படியும் ஒரு ஹஜ் செய்துவிட வேண்டும் என்ற கனவில் இறைவனின் அழைப்பை எதிர்பார்த்தபடி, அந்த கெஷியர் பட்டறையில் இருக்கிறார் கலீல் நானா. கலீல் நானா போன்று இன்னும் எத்தனை நன்றியுள்ள நாயகர்கள் நம் சமூகத்தில் இருக்கிறார்களோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலமாக்களுக்கும் அரசியலுக்குமிடையே இடைவெளி கிடையாது!

**அண்மையில் நீங்கள் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றீர்கள். ஜம்மியதுல் உலமாவும் இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களும் இணைந்து எதிர்காலத்தில் ஆற்றவேண்டிய பணி என்னவென்று நீங்கள் அடையாளம் காணுகின்றீர்கள்?**

அகில இலங்கை ஜம்மியதுல் உலமா கடந்த ஜூன் மாதம் ஏழாம் திகதி நடைபெற்ற எங்களுடைய மத்திய சபைக் கூட்டத்தின்போது அதனுடைய தேசியப் பொதுச் செயலாளராக ஏகமானதாக என்னை தெரிவு செய்ததற்காக அல்லாஹ்வுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொதுவாக முஸ்லிம் சமூகத்தை ஜம்மிய்யா வழிகாட்டும் விடயத்தில் தீர்க்கமான திட்டம் ஒன்றை வகுத்துக்கொண்டுள்ளது. அந்த வகையில் முஸ்லிம் சமுகத்தின் சமுக விவகாரங்களில் அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக வேண்டி சில உப குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதலாவதாக இந்த நாட்டிலுள்ள ஹலால் அத்தாட்சிப்படுத்தல் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக இந்த நாட்டில் வரக்கூடிய இஸ்லாமிய அடிப்படையிலான முதலீட்டு நிறுவனங்கள் விடயமாக வழிகாட்டுவதற்கு அதாவது பொருளாதாரத்தை எவ்வாறு இஸ்லாமிய மயப்படுத்தச் செய்யலாம் என்பதை வழிகாட்டுவதற்காக ஒரு தனியான குழு ஒன்று இயங்கிக்கொண்டிருக்கின்றது. இஸ்லாமிய மார்க்கத்தின் மிகப் பெரிய அடிப்படையாகிய கல்வியை போதிப்பதற்காக கல்விக் குழு ஒன்று தனியாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. மக்களுடைய மார்க்க விடயங்களில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களுக்கு தெளிவு கொடுப்பதற்காகவேண்டி பத்வாக் குழு இயங்கிக்கொண்டிருக்கின்றது. மாதாந்தம் இஸ்லாமிய மாதங்களை நிர்ணயிப்பதற்கு தனியான பிறைக்குழு இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவை சமயப் பணிகளுக்காக வேண்டி சமூகத்துறைகளில் வழிகாட்டவும், சேவைகளை வழங்குவதற்காகவும் சமூகசேவைக்குழு ஒன்று இருக்கின்றது.

அவ்வாறு பிரசாரக்குழு ஒன்றும் இருக்கின்றது. அவர்களுடைய பிரதான பணிகளுள் ஒன்றாக மக்களுக்கு சமயத்தை அறிமுகம் செய்யும் அதே வேளையிலே சமூக ரீதியான விவகாரங்களில் மக்களுக்கு மத்தியிலே ஏற்படக்கூடிய முரண்பாடுகளைத் தடுப்பதற்கும், ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை நீக்குவதற்குமான குழுவாகவும் இது இருக்கின்றது. இப்படியாக பல குழுக்கள் இயங்கிக் கொண்டிருப்பதானது ஜம்மிய்யா சமூகத்தோடு இணைத்து தனது பணிகளை மேற்கொள்வதற்காக உதவியாக அமைகின்றது. இதனை ஜம்மிய்யாவின் குறிக்கோள்களை அடைவதற்கான வழியாகவும், திட்டமாகவும் நாம் வகுத்துக் கொண்டிருக்கின்றோம்.

**எமது சமூக அமைப்பில் முக்கிய பாத்திரம் எடுக்கவேண்டிய பொறுப்பு பள்ளிவாசல் நிறுவனங்கள், உலமாக்கள் அமைப்பு என்பனவற்றுக்குள்ளது, ஆனால் நிலமை அப்படியில்லையே ஏன் இந்த நிலை?**

நல்லதொரு கேள்வி கேட்டீர்கள். உண்மையில் சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உலமாக்களின் கைகளில் இருக்கின்றது என்பது குர்ஆனுடைய, சுன்னாவினுடைய ஆணித்தர மானதொரு கருத்து. ஆனால் இந்த வகையில் உலமாக்கள் தமது பங்களிப்பை மிகவும் காத்திரமாக வழங்குவதற்கு தவறியிருக்கின்றனர் என்கின்ற உண்மையை உலமாக்கள் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. உலமாக்கள் தமது பணிகளைச் செய்யும் விடயத்தில் உலமாக்கள் மாத்திரம் ஒரு அணியாகத் திரண்டு அப்பணியினைச் செய்ய முடியாது. அதற்கு சமூகத்தில் உள்ள பலதரப்பட்டவர்களும் உதாரணமாக படித்தவர்கள், பொதுமக்கள், துறைசார்ந்தோர் எல்லோரது உதவியும் அங்கே தேவைப்படுகின்றது. அத்தகைய உதவிகள் அவ்வப்போது கிடைக்கப்பெறாதது உலமாக்கள் தங்களது காத்திரமான பங்களிப்பை சமூகத்திற்கு வழங்குவதிலே தடையாக இருந்திருப்பது ஒரு காரணம்.

இரண்டாவது, இந்நாட்டிலுள்ள பொதுவான நடவடிக்கைகளில் அரசியலில் உள்ள அரசியல்வாதிகளின் சில தடைகள். இத்தடைகள் காரணமாகவும் உலமாக்களின் பங்களிப்பில் தடைகள் இருந்திருக்கின்றன.

ஆனால் அதே வேளையிலே உலமாக்கள் தமது பங்களிப்பை தமது சக்திக்கு உட்பட்டு இந்நாட்டில் நிறையவே பங்காற்றிக் கொண்டிருக்கின்றனர் என்பதனையும் நாம் மறுப்பதற்கில்லை. சமய, சமூக விடயங்களிலே இன்று உலமாக்களின் பங்களிப்பு, வழிகாட்டல் முன்னெப்போதும் இல்லாதவாறு திருப்திகரமானதாக அமைந்திருக்கின்றது. எதிர் காலத்தில் ஜம்மிய்யத்துல் உலமாவின் வழிகாட்டல், நடவடிக்கைகள் என்பனவற்றில் உலமாக்களின் பணிகளை ஒருங்கிணைத்து சமூகத்திற்கு நல்லதொரு காத்திரமான பங்களிப்பை செய்வதற்கு ஜம்மிய்யா முயன்றுகொண்டிருக்கின்றது.

**இன்றைய எமது சமூகத் தளத்தை உற்றுநோக்குகின்றபோது பல்வேறு பிளவுகள், முரண்பாடுகள் இருக்கின்றன. அரசியலை எடுத்துக்கொண்டால் பல்வேறு கட்சிகள், சமூக நிறுவனங்களை எடுத்துக் கொண்டால் பல்வேறு நிறுவனங்கள் இந்த முரணான நிலைமைகள் மிக மோசமான சமூகப் பின்னடைவுக்குக் காரணமாக இருக்கின்றன. அதி பொறுப்பு வாய்ந்த அமைப்பென்ற ரீதியில் ஜம்மிய்யத்துல் உலமா பல்வேறு சமூக பிரச்சினைகளில் ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்குமென நாங்கள் நம்பலாமா?**

நிச்சயமாக, ஏனென்றால் ஜம்மியதுல் உலமாவின் பொறுப்பும் இதுதான். சமூகத்திலே சரியானதொரு வழிகாட்டலை வழங்காதவிடத்து இந்த உலமாக்களின் ஒன்றியம் சமூகத்திற்குத் தேவையில்லை. எனவே நிச்சயமாக எதிர் வரக்கூடிய காலத்திலே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கடந்த காலங்களையும் விட விஷேடமாக இந்தப் பங்களிப்பைச் செய்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்பதனை அதனுடைய பொதுச் செயலாளர் என்ற வகையிலே உறுதியாக நான் சொல்லிவைக்கின்றேன்.

**கடந்த காலங்களில் ஜம்இய்யத்துல் உலமாவின் நிலைப்பாடுகளில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. பல முரண்பாடான சூழல்களும் உள்ளன. புதிய செயலாளர் என்ற வகையில் இதனை எவ்வாறு நீங்கள் எதிர்கொள்ளப் போகின்றீர்கள்?**

கடந்த காலத்தில் ஜம்இய்யத்துல் உலமாவைப்பற்றிய விமர்சனங்கள் இருந்திருக்கலாம். உலக வரலாற்றைப் பொறுத்தமட்டிலே எந்த ஒரு அமைப்பிற்கும் அல்லது தனி நபருக்கும் விமர்சனம் இல்லாது இருந்ததில்லை. அந்த வகையில் ஆக்கபூர்வமான விமர்சனங்களை நாம் வரவேற்றுத்தான் ஆக வேண்டும். என்னைப் பொறுத்தமட்டிலே ஜம்இய்யா தனது பூரணமான பங்களிப்பை நல்குவதில் தவறுசெய்யும் போதெல்லாம், பத்திரிகை மூலமாக அதன் மீது அக்கறை உள்ளவர்கள் நல்லெண்ணம் கொண்டு தமது விமர்சனங்களை தெரிவிக்கும் போதெல்லாம் நான் எப்போதும் அதை ஆதரிப்பவன். இன்றும்கூட ஜம்இய்யாவின் நல்ல விடயங்களைப் பாராட்டும் அதேவேளை அதற்கு வேண்டிய நல்ல ஆலோசனைகளையும் அதனுடைய தவறுகளை விமர்சித்து சுட்டிக்காட்டுவதை நான் ஆதரிக்கின்றேன். ஆனால் ஜம்இய்யத்துல் உலமா கடந்த காலங்களில் இவ்வாறான விமர்சனங்கள் வருவதற்குக் காரணமாக பல காரணங்கள் இருந்தாலும், முக்கியமான காரணம் பல அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் நிறைந்த விடயங்களில் ஜம்மிய்யா சிக்கிக் கொண்டமை என சிலர் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

ஜம்இய்யத்துல் உலமாவில் சிக்கல்களும், கருத்து வேறுபாடுகளும் இருந்தாலும், சமூக விவகாரங்களிலே வேறு விதத்தில் கூறுவதானால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களிலே ஒன்றுபட்டு செயற்படுவதில் எல்லோரும் ஒன்றாக இருந்திருக்கின்றார்கள் என்பது கண்கூடு. இன்றும் அப்படியான நிலையில்தான் இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் சிறு சிறு பிரச்சினை களை நாம் சிரித்துப் பேசிக்கொண்டு சமூகப் புனருத்தா ரனப் பணியில் எல்லோருமாக ஒன்றுபட்டு செயற்ப டலாம். என்ற உறுதி எனக்கும், நிறைவேற்றுக் குழு வில் உள்ள ஏனைய 24 சகோதர உலமாக்களுக்கும் இருக்கின்றது.

**பிரதானமாக இன்றைய சமூக அரசியலில் மிக மோசமான போக்குகள் காணப்படுகின்றன. நமது அரசியல் தலைவர்கள் என்று சொல்பவர்கள் நமது மக்களைக் கைவிட்டு தங்களுடைய நலன்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் அதிபொறுப்பு வாய்ந்த ஜம்இய்யத்துல் உலமா சபை இது விடயத்தில் தமது அரசியல் வாதிகளுக்கு ஒரு அழுத்தமாகவும், முன்மாதிரியாகவும் செயற்பட முடியுமல்லவா?**

நிச்சயமாக, கடந்த காலங்களிலும் கூட அரசியல் விவகாரங்களில் ஜம்இய்யா வழிகாட்டாமல் இருந்தது என்று சொல்வதற்கில்லை. அவ்வப்போது ஜம்இய்யா அரசியல் விவகாரங்களிலே செயற்பட்டு வந்துள்ளது. 1924 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் 1980 களைத் தொடர்ந்து மிகவும் இறுக்கமாகவும், உறுதியாகவும் ஜம்இய்யா இது விடயத்தில் செயற்பட ஆரம்பித்தது. நிருவாக ரீதியாக செயற்பட ஆரம்பித்தது எனலாம்.

அன்று தொட்டு இன்றுவரை அரசியல் ரீதியாக அரசியல் தலைமைகளுக்கு அவ்வப்போது வழிகாட்டுவதை ஜம்மிய்யத்துல் உலமா தனது சக்திக்கு உட்பட்டு செய்துவந்திருக்கின்றது. அண்மைக்காலமாக, கடந்த நான்கு வருடகாலமாக பல கருத்தரங்குகளை ஒழுங்கு செய்திருக்கின்றது. அரசியற் தலைவர்கள், அரசியல் அறிவு ஜீவிகளை எல்லாம் ஒன்று சேர்த்து முழுநாள் கருத்தரங்குகளைக்கூடச் செய்து அரசியல் ரீதியாக வழிகாட்டியிருக்கின்றது.

இன்று அதனுடைய நிலை ஒருபடி முன்னேறி, அதாவது முஸ்லிம் சமூகத்தைப் பொருத்தமட்டிலே அரசியல் ரீதியாக மிகவும் இக்கட்டாக உள்ள நிலையில் ஜம்மிய்யா கடந்த நிர்வாகக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்துள்ளது போன்று அரசியல் விவகாரத்தில் முஸ்லிம் அரசியற் தலைமைகளுக்கு குறிப்பாக வழிகாட்ட வேண்டும் என்று தீர்க்கமான முடிவுக்கு வந்திருக் கின்றது. அந்தவகையில் எதிர்வரும் 28ஆம் திகதி நிர்வாகக் குழுவானது சில புத்திஜீவிகளுடன் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கின்றது. இதில் குறிப்பாக அண்மையில் ஏற்படுத்த உத்தேசிக்க ப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் முஸ்லிம்களின் நிலை எவ்வாறு இருக்கும், அது எவ் வாறு இருக்கவேண்டும் என்ற முக்கிய கலந்து ரையாடலும்; அதனைத் தொடர்ந்து அந்த வகையில் தனது பயணத்தை முன் கொண்டு செல்ல முடிவு செய்திருக்கின்றது.

**உலமாக்கள், ஆலிம்கள் அரசியலில் ஈடுபடுவதுபற்றி இஸ்லாமிய நிலைப்பாடு என்ன?**

உலமாக்களைப் பொறுத்தமட்டிலே உலமாக்களுக்கும், அரசியலுக்குமிடையே இடைவெளி கிடையாது. இஸ்லாம் அரசியலை இணைத்துச் சொன்ன ஒரு மார்க்கம், அடுப்படி முதல் அரசியல் வரை வழிகாட்டிய ஒரு மார்க்கம். அரசியல் விவகாரங்களில் இஸ்லாத்தினுடைய கோட்பாடுகளும், போதனைகளும் தெளிவாக குர்ஆனிலும் நபிகளின் சுன்னாவிலும் அதாவது வாழ்க்கையிலும் காணக்கிடைக்கின்றது. உலமாக்களைப் பொறுத்தமட்டிலே அரசியல் விவகாரத்தில் வழிகாட்டும் அதே வேளை, நேரடியாகப் பங்கேற்பதற்கும் அவர்களுக்கும் அனுமதிக்கப்ப ட்டுள்ளது. ஆனால் இங்கே அரசியல் என்பது இஸ்லாமிய அரசியல் மற்றும் ஜாஹிலிய்ய அரசியல் என்று இருக்கின்றது. இப்படியான ஜாஹிலிய்ய அரசியலை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. ஆனாலும் இத்தகைய அரசியலில் ஒரு சிறுபான்மையினராக உள்ள நாம் பெரும்பான்மையினரோடும், அவர்களது அரசியல் சித்தாந்தங்களோடும் பின்னிப் பிணைந்து வாழுகின்ற சந்தர்ப்பத்திலே அதில் நாம் எமது அரசியல் பங்களிப்பைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் அமைப்பு முழுமையாக ஒவ்வாததாக இருந்தாலும் முஸ்லிமக ளைப் பொறுத்தமட்டிலே எவ்வாறு இந்த நாட்டிலே வாழலாம் அதாவது முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ள நாட்டிலே முஸ்லிம்கள் எவ்வாறு வாழலாம் என்ற அரசியலை நன்கு திட்டமிட்டு மக்களுக்கு வழிகாட்ட வேண்டி இருக்கின்றது. இந்தவகையிலே உலமாக்கள் முன்வந்து சீரான செம்மையான இஸ்லாமிய அடிப்படைகளை விட்டும் முரண்படாத ஒரு அரசியலைச் செய்வார்களாக இருந்தால் அது பாராட்டத்தக்கது; வரவேற்கத்தக்கது. அப்படியான வர்கள் முன்வர வேண்டும். இதனை என்றும் நாம் ஆதரிக்கின்றோம்.

**இன்றைய நிலையில் வடக்குக் கிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அடக்கு முறையை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

வடக்குக் கிழக்கில் வாழக்கூடிய முஸ்லிம் சகோதரர்கள் இன்று எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற அடக்கு முறைகளை மனித நேயம் படைத்த யாரும் ஆதரிப்பதற்கில்லை. சகித்துக் கொள்ளவும் முடியாது. அந்தவகையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா இவ்வடக்கு முறையை ஒருபோதும் வரவேற்கவில்லை. இதனை அது கண்டிக்கின்றது. இதன் காரணமாக இருக்கக்கூடியவர்களை இத்தகைய நடவடிக்கைகளை விட்டுவிடும்படி ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக் கொள்கிறது. அதேவேளை குறிப்பாக வடக்குக் கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் இவ் அடக்கு முறைகளில் இருந்து மீள்வதற்கு முதலில் அல்லாஹ் சுபஹானஹுவத்தஆலாவின் பக்கம் திரும்பவேண்டும் என்ற ஒன்றை அவர்களுக்கு மட்டுமல்ல எல்லா முஸ்லிம்களுக்கும் நாம் வலியுறுத் துகிறோம். நமது பிரச்சினைகளை அல்லாஹ்விடமே எப்போதும் முறையிட வேண்டும்.

இரண்டாவதாக நமது பாதையை சரியாகத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டிய ஒரு பொறுப்பும் இருக்கின்றது. வடக்குக் கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்கள் அவர்களுடைய அரசியல் பாதையில் எப்படி முன்னேறிச் செல்லலாம், இவ் அடக்குமுறைகளில் இருந்து எவ்வாறு விடுபடலாம், எப்படி தமது அபிலாசைகளை நிறைவேற்றிக் கொண்டு, அங்கே ஒரு சுதந்திரமான வாழ்வு கிடைப்பதற்கு அவர்கள் முனைப்புடன் திட்டமிட்டு செயற்படுவது முக்கியமான விவகாரமாகும்.

**ஊடக மேலாதிக்கம் உலக முஸ்லிம்களுக்கெதிராக முழு மோசமாக,**



எச். அப்துல் நாசர் (ரஹ்மானீ)
பொதுச் செயலாளர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

**திணிப்பான மேற்கொள்ளப்பட்டுவரும் சூழ் நிலையில் எமது இலங்கையைப் பொறுத்த அளவில் ஊடகங்களில் முஸ்லிம்கள் மீதான மேலாதிக்கத்தை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

பொதுவாக சர்வதேச ரீதியாக முஸ்லிம்களுக்கு ஊடகங்களைக் கொண்டுதான் இன்று மிகப்பெரிய சதித்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது வெள்ளிடை மலை. முஸ்லிம்கள் பற்றிய தப்பபிப்பிராயங்களைக் கட்டவிழ்த்துவிடுவதுதான் முஸ்லிம் எதிர்ப்பு சக்திகளுடைய இன்றைய சர்வதேச ரீதியிலான முயற்சி. ஆரம்பத்திலே பயங்கரவாதிகள் என்றார்கள், பிறகு அடிப்படைவாதிகள் என்றார்கள், இப்போது இஸ்லாமிய வாதிகள் என்றும் முஸ்லிம்களை போராட்டக்காரர்கள், எப்போதும் அடுத்தவர்களின் இரத்தம் குடிப்பவர்கள் போன்று ஒருவகையாக சித்தரிக்குமளவுக்கு ஊடகங்களின் முயற்சி நடந்து கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்தது.

இது இன்றுமட்டுமல்ல நபிகளாரின் த.:.வா வாழ்க்கையில் இறுதிக் கட்டத்தில் நபிகளாரின் மனைவி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களைப்பற்றி சபாஉல் முஅக்பர் என்ற ஸஹாபியுடன் இணைத்துப் பேசி நபியைப் பற்றி மக்கள் மத்தியில் விசமப் பிரசாரம் செய்ய முயன்றதும் காணப்பட்டிருக்கின்றது. இதுதான் இஸ்லாமிய வரலாறு. இந்த வகையிலேயே இன்றைய ஊடகங்களும் செயற்பட்டு வருகின்றன.

இதனுடைய தாக்கம் இலங்கையிலும் தவிர்க்க முடியாததாக உள்ளது. ஆனால் இதனை நாம் எதிர்த்துப் போராட வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. இந்தவகையில் சர்வதேச ரீதியில் முஸ்லிம்களுக் கெதிரான இப்பிரச்சாரங்களுக்கான எதிர்ப்பு சக்தியாக சில இணையத்தளங்கள் செயற்பட்டு வருகின்றன. ஆனால் அவை போதுமானதாக இல்லை. எமது நாட்டினைப் பொறுத்தமட்டிலும் முஸ்லிம்களுக்கென தனியான ஒரு மீடியா தேவைப்படுகின்றது. அதன் மூலமாகத்தான் முஸ்லிம்களுக்கு எதிரான இந்த ஊடகப் பிரசாரத்தை முறியடிக்கலாம்.

**முஸ்லிம் குரல் பத்திரிகையின் வாசகராகவும், அதைப்பற்றிய கருத்துள்ளவராகவும் இருக்கின்றீர்கள். முஸ்லிம் குரல் பத்திரிகை பற்றிய உங்களது விமர்சனப் பார்வை என்ன?**

நான் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் என்ற நிலையில் இருந்து நீங்கி முஸ்லிம் குரலின் வாசகன் என்ற அடிப்படையில் எனது கருத்தைச் சொல்ல விரும்புகின்றேன். முஸ்லிம் குரல் பத்திரிகையைப் பொறுத்தமட்டிலே முதல் பிரதியை நான் படிக்காவிட்டாலும் ஆரம்பத்திலிருந்து அதனைப்படித்து வருகின்றேன். அந்தவகையில் அதனுடைய போக்கை நான் ஆதரிக்கின்றேன். உள்ளதை உள்ளபடி சொல்லுவதுதான் ஒரு பத்திரிகையின் தார்மீகப்பொறுப்பு. அதேவேளை எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கும் பத்திரிகையாக அதாவது, மாற்றுக் கருத்துக்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கும் பத்திரிகையாக அதனை நான் காண்கின்றேன். அதேவேளை சமகாலத்துக்குத் தேவையான விடயங்களை அப்பத்திரிகை ஆக்கங்களாக பிரசுரிக்கின்றமையினையும் பாராட்ட வேண்டும். மொத்தத்தில் ஒரு காலத்தின் தேவையை நிறைவு செய்வதாக இப்பத்திரிகையை நான் காண்கின்றேன். தொடர்ந்து சிறப்பான சேவையை இப்பத்திரிகை செய்ய வேண்டும். எப்போதும் நடுநிலை தவறாது தனது பயணத்தை இப்பத்திரிகை தொடர வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கின்றேன்.

**பொறுப்பு வாய்ந்த ஒரு முக்கிய பதவியில் உள்ள நீங்கள் இன்று இலங்கை முஸ்லிம்களுக்கு சொல்ல வேண்டிய பிரதானமான செய்தி என்னவென்று கருதுகின்றீர்கள்?**

இன்றைய இலங்கைவாழ் முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் நிறைய செய்திகள் சொல்லவேண்டி இருக்கின்றன. பொதுவாகச் சொல்வதாயின் இலங்கைவாழ் முஸ்லிம்களைப் பொறுத்தமட்டிலே தற்போது எல்லாவகையிலும் இறுக்கமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பொருளாதார, அரசியல், சமயரீதியாக எல்லா வகையிலும் அவர்களுக்கெதிரான சூழ்ச்சி, சதி தெரிந்தும் தெரியாமலும் பின்னப்பட்டிருப்பதை நாம் மறுப்பதற்கில்லை. இப்படியான காலகட்டத்திலே முஸ்லிம்கள் முதலாவதாகத் தாம் விழிப்படைய வேண்டி இருக்கின்றது.

குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியிலுள்ள படித்தமக்கள் தமது பங்களிப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கின்றேன். அதேவேளை முஸ்லிம்களுடைய விவகாரத்தில் அக்கறையும், கரிசனையும் காட்டுபவர்களாக ஒவ்வொரு முஸ்லிம் சகோதரரும் இந்நாட்டில் மாற வேண்டும் என நான் விரும்புகின்றேன். எல்லாவகையிலும் உதவி பெறுவதற்கு அல்லாஹ்வின் பக்கம் அவர்கள் மீள்பவர்களாக மாற வேண்டும். தாம் எப்பொழுது தமது நிலைமையை சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் ஆழமாக படித்துக்கொண்டு புரிந்து கொண்டு எல்லா வகையிலும் திட்டமிட்டு செயற்படக்கூடியவர்களாக முஸ்லிம் சமூகம் மாற வேண்டும். இறுதியாக அவர்கள் அனைவரும் கல்வி விவகாரத்தில் கவனம் செலுத்த வேண்டும். இவைதான் இன்று முஸ்லிம் சமூகத்துக்கு குறிப்பாகத் தொட்டுச் சொல்ல வேண்டிய விடயங்களாக இருக்கின்றன.

சந்திப்பு : அபு நிதால்
தொகுப்பு : எஸ். முஸ்னத்

## முஸ்லிம்களின் கடலட்டை பிடிக்கும் உபகரணங்கள்
# அக்கரைப்பற்றில் அபகரிப்பு!

அக்கரைப்பற்று கடற்பரப்பில் கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் தொழிலாளிகளின் பல இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் ஆயுதமேந்திய தமிழ்க்குழுவொன்றினால் 2003.08.15ஆம் திகதி இரவு அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு கலவரங்களின்போது மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வசித்து வந்த மேற்படி முஸ்லிம் தொழிலாளிகள் அக்கரைப்பற்று கடற்பகுதியில் கடல் அட்டை பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். 08 வள்ளங்களில் சராசரியாக 40பேர் வேலை செய்தபோதும் குறித்த நாளன்று 10 பேரே வாடியில் இருந்திருக்கிறார்கள். ஏற்கனவே, காத்தான்குடி, கல்முனை பிரதேசங்களில் இதுபோன்ற 03 அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளதால் சம்பவதினமிரவு 10 பேரும் வாடியில் பரவலாக உறங்கியுள்ளனர்.

இரவு 11.05ற்கு ஏதோ அசம்பாவிதம் நடப்பதாக உணர்ந்து, எழும்ப முற்பட்ட வேளை, எல்லோரினது வாய்களுக்குள்ளும் சீலைகளை புகுத்தி, கை, கால்களை கட்டி, இழுத்துச் சென்று தென்னைமரத்தில் கட்டிவைத்து தாக்கியுள்ளனர். பின்னர், ஒரு சிலரை படகுகளுக்குள்ளும் மற்றவர்களை கடலோரமாகவும் எடுத்துச் சென்று போட்டுள்ளனர். படகுகளுக்குள்ளும், கடற்கரையோரமாகவும் கிடந்தவர்கள் - தங்கள் வாடியிலிருந்த பெறுமதியான பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு, கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தங்களின் இரண்டு வள்ளங்களில் ஏற்றப்பட்டதை கண்டுள்ளனர். அதேநேரம், கரையோர வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வெள்ளை நிற 'டொல்பின்' வேனின் அருகில் நின்ற 04 பேர் உட்பட, கறுப்புநிற ஆடை அணிந்த 10 துப்பாக்கி நபர்களை அவதானித்துள்ளனர்.

படகுகளில் முடியுமானளவு பொருட்கள் ஏற்றப்பட்டு, அவை புறப்பட்டு சென்றவுடன், எஞ்சியிருந்த பொருட்களை வேனில் ஏற்ற முற்பட்டுள்ளனர். அந்தத் தருணம், தூரத்தில் வேறொரு வாகனம் வரவே... வந்த வீதியூடாகவே அக்கரைப்பற்றின் வடபுறமாகச் சென்றுள்ளனர்.

எல்லாம் முடிந்து பின்னிரவு 12.20 மணிக்கு தொழிலாளிகள் தாங்களாகவே கட்டை அவிழ்த்து மீண்டு வந்து பார்த்த போது; 02 படகுகள், 06 என்ஜின்கள் (SUZUKI 25 HORSE POWER), ஒட்சிசன் கொம்பிறஷர் (COMPRUSSURE), 02 சிலிண்டர்கள், 05 கலன் எண்ணெய், 35 லீட்டர் பெற்றோல், 05 பப்லர் (PAPLER), பதப்படுத்தப்பட்ட 1000 கடலட்டைகள்... என 20 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் அபகரித்துச் செல்லப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. அது மட்டுமன்றி தொழிலாளர்களின் ஆடைகள் உடபட, பாதணிகள் கூட எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று செய்தியாளர்

முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்

தொடர்புக்கு
விளம்பர முகாமையாளர்
முஸ்லிம் குரல்
181/1, Ananda Mawatha
White Park
Colombo - 10
0777 389127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாரு

எழுதுவது... லைலா அஷ்ராவி

## ஆகஸ்ட் நமக்கென்றொரு மாதம்!

ஈழத்தின் இனவாத யுத்த வரலாற்றில் சமாதானம் அல்லது யுத்த இடை நிறுத்த காலம் "முஸ்லிம்களை கறுவருப்பதற்காக" என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறது. போராட்ட வரலாறு உரிமைகளுக்காகப் போராடுகுகிற ஓர் இனம், மிக மோசமாக இன்னொரு இனத்தை அடக்கியொடுக்கிற ஒரு நிலையை இப்போதுதான் கண்டிருக்கிறது என நினைக்கிறேன். (மன்னிக்கவும், முன்பெல்லாம் தமிழ் போராட்டத்தினை நியாயங்களின் பக்கமிருந்து பார்த்தவன் நான்; இப்போதெல்லாம், எல்லோருக்கும் போல் எந்த நம்பிக்கையும் எனக்கும் இல்லை)

கிழக்கு முஸ்லிம்களின் ஒவ்வொரு அசைவுகளையும் வல்லூறுகள் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொணடிருக்கின்றன. என்றுமில்லாதவாறான ஓர் உளவியல் அச்சுறுத்தல் குறிப்பாக மீண்டும் மீண்டும் சமாதான இடைக்காலத்திலும் தாக்குதலுக்குட்பட்டு வருகிற முஸ்லிம்களிடையே ஏற்பட்டிருக்கின்றன.

ஜுலை கலவரத்தை 20 வருடங்களாகியும் மறக்க, மன்னிக்க முடியாத ஒரு இனம் தான் முஸ்லிம் சமூகத்திற்கு செய்த வரலாற்று அநியாயத்தை மறக்க, மன்னிக்க கேட்டுக் கொண்டே புதிய புதிய அநியாயங்களைக் கட்டவிழ்ப்பதும் இறுமாப்புக் கொள்வதும் வேற்றுக் கிரகத்தில் கூட நம்பிக்கை கீற்றுக்களை தோற்றுவித்துவிடப் போவதில்லை.

முன்பெல்லாம் ஜுலை மாதம் வந்தால் தமிழர் தரப்பு பழிவாங்கல் தாக்குதல் நடக்கும் என்று நாடே அச்சத்தில் இருக்கும். பாதிக்கப்பட்டவர்களதும் குற்றமிழைத்தோரதும் மனநிலை அந்த மாதத்தில் எப்படியாவது வெளிப்படும். கடந்த இரு வருட ஜுலைகளும் சிங்களத்தரப்பு குற்றமனப்பான்மை பரந்தளவில் வெளிக் கொணரப்பட்டிருந்தது. அதேவேளை, கறுப்பு ஜுலையும் மறக்காமலும், மன்னிக்கப்படாமலும் ஞாபகப்படுத்தப்பட்டுக் கொண்டே வரப்பட்டது.

இப்படித்தான், அவர்களுக்கும் இவர்களுக்குமான சண்டையில் இடையில் (இடையில் என்று சொல்வதை விட இன்னொரு பக்கத்தில் என்று சொல்வதுதான் சரி) அகப்பட்ட நமக்கும் ஒரு கறுப்பு ஆகஸ்ட்டை, ஆயிரக் கணக்கானோரின் உயிர் மூச்சைப் பறித்துத் தந்தார்கள். நாம் பறிகொடுத்தவர்கள் அனைவரும் அப்பாவிகள். மிக மோசமாக மனித உரிமைகள், மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்ட ஒரு வரலாற்றை நாம்தான்; நாம் மட்டும்தான் கண்டோம்.

இந்த கறுப்பு ஆகஸ்ட்டை சகல நியாயங்களுடனும் நினைவு கூருகிற உரிமை நமக்கிருந்தது. எந்தவொரு எங்கள் ஆகஸ்ட்டும் யாருக்கும் அச்சத்தை தரவில்லை. நினைவு கூர்தலை நினைவு கூர்தலாக மட்டும் அர்த்தப்படுத்தினோம்.

ஆகஸ்ட் 3 ஆம் திகதியை ஷுஹதாக்கள் தினமாக பிரகடனப்படுத்தி கறுப்பு ஆகஸ்ட்டை இம்முறையும் நினைவு கூரவேண்டிய அவசியத் தேவை எமக்கு தொடர்ந்தும் இருந்தே வந்தது. ஆனால், எம்பொறுமையை சோதிப்பது போல், எம் சோகத்தை அவமானப்படுத்துவது போல் இம்முறை பல உயிர்களை "அவர்கள்" காவு கொண்டார்கள்.

ஷுஹதாக்கள் தினமான ஆகஸ்ட் 3 அன்றே (சில முஸ்லிம் ஊர்கள் எவ்விதமான அடையாள நினைவு கூரலையும் செய்யவில்லை என்பது கவலையான ஒரு விடயம்) தோப்பூர் ஜின்னா நகர்ப்பகுதியைச் சேர்ந்த ரிழ்வான் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். ஆகஸ்ட் 13 இல் மூதூர் வாலிபர்களான பரீத், ரியாஸ் என்போர் திருமலையில் வைத்துக் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். 16 ஆம் திகதி மூதூரைச் சேர்ந்த தந்தையுடன் மகனும் மிக மோசமாகத் தாக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டிருக்கின்றனர். 25 ஆம் திகதி காலை சம்மாந்துறைப் பிரதேசத்தில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். சாய்ந்தமருதில் இரு முஸ்லிம் இளைஞர்களை காணவில்லை.

இப்படி இந்த மாதத்து நினைவு கூரலையும் பல உயிர்களைக் கொடுத்து செய்ய வேண்டியிருக்கிறது.

அண்மையில் Daily Mirror கட்டுரையொன்று, ஜுலை கலவர நினைவு நாளின் "அரசியலை" கடுமையாக கேள்விக்குள்ளாக்கியிருந்தது. புலிகளால் நிகழ்த்தப்பட்ட முஸ்லிம்கள் படுகொலைகளை, விரட்டியடிப்புகளை பகிரங்கமாக எதிர்க்காத தலைநகர NGO க்களின் அரசியலையும் அக்கட்டுரை சாடியிருந்தது. "ஜுலை கரவரத்தில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கையை விட புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகம்" என்று எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மகன் சாருஹாசனை மேற்கோள் காட்டி அக்கட்டுரை குறிப்பிட்டிருந்ததை இங்கு சொல்லியாக வேண்டும்.

### ஏறாவூர்
#### சுஹதாக்களின் ஏக்கம்

அன்று 1990-08-11
தன்மானமும்
தனித்துவமும்
தளைத்திமிர்ந்திருந்த ஏறாவூர்
இரவின் இருளுக்குள்
இலகுவாய் மூழ்கிக் கொண்டிருந்தது

நகரின் எல்லையோரத்துள்
நாகரிகமற்ற
நரமாமிசமுண்ணும்
கோழைப்புலிகளின் கூட்டமொன்று
கொலை வெறியுடன்
இரைதேடி ஊடுருவிட்டு!

மத்திய இரவில்
கத்துச் சத்தத்தை
மிக மந்தமாகவேனும்
காற்று
கடத்திச் சென்று சேர்த்துவிட்டாயிற்று!
மறுகணம்.....
ஏறாவூர்
எல்லையோரத்திற்கு
எழும்பி வந்திற்று

அங்கு.......
122 முஸ்லிம்களின் வெற்றுடல்கள்
இரத்த ஆற்றுக்குள்
மிதக்கலாயிற்று!

கோழைத்தனத்தின் குறியீடு!
கயமைகளின் வெளிப்பாடு!
கூடிவாழ்ந்தவர்களை
குழிதோண்டிப் புதைத்த வரலாறு!
புலிகள் புரிந்து போயினர்!

விழிகளினூடாக
வேதனை நதிகள் வெளிப்பட்டு
சுஹதாக்களை குளிப்பாட்டிற்று!

ஏழை எளியவரென்றால் என்ன
இயக்கமற்ற நோயாளரென்றால் என்ன
கற்பத்தில் துடிக்கும் சிசுவானாலென்ன
காட்டுமிராண்டிகளுக்கு!
முஸ்லிம் என்றால் போதும்!
கடித்துக் குதறுவதற்கு!

நவகால நாகரிகத்தின்
நல்ல காற்றேனும்
நல்ல ஊற்றேனும்
துளிகூடப் பெறாத கூட்டம்!
அல்லாஹ்வின் அரும்படைப்பை
அழித் தொழிப்பதிலேயே நாட்டம்!

கொடியவர்களால் கொல்லப்பட்ட
சுஹதாக்களின் கருவறைகள்
காலத்தின் நியாயம் வேண்டி
கண்ணீர் வடிக்கின்றன!

முஸ்லிம் தேசமொன்றை
முழுமையாய் நிறுவுவதற்கு
முன்னுதாரணங்களாய்...
மூலை முடுக்கெல்லாம்....
சுவனத்து சுஹதாக்கள்......
யாசித்துக் கிடக்கிறார்கள்!

யூ.எல்.எம். நஜீப்
ஓட்டமாவடி

## ஷுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனத்தின் ஏற்பாட்டில் 03.08.2003 அன்றைய தினம் கத்தான்குடி மீரா பள்ளிவாயல் முன்றலில், பள்ளிவாயல் படுகொலையின் 13வது சிரார்த்த தினத்தில் கூடிய மக்கள் பேரணியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.



சிங்கள, தமிழ் இனப்பிரச்சினையின் கடந்த நான்கு தசாப்த காலத்திற்கும் மேலான பிரச்சினைக்கு தீர்வாக பல்வேறு அரசுகளால் பல்வேறுகாலங்களில் முன்வைக்கப்பட்ட சகல தீர்வு முயற்சிகளும் தோல்வியில் முடிந்தமைக்கு முன்வைக்கப்படும் பல்வேறு காரணங்களில் பிரச்சினைக்குரிய வடக்கு கிழக்கு பிரதேசத்தை வாழ்விடமாகவும், தாயகமாகவும் கொண்ட மற்றுமொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களின் விவகாரங்கள் புறந்தள்ளப்பட்டமையும், பிரச்சினையின் ஓர் அங்கமாக முஸ்லிம்கள் பார்க்கப்படாமையும் பிரதானமான காரணங்களில் ஒன்றாகும்.

வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களுடன் பின்னிப் பிணைந்து, தமிழ் மக்கள் பேசுகின்ற தமிழ் மொழியையே முஸ்லிம்களும் பேசுகின்ற போதும் மதரீதியாகவும், கலாசார ரீதியாகவும் தமிழ் மக்களிடமிருந்து முஸ்லிம்கள் முற்றாக வேறுபட்டவர்கள் என்பதை தீர்வு முயற்சிகளுடன் சம்பந்தப்பட்டோர் கவனத்திற் கொள்ளாது முன்வைக்கப்பட்ட சகல தீர்வுகளிலும் முஸ்லிம்களை பகடைக் காய்களாக்க முற்பட்டதன் விளைவால் சகல தீர்வுகளும் தோல்வியில் முடிந்துள்ளதை முஸ்லிம் சமூகம் வேதனையுடனும், விரக்தியுடனும் மீட்டுப்பார்க்கிறது.

தற்போது அமுலிலுள்ள தற்காலிய யுத்த நிறுத்தமும், சமாதான சூழலும் நிரந்தரமாய் மாறுவதற்கு தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் விவகாரங்கள் தனியாக கையாளப்பட வேண்டியது இன்றியமையாதது என்பதையும், அவ்வாறல்லாத எந்தவித முயற்சியும் மீண்டும் யுத்தத்திற்கே வழிகோலும் என்பதையும் கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளுமாறு எதிர் காலத்தில் தீர்வுகளை வைக்கப்போகும் அனைவருக்கும் இந் நினைவு தினப்பேரணி வேண்டி நிற்கிறது.

சுமார் 6000 உயிர்களையும் 7500 கோடி ரூபாய் பெறுமதியுள்ள சொத்துக்களையும் சிங்கள தமிழ் இனப்பிரச்சினைக்கு முஸ்லிம் சமூகம் அனியாயமாய் இழந்துள்ளதையும், அர்த்தமற்ற இம் மோசமான இழப்புக்கள் முஸ்லிம்களின் இருப்பையும், பாதுகாப்பையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளதையும் ஆராய்ந்து பார்க்கும் போது, இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளில் முஸ்லிம்களுக்கென தனியான அதிகாரப் பகிர்வு, அரசியல் தீர்வு ஏற்பாடுகள் சம முக்கியத்துவத்துடன் கருதப்பட வேண்டும் என்பதனை நியாயப்படுத்துகின்ற அதேவேளை, முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தாத எந்தவொரு தீர்வும் நிரந்தரத் தீர்வாக அமையாது என்பதையும் உணர்த்துவதை தீர்வுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென இப்பேரணி வேண்டிக் கொள்கிறது.

1990ம் ஆண்டு 08ம் மாதம் 03ம் திகதி இரவு 8.00 மணியளவில் காத்தான்குடி பள்ளிவாயல்களில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலின்போது கொல்லப்பட்ட நூற்றுக்கும் அதிகமான முஸ்லிம்களை 13வது வருடமாக நினைவு கூறவும் , முஸ்லிம்கள் என்பதற்காக விடுதலைப் புலிகளாலும் ஏனைய தமிழ் பயங்கரவாத இயக்கங்களாலும் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட ஏனைய ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை நினைவு கூறவும் இங்கு கூடியிருக்கும் முஸ்லிம் சமூகம், தீர்வு முயற்சிகளில் ஈடுபடுவோருக்கும், தீர்வுகளின் பங்காளர்களுக்கும், தீர்வை தீர்மானிக்கும் அதிகாரம் கொண்ட இந் நாட்டின் அரசியல் தலைமைத்துவத்திற்கும், முஸ்லிம்களின் அடிப்படை உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளுமாறு வினயமாய் வேண்டுகிறது.

01. இனப்பிரச்சினைத் தீர்வாக முன்வைக்கப்படும், வழங்கப்படும் எந்தவொரு அதிகாரப் பரவலாக்கலுடனான நிருவாகக் கட்டமைப்பும் தமிழ்ப் பேரினவாதத்தின் மேலாதிக்க நிருவாக ஒழுங்குகளுக்கு துணை புரியாத, ஆனால் இனப் பிரச்சினையில் சிக்குண்ட ஒவ்வொரு சமூகமும் சயாதீனத்துடன் தன்னைத் தானே வடக்கு கிழக்கில் நிருவகிக்கத்தக்க ஏற்பாடுகளை அடிப்படையில் கொண்டதாக அமைய வேண்டும்.

02. சகல சமூகங்களும் சமத்துவமாக வாழக்கூடிய சமத்துவத் தாயகக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அதிகாரப் பரவலாக்கலை பிராந்தியங்களுக்கல்லாது சமூகங்களுக்கு வழங்குவதன் மூலம் முஸ்லிம்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பாரிடம் இப்பேரணி வேண்டிக்கொள்கின்றது.

03. வடக்கு கிழக்கில் நில தொடர்பு அற்றுக் காணப்படும் முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்கள் அனைத்தும் ஒரே சுயாதீன முஸ்லிம் நிருவாக ஒழுங்குக்குள் ஒருங்கிணைக்கப்படுகின்ற அதேவேளை, நிலத்தொடர்பு அற்றிருப்பதை காரணமாய்க்காட்டி முஸ்லிம் பிரதேசங்கள் கூறு போடப்படுவதை அல்லது வேறு பிரதேசங்களுடன் இணைக்கப்படுவதை இப்பேரணி முற்றாக நிராகரிக்கின்றது.

04. வடக்கு கிழக்கில் தம் வாழிடத்திலிருந்து விடுதலைப் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு அகதிகளாகி நிற்கும் சுமார் இரண்டு இலட்சம் முஸ்லிம்களும் மீண்டும் அவர்களது வாழிடங்களுக்கு கௌரவமாகவும், சுதந்திரமாகவும் உரிய நஷ்டஈட்டுடன் திரும்பிச் செல்ல வழியேற்படுத்தும் வகையிலான தீர்வினை ஏற்படுத்துமாறு இப்பேரணி தீர்வுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் வேண்டி நிற்கிறது.

05. காரணமின்றி அநியாயமாக முஸ்லிம்களால் இழக்கப்பட்ட ஆயிரக்கணக்கான உயிர்களுக்கும், கோடிக்கணக்கான சொத்துக்களுக்கும் உரிய நஷ்டஈடுகள் வழங்கப்படாதது மட்டுமல்ல, எந்தவொரு இன அழிப்புக் குற்றத்திற்கும் நீதியான விசாரணைகள் இடம்பெறாமைக்கு தனது ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் தெரிவிக்கின்ற முஸ்லிம் சமூகம் இதற்கு பரிகாரம் காணுமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டிக்கொள்கிற அதேவேளை, உலக மகா கொடுமைகளுள் ஒன்றாகவும், முஸ்லிம் உலகுக்கெதிரான மிகப்பெரும் அவமானமாகவும் கருதப்படுகின்ற காத்தான்குடி பள்ளி வாயல்கள் படுகொலை பற்றிய விசாரணைக்கு ஜனாதிபதி ஆணையம் ஒன்றினை அமைக்குமாறும், மனித குல அவலம் இடம்பெற்ற இக்கரி நாளை தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்துமாறும், ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிடுமாறும் வேண்டிக் கொள்கின்ற அதேவேளை, 1985களின் பின்னர் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கெதிரான அனைத்து கொலைகள், வன்செயல்கள் பற்றியும் ஆராய ஜனாதிபதி ஆணையம் ஒன்றினை அமைக்குமாறு இப்பேரணி வேண்டி நிற்கின்றது.

06. தமது முஸ்லிம் விரோத உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக முஸ்லிம்களின் இழப்புக்களை மறுக்கவும், மறைக்கவும் முற்படுகின்ற ஊடகங்கள் இவ்வாறான இனவிரோத நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறும், பாரபட்சமற்ற செய்திகள் மூலம் ஊடகத்துறையின் நம்பகத்தன்மைக்கு புத்துயிர் அளிப்பதற்காகவேனும் முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து உண்மைகளை வெளிக் கொணருமாறும் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களை இப்பேரணி வினயமாய் வேண்டுகிறது.

07. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் படுகொலை பற்றிய விசாரணை அறிக்கையை உடனடியாக வெளிக் கொணருமாறு அதி உத்தம ஜனாதிபதி அவர்களை தாழ்மையுடன் இப்பேரணி வேண்டுகிறது.

08. பிரிந்து கிடக்கின்ற முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள் முஸ்லிம்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உடனடியாக ஒன்று சேருமாறு இப்பேரணி வேண்டுகின்றது.

ஷுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம்,
காத்தான்குடி.





## சுஹதாக்களின் நினைவும் நமது மக்களின் உணர்வும்...

1990 ஆகஸ்ட் தொடக்கம் ஒக்டோபர்வரை வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மிக மோசமாக புலிகளினால் இனச்சுத்திகரிப்பு, இனப்படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கான முஸ்லிம்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. வடக்குத் தாயகத்திலிருந்து முஸ்லிம்கள் உடுத்த உடையுடன் துரத்தியடிக்கப்பட்டனர்.

மனித குலமே வெட்கித் தலைகுனியுமளவிற்கு இரத்தமும் கண்ணீரும் முஸ்லிம்களின் வாழ்வில் நிலைத்திருந்த காலமது. என்றுமே இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மறக்க முடியாத தினங்கள் அவை.

அத்தினங்களை நமது மக்கள் மீள மீள ஞாபகப்படுத்துகின்றனர். படுகொலைகள் தொடரும் இக்காலத்திலும் இப்படி ஞாபகப்படுத்துவதன் ஊடாக முஸ்லிம்களின் மீதான அடக்குமுறையை தவிர்த்துக் கொள்ளுங்கள் என ஆதிக்க சக்திக்கு செய்தி சொல்கின்றனர். இதனை ஆதிக்கத்தரப்பினர் மிக மோசமாக அடக்கி ஒடுக்க நினைக்கின்றனர். அதுமட்டுமா அப்படுகொலைகளுக்கு நியாயம் கற்பிக்கவும் முனைகின்றனர்.

மிகப்பெரும் மக்கள் ஆதரவுடன் உணர்வு பூர்வமாக குருதி சிந்திய காத்தான்குடி, ஏறாவூர் மண்ணிலும், கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களிலும் நமது மக்கள் சுஹதாக்கள் தினத்தை அனுஷ்டித்தனர். அடக்கப்படும் மக்களின் ஒன்றுதிரண்ட எழுச்சி வெடித்தெழும்பும் நாள் வெகு தூரத்திலில்லை. அல்லாஹ் பெரியவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களை பலிகேட்கும் சமாதானம்

இலங்கையின் சமாதானம்
இஸ்லாமியனை
இலக்கு வைத்துத் தாக்கும்
சதிகாரச் சமாதானம்

இருபத்தைந்தாண்டுகாலம்
இருபேரினத்தாலும்
இழப்புகளைச் சந்தித்தோம்
அடிபட்டு ஊரூராய் ·
அலைந்து திரிந்திட்டோம்

முஸ்லிம்களின் ரத்தத்தை
புலி தினம் கேட்கிறது
எம் உடைமைகளை
கரியாக்கி எம்மை
அடிமைகொள்ளப் பார்க்கிறது.

யுத்தத்திலும் பார்க்க
சதி கொண்ட சமாதானம்
எம்மை அதிகளவாய்க் கொல்கிறது

புலி எம் ரத்தம் கேட்கிறது
பலி கேட்டு எம் வாசல் வருகிறது
கிலி கொண்டு
அபயங்கேட்டால்
எம்மால் எதுவும் செய்ய முடியாது
சமாதானத்தைப் பாதுகாக்கப்
போகிறோம்

என்று ராணுவம் கைவிரிக்கிறது
முஸ்லிம்களின் ஓட்டுக்களால்
உருவான ஆட்சி இது
சமாதானம் என்று சொல்லி
எம் உயிர்களையே
பலியாய்க் கேட்கிறது.
(முஸ்லிம் அரசியல்வாதிகளோ
தாம் அரசை ஆதரிப்பதாகவும்,
அரசின் பங்காளி என்றும்
உளறுகிறார்கள்)

–முகம்மது பின்ஹாஸீம்

## கிழக்கு மாகாண.....

கணக்கெடுப்பை கட்டுரையாளர் ஒப்புக்கொள்கிறார். ஆனால் அண்மைய கணக்கெடுப்பின்படியான (2001) மாகாணத்தின் மொத்த இனவிகிதாசாரத்தை மட்டும் ஏற்க மறுக்கிறார்.

இறுதியாக 1981இல் தான் குடிசன மதிப்பீடு நடாத்தப்பட்டதாகத் தகவல் தரும் கட்டுரையாளர் 'அப்போது கிழக்கு மாகாணத்தின் இனவிசிதாசாரம் தமிழர்கள் 67, முஸ்லிம்கள் 30, சிங்களவர்கள் 03 என்ற அளவிலேயே இருந்தது' என்பதுடன், அண்மையில் மக்கள் கணக்கெடுப்பு ஏதும் நடைபெறவில்லை எனத் தகவல் தந்து 'கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் தமிழர்கள் 45 வீதமும், முஸ்லிம்கள் 35 வீதமும், சிங்களவர்கள் 20 வீதமும் என்பதே சரியானதாகும்.' எனவும் வலியுறுத்துகிறார். இந்த இனவிகிதாசாரத் தகவல்களை எங்கிருந்து பெற்றார் என்று மட்டும் குறிப்பிடவில்லை.

1981ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் மிகப் பெரும்பான்மையாக இருப்பதுடன், திருகோணமலை மாவட்டத்தில் தனிப்பெரும்பான்மையாக உள்ளமையை அறிக்கைகள் காட்டுகின்றன.

அதுபோல், 2001ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் மிகப்பெரும்பான்மையாக இருப்பதுடன் திருகோணமலை மாவட்டத்தில் தனிப்பெரும்பான்மையாக உள்ளமையை அறிக்கைகள் காட்டுகின்றன என்பதும் யதார்த்தமாகும்.

கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ள 'பல்லாயிரம் ஆண்டுகள் பழமையும் வரலாற்றுச் சிறப்புக் கொண்ட' வணக்கஸ்தலங்களுக்கும் மாகாணத்தின் இன விகிதாசாரத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிப் புரிந்து கொள்ள முடியாதுள்ளது.

'1970இல் 11க்கு 06 என்றிருந்த பாராளுமன்ற தமிழர் பிரதி நிதித்துவம் 2001 இல் 16க்கு 05 என சுருங்கியிருப்பதன் காரணம் ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.' என்றொரு கோரிக்கையையும் கட்டுரையாளர் முன்வைத்துள்ளார். அவ்வாறு ஆராயும்போது பின்வரும் தகவல்களையும் கருத்திற்கொண்டால் அதுமேலும் பெறுமதியானதாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

திருகோணமலை மாவட்டத்தில் திருமலை தமிழ்த்தொகுதியாகவும், மூதூர் இரு முஸ்லிம்கள் தெரிவு செய்யப்படக்கூடிய இரட்டை அங்கத்தவர் தொகுதியாகவும் வகுக்கப்பட்டிருந்தது. அதன் பயனாகவே 1948 முதல் 1977 வரையிலான காலப்பிரிவில் 1960 முதல் 1970 வரை இரு முஸ்லிம்கள் (எம்.ஈ.எச். முகம்மதலி, ஏ.எல். அப்துல் மஜீத்) முதலாவது, இரண்டாவது உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

விகிதாசாரத் தேர்தலில் தற்போதும் இம்மாவட்டத்தில் நான்கு உறுப்பினர்கள் தெரிவாவதற்கான ஒழுங்கில் இரு முஸ்லிம்களும், ஒரு தமிழரும், ஒரு சிங்களவரும் தெரிவாக வேண்டும். மாவட்டத்தின் இனவிகிதாசாரமும் அவ்வாறானதே. 1989, 1994, 2001 களின் தேர்தல் முடிவுகளும் அவ்வாறே அமைந்திருந்தன.

நிலைமை இவ்வாறிருக்க, மாறாக மூதூர், ஈச்சிலம்பற்றுப் பகுதிகளில் தமிழ் மக்களின் 'வாக்களிப்பு' தடுக்கப்பட்டதனால் தமிழ் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டதென்பதைவிட, மக்கள் இனநோக்கில் வாக்களிக்காது, பேரினவாதக் கட்சிகளுக்கு வாக்களித்தமையும், வரலாற்றில் இல்லாத அளவிற்கு எண்ணிறைந்த தமிழ் கட்சிகளும், தமிழர்களும் போட்டியிட்டு வாக்குகளை சிதறடிக்கச் செய்தமையுமே இன்னிலைமைக்கு காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2000 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 4 தமிழ்க்கட்சிகள் 3 சுயேச்சைக் குழுக்கள் என்பன போட்டியிட்டே திருகோணமலை மாவட்டத்தில் 50 வருடகால தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்தன என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் இத்தியாதி காரணங்களே தமிழ்ப் பாராளுமன்ற பிரதி நிதித்துவ இழப்புக்கும் காரணமாய் அமைந்தன. அத்தோடு, காலாகாலமாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்களித்து வந்த ஏறாவூர் போன்ற தமிழ்ப் பிரதேச வாக்காளர்கள் யாவரும் 2001 பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்ததன் காரணமாகவே அலி ஸாஹிர் மௌலானா பலமுறை தக்கவைத்த பாராளுமன்ற ஆசனத்தை இம்முறை இழக்க நேரிட்டது.

ஆகவே, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவங்கள் குறைவடைய 'வாக்களிப்புத் தடை' காரணம் என்பதைவிட முஸ்லிம் பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்புக்கும், இழப்புக்கும் தமிழ் வாக்காளர்களே காரணமாயிருந்துள்ளனர் என்பதே வரலாறு கண்ட உண்மையாகும்.

அதுபோல், அம்பாறை மாவட்டத்திலும் தமிழர்களின் போட்டிக் கட்சிகளின் அதிகரிப்பும், தமிழ் வாக்குகளின் சிதறல்களுமே தமிழர் ஆசனத்தை குறைக்கவும், இழக்கவும் காரணமாய் அமைந்தன. 1994 இல் நடந்ததும் அதுவே, அதன்பின்பு தான் தமிழர் மகா சபையும் விழித்துக் கொண்டது.

மாறாக, அப்போது இழந்த தமிழர் ஆசனம் சிங்கள ஆசனத்தையே அதிகரிக்கச் செய்தது. 1989 இல் 3 ஆக இருந்த சிங்கள ஆசனம் 1994 இல் நான்கானது. அது முஸ்லிம் ஆசனங்களை அதிகரிக்கச் செய்யவில்லை. அம்மாவட்டத்தில் காணப்பட்ட மக்கள் தொகை அதிகரிப்பினால் ஏற்பட்ட பாராளுமன்ற ஆசனங்களின் அதிகரிப்பு (2000இல் 6 இல் இருந்து 7 ஆனது) முஸ்லிம் உறுப்பினர்களின் தொகையையும் 1994 இல் 2 இல் இருந்து 2000 இல் 3 ஆகவும், 2001 இல் 4 ஆகவும் அதிகரித்தது என்பதுதான் யதார்த்தம்.

எனவே, இன்றைய கிழக்கு மாகாண இனவிகிதாசாரப்படி 8 முஸ்லிம்களும், 5 தமிழர்களும், 3 சிங்களவர்களுமே தெரிவாக வேண்டும். அதுவே நடந்திருக்கிறது. 7 தமிழர்கள், 5 முஸ்லிம்கள், 4 சிங்களவர்கள் தெரிவாக வேண்டும் என்றெண்ணுவதெல்லாம் யதார்த்தத்திற்குப் பொருந்தாது.

நிலைமை இவ்வாறிருக்க, தரவுகள், புள்ளிவிபரங்கள் ரீதியான அறிவு பூர்வமான உண்மைகளை மறைத்து, பிழையான எழுமாற்றான – கற்பனைத் தகவல்கள் மூலம் மக்களை தவறான சிந்தனையின்பால் தூண்டும் பொறுப்பற்ற செயல்களில் பொறுப்புள்ளவர்கள் எனக் காட்டிக் கொள்ளும் அரசியல், சமூக இனவாதிகள் ஈடுபடக் கூடாது. 2001 இன் குடிசன மதிப்பீட்டை மறுக்கும்போது 45, 35, 20 என்ற வீதங்கள் எங்கிருந்து பெறப்பட்டவை என்ற உண்மைகளும் வெளியிடப்படல் வேண்டும்.

# "அமெரிக்கச் சிப்பாய்களே.... யாருக்காகச் சாகப் போகிறீர்கள்?"



குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்த ஆண்கள் 500 பேரை படுகொலை செய்தோம் ஏதோ ஒன்றிரண்டு விதிவிலக்காக நடந்திருக்கலாம் என்று நினைத்து விடாதீர்கள். அப்படித்தான் நாங்கள் போர் செய்தோம். பெரும் நச்சுக் குண்டுகளை வியட்நாம் மக்கள் மீது வீசினோம், விளைவை நேரடியாகச் சோதித்து தெரிந்து கொள்வதற்காக.

போருக்கும் பிறகு ஏற்பட்ட ஆழமான வேதனை எங்களுக்குத் தெரியும். கொல்லப்பட்ட 20 இலட்சம் ஆண், பெண், குழந்தைகள் இன்னமும் கூட எங்கள் கனவுகளில் வந்து வட்டமிட்டுக் கதறுகிறார்கள். சண்டையில் இறந்த வீரர்களை விட, வீடு திரும்பி இப்படிக் கனவுகளால் துரத்தப்பட்டே தற்கொலை செய்து கொண்ட வீரர்களே அதிகம். நீங்கள் படையெடுப்பில் செல்ல முடிவெடுத்தால் அந்த ஆக்கிரமிப்புப் படையில் நீங்களும் ஓர் அங்கம். உங்களை அடியோடு வெறுக்கும் மக்களை கண்ணோடு கண், நேருக்கு நேர் பார்க்கும் போது எப்படியிருக்கும் தெரியுமா?

உண்மையில் உங்கள் இலட்சியம் என்ன என்று சிந்தியுங்கள். உங்களைப் போல, என்னைப் போல வாழ்ந்து தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் ஒரு மக்கள் மீது படையெடுத்து ஆக்கிரமிப்பு செய்ய அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். அவர்கள் அமெரிக்காவை அச்சுறுத்தவுமில்லை – அவர்களின் தலைவர் மிகக் கொடிய சர்வாதிகாரியாக இருக்கலாம். அமெரிக்க நாட்டிலேயே ஜனாதிபதி சட்டப்படித்தான் தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்று பலர் நம்ப மறுக்கும் போது ஈராக் மக்கள் நாட்டை எப்படி ஆள வேண்டும் என்று சொல்ல இந்த அமெரிக்கா யார்?

சொந்த மக்களையே விஷ வாயு செலுத்தி கொன்றவர், கொத்துக் கொத்தாக மக்களை கொன்று குவிக்க ஆயுதங்களை தயாரித்தவர் என்று சதாமை இன்று சாத்தான் என்று பழி தூற்றுகிறார்கள். மோசமான போர்க் கிரிமினல் குற்றங்களை சதாம் செய்த போது அமெரிக்கா என்ன செய்தது – ஆதரித்தது. உயிரியல், இரசாயன ஆயுதத் தளபாடம் தயாரிக்க மூலப் பொருட்களை அள்ளிக் கொடுத்தது. ஈராக் மீது அமெரிக்கா போட்ட பொருளாதாரத் தடையால் ஏற்பட்ட படுபயங்கரமான விளைவுகளை இதோடு ஒப்பிடுங்கள். அத்தடைகளால் பத்து இலட்சத்துக்கு மேல் சிறுவர்களும் குழந்தைகளுமாய்ச் செத்துப் போனார்கள்.

கொலை செய்வதில் எந்தக் கௌரவமும் இல்லை. இந்தப் போர் வேறு பெயரில் நடத்தப்படும் பச்சை படுகொலை. இந்த போரையும், அதில் உங்கள் பங்கேற்பையும் எதிர்த்து என்னைப் போன்ற முன்னாள் இராணுவ வீரர்கள் தலைமை ஏற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்துவோம்.

வியட்நாம் போரின் போது – வியட்நாம் சென்ற சிப்பாய்கள் அமெரிக்காவிலேயே இருந்த சிப்பாய்கள் பலர் அதிகாரிகளின் கட்டளைக்கு கீழ்படிய மறுத்தார்கள், எதிர்த்தார்கள், கலகம் செய்தார்கள். கற்பிதமான ஓர் எதிரிக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதை மறுத்துச் சிறைக்குச் சென்றார்கள். சென்ற வளைகுடாப் போரில் தனியார் மூலம் சேர்த்த சிப்பாய்கள் கூட பல காரணங்கள் சொல்லி எதிர்ப்புக் காட்டினார்கள். எங்களில் பலர் அந்தப் போர்களிலிருந்து வெளியேறி "போர் எதிர்ப்பு இயக்கத்"தில் இணைந்தோம். உலகில் எந்தவொரு மக்களும் சுதந்திரமாக இருக்க வேண்டுமானால் – ஒரு நாட்டின் சிப்பாயாக இருப்பதை விட, உலகின் குடி மகனாய் இருப்பதை முன்னால் நிறுத்துகிற ஒரு நாள் வரவேண்டும்.

அந்த நாள் இதோ வந்துவிட்டது! கப்பலில் சிப்பாய்களை அள்ளிச் செல்லும் கட்டளை வரும் போது நீங்கள் எடுக்கின்ற ஒரு முடிவு மத்தியக் கிழக்கில் வாழும் பல இலட்சம் மக்களின் உயிர்களையும், இங்கு அமெரிக்காவில் வாழும் உயிர்களையும் ஆழமாகப் பாதிக்கும்.

எதிர்காலம் நோக்கிய நமது வழியை வடிவமைக்க உங்கள் முடிவு உதவி செய்யும். உங்கள் முன்னால் இரண்டே வழிகள். ஒன்று – உங்கள் படைத் தலைவர்களின் வழி, அவர்கள் உங்களைக் கட்டுப்படச் சொல்வார்கள். மற்றொன்று – எங்கள் வழி, நாங்கள் சிந்திக்கச் சொல்கிறோம்.

உங்கள் மனச் சாட்சிப்படி முடிவெடுக்க வலியுறுத்துகிறோம்.

நீங்கள் எதிர்த்து நிற்க முடிவெடுத்தால், நாங்கள் உங்களை ஆதரித்து பலம் கூட்டுவோம்! ஏனெனில், உலக மக்களுக்குப் பணியாற்றுவதே உண்மையான இலட்சியம். எல்லா உலக மக்களுக்கும் பொதுவானதோர் எதிர்காலத்திற்கு உழைப்பதே உண்மையான இலட்சியம் என்று நாங்கள் புரிந்து கொண்டு விட்டோம்!

*ஈராக் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அமெரிக்க முன்னாள் படை வீரர்களால் எழுதப்பட்டது.*

*உங்கள் உண்மையுள்ள முன்னாள்*
*அமெரிக்க இராணுவ வீரர்கள்*

# புகை பிடித்தலற்ற உலகை நோக்கி.....! (5)

### புகைத்தலும் கருவும்

புகைத்தல் சிசுவின் ஆரம்பக் கட்டத்திலிருந்தே பாதிப்பையேற்படுத்துகின்றது. இயற்கையான கருச்சிதைவு, சிசு மரணம், எடை குறைவான குழந்தை பெறல், சில வேளை மலட்டுத்தன்மை ஏற்படுகின்றன. புகைக்கும் தாய் பெற்றெடுக்கும் குழந்தை இயற்கையான நிறையை விட சுமார் 170 கிராம் குறைந்தே காணப்படுகின்றது. மட்டுமல்லாமல் இதனால் உடல், சிந்தனை வளர்ச்சியும் குன்றியே காணப்படுகின்றது. இவை பல ஆராய்ச்சிகளின் மூலம் நிரூபணமான உண்மைகள். பிறக்கும் பிள்ளையின் இனத்திற்கூட புகைத்தல் தாக்கமேற்படுத்துகின்றது. உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி புகைப்பழக்கமற்ற மாதர்கள்



பெற்றெடுக்கும் பிள்ளைகள் 52 வீதம் ஆண்களாகவும், 48 வீதம் பெண்களாகவுமுள்ளனர். அதே வேளை புகைக்கும் மாதர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் 48 வீதம் ஆண்களாகவும், 52 வீதம் பெண்களாகவுமுள்ளனர். புகையிலையிலுள்ள நிகடீன் கருப்பையினுள்ளே காணப்படும் சமச்சீரான உடற்றொழிலியலை மாற்றி விடுகின்றது. இவ்வாறு கூடுதலான அமிலத்தைப் பெறும் கருப்பை கருக்கட்டலின் போது பெண்ணின் முட்டைக்கே அதிக சார்புத்தன்மை கொண்டதாக மாறிவிடுகின்றது.

ஏழு வருடங்கள் பிரித்தானியாவில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின்படி புகைக்கும் மாதர்களுக்கு பிறந்த குழந்தைகள் ஒப்பீட்டளவில் சிறியவையாக இருந்தன. அவற்றில் 30 வீதம் பிறந்து சிறிது காலத்திலேயே அதிக இறப்புக்குள்ளாயின. மேலும் 50 வீதம் அசாதாரண இருதய நிலையுடன் காணப்பட்டன. இன்னும் அதிசயம் என்னவெனில் சராசரியாக ஏழாம் வயதின்போது புகைக்காத மாதர்களின் பிள்ளைகள் பெற்றிருந்த வாசிக்கும் திறன் புகைக்கும் மாதர்களின் பிள்ளைகளை விட அரை வருடம் பிந்திக் காணப்பட்டது.

குறை நிறையுடன் பிறக்கும் குழந்தைகள் இலகுவில் நோயால் தாக்கப்படும் சாத்தியமும், மரணிக்கும் சாத்தியமும் அதிகமென்பதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. தினசரி 10 சிகரட்டுகளை ஊதித்தள்ளும் ஒரு கற்பிணிக்கு பிரசவத்தின்போது சிசு இறந்து பிறக்கும் வாய்ப்பு வெகுவாயுள்ளது.

இவையெல்லாம் புகையிலையின் கொடூரமான தாக்கங்கள். யதார்த்தத்தில் அது புகைப் பிரியனை கொஞ்சம் கொஞ்சமாக மறைமுகமாக மரணத்தை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறது அல்லது அவனது உயிரை அவனறியாமலே பறித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வுண்மையை நிரூபிக்க அதிகார பூர்வமான புள்ளி விபரங்கள், பல்வேறு ஆய்வுகளின் முடிவுகள் கீழே தரப்படுகின்றன.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற மருத்துவ நிறுவனமான உலக சுகாதார அமைப்பின் அறிக்கைப்படி ஒவ்வொரு வருடமும் புகைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு மரணிப்போரின் தொகை முப்பது இலட்சத்திற்குமதிகம். இவர்களில் 70 சதவீதமானோர் வளர்முக நாடுகளைச் சேர்ந்தோராவர்.

1998 இல் உலகில் புகைப்பழக்கத்தால் உயிரிழந்தோர் தொகை நாற்பது இலட்சம். இவ்வெண்ணிக்கை 2030 ஆம் ஆண்டில் ஒரு கோடியாக உயரலாம். இந்நூற்றாண்டின் முதல் பாதிப்பகுதியில் புகைத்தலால் 45 கோடிப்பேர் இறக்க நேரிடும். இவர்களில் அரைப்பங்கினர் 35 முதல் 69 வயது பிரிவினராகவே இருப்பர்.

புகைத்தலின் விளைவாக ஒவ்வொரு பத்து நிமிடமும் ஒருவர் மரிக்கிறார். 1995ஆம் ஆண்டில் மட்டும் நுரையீரல் நோயால் 514 000 பேர்களை புகைத்தல் பலிகொண்டது. இதேயாண்டில் 6 25 000 பேர்களை இருதய மற்றும் நினநீர் தொகுதி நோய்கள் மூலம் காவுகொண்டது. வருடாந்தம் 3 00 000 பேர்கள் புகைத்தலால் மரணமெய்துகின்றனர். இத்தொகை 2020 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் 1 00 000 ஆக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இம்மரணங்களில் 70% மூன்றாம் மண்டல நாடுகளிலேயே இடம்பெறுமெனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் பிறிதொரு ஆய்வின்படி வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு நிமிடத்துக்கு ஆறு பேர் படி ஒரு வருடத்துக்கு முப்பது இலட்சம் பேர் சிகரெட் புகைத்து சாம்பலாய் உதிர்கிறார்கள்.

புகைத்தல் காரணமாக ஏறத்தாழ வருடத்தில் ஒரு கோடி உயிரிழப்புகள் அதாவது ஒவ்வொரு மூன்று விநாடிகளுக்கு ஒரு மரணம் சம்பவிக்கும் என்று புற்றுநோய் ஆய்வு நிதிய அமைப்பு அங்கத்தவர் ரிச்சட் பீட்டர் கூறுகிறார்.

**ஏ.சி.அப்துல் நாசர் (ரஹ்மானி)**
பொதுச் செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை.

தொடர்ந்து புகைப்பிடிக்கும் மனிதனின் ஆயுள் 8-10 வருடங்களால் குறைகிறது என ஆயுள் காப்புறுதி புள்ளி விபரமொன்று கூறுகின்றது.

புகை பிடிப்பது மற்ற ஆபத்துக்களைப் போன்றதல்ல. இரண்டு புகை பிரியர்களுள் ஒருவர் புகையாகவே மாறி விடுகின்றார் என உலக சுகாதார அமைப்பின் மருத்துவர் ஏலன் லோப்பஸ் கூறுகிறார்.

புகையிலை சம்பந்தமாய் மேற்கொள்ளப்பட்டுள்ள 50,000 இற்கும் அதிகமான ஆய்வுகளின் படி புற்று நோயால் உயிரிழப்போரில் 87 வீதம் ஆனோர் புகைப்பிரியர்கள்.

20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் 1997 ஆம் ஆண்டு வரை சுமார் 6 கோடி மக்களை புகையிலை உற்பத்திகள் பலி எடுத்திருக்கின்றன.

30 -40 சதவீதமானவர்கள் புகைத்தலால் பல சந்தர்ப்பங்களில் இருதய அழுத்தத்திற்குற்படக் கூடியவர்களாக இருப்பது பிரித்தானிய நிறுவனமொன்று நடத்திய ஆய்வொன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தினசரி 10 சிகரெட்டுகளுக்கு மேல் புகைப்பவர்களுக்கும், மிகக் குறைந்த வயதில் புகைக்கவாரம்பித்தோருக்கும், நீண்ட காலம் புகைத்தவர்களுக்கும் இருதய அழுத்தம் பெரும்பாலும் ஏற்படலாம்.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசைந்தால்தான் காற்றுவரும்

இஸ்லாமிய நெஞ்சங்களே! விடியலை நோக்கி கால் பதிக்கும் வாலிப இதயங்களே! கொஞ்சம் நில்லுங்கள். உங்கள் பயணத்தின் இலக்கு சரியானதுதானா? என்பதை சற்று சிந்தியுங்கள். நமது எதிர்கால சுதந்திரக் காற்றுக்கள் விரோதிகளால் திசைதிருப்பப்படுவது உங்கள் புலன்களுக்குப் புலப்படவில்லையா? நாம் என்ன ஜீவனற்றுப்போன வெறும் ஜடங்களா? வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தைத் தீர்வு யோசனையில் எமது நிலை என்ன? நமது உரிமை நமக்கு கையளிக்கப்படுமா? அல்லது அரசியல் அடிமைகளாய் ஆட்சியாளர்களுக்கும் கொடிய அரக்கர்களுக்கும் அடங்கி நடக்க வேண்டியதுதானா? சிந்தியுங்கள்.

சிந்திக்கப்பிறந்த இளைஞர் சமுதாயமே! உங்களது மானம் மரியாதை, சுய கௌரவம் மாற்றான் கையில் தாரை வார்க்கப்பட்டுவிட்டதை உங்களால் எப்படி அனுமதிக்க முடியும்? உங்கள் இரத்தம், தசை, எலும்பு அனைத்திலும் வீரத்தின் சுவாலைகள் எழவில்லையா? அல்லது அவைகள் மரணித்துப் போய் விட்டதா? கடந்த கால நிகழ்வுகள், சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு ஒரு பாடமாக இல்லையா? உங்கள் உரோசம் எங்கே போனது? குட்டக் குட்டக் குனிவதுதான் உங்கள் வீரமா? அநியாயமான வழிகளில் நமது மக்களின் உயிர்கள் கொலைவெறிபிடித்த காடையர்களால் சூறையாடப்பட்டதே. அப்போது எங்கே போனது உங்கள் வீரம்? சிந்திக்கத் தெரிந்தவர்களே! சிந்தியுங்கள். சிந்திப்பதை நிறுத்தும் போது நமது வாழ்க்கையும் நின்று போகிறது. நமது பிரதான எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதை ஆக்கபூர்வமாக அணுகிப்பாருங்கள். உங்கள் எதிரி எங்குமில்லை உங்களுக்குள்ளேதான் வாழ்கிறான்.

நம்மைக்காப்பாற்ற நமது தலைவர்களுக்கு இயலாது. ஏனெனில் அவர்களைக்காப்பாற்றவே அவர்களுக்கு முடியவில்லை. முடிந்தால் உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள். எதிர்கால விழுதுகள் நீங்கள்; வீரத்தோடு முன்னேறுங்கள். அசைந்தால்தான் காற்றுவரும் என்பதை புரிந்தவர்கள் நீங்கள். பொறுத்தது போதும் உங்கள் பொறுமைக்கு எல்லை வேண்டாமா?

யாருக்கு யார் அடங்கிப் போவது? அடங்கி, ஒடுங்கி பயந்துவாழ வந்த சமுதாயமா நீங்கள்? உங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை யாரிடம் கொடுக்கப் போகிறீர்கள்? விதைகள் விழுவது விருட்சமாகத்தான் என்பது புரிந்தால் எழுங்கள். இன்று நாம் கோழைகளல்ல. அந்நியனின் துப்பாக்கி ரவைகள் உங்களைத் துரத்தியது போதாதா? உங்கள் சகோதர ஆத்மாக்கள் அழிந்தது போதாதா? சொத்துக்கள் அபகரிக்கப்பட்டது ஞாபகமில்லையா? அவர்கள் கேட்டால் நீங்கள் கொடுக்க வேண்டுமா? நீங்களும் மனிதம் தானே! உங்கள் எதிரி உங்களைக் கண்காணிக்கிறான் என்பதையேனும் மறந்துவிடாதீர்கள். இழந்தது போகட்டும் இருப்பதை என்ன செய்யப் போகிறீர்கள் கூப்பிட்டுக் கொடுக்கப் போகிறீர்களா? உங்களைச் சுற்றி நீங்களே போட்டுக் கொண்ட போலியான வேலிகளை உடைத்தெறியுங்கள்.

ஆயுதம்தான் கதி என்றால் அதுதான் நிஜம் என்றால், புறப்படுங்கள் நமது சமுதாயத்தை வாழ வைப்போம். உங்கள் வீரக்கரங்களால் வெறும் பூக்கள் மட்டும்தானா பறிக்க முடியும்? இல்லை, உங்கள் இரத்தம்தான் வீழ்ந்துபோன எமது சமூகத்தை வாழவைக்கும். இன்னுமின்னும் அடிமைகளாய் அடங்கிப் போனால் கட்டுவதற்கு கோவணம் கூட மிஞ்சாது. ரோசம், மானம், மரியாதை என்ற ஏதாவது ஒன்று உங்களிடமிருந்தால் இனிமேலும் நீங்கள் தூங்கிக் கொண்டிருக்க மாட்டீர்கள். முஸ்லிம்கள் என்றாலே முடக்கப்படும் சமூகமாக மாறிவிட்டதே ஏன்? இன்னும் இதைநாம் அனுமதிக்கலாமா?

இளைஞர்களே! உங்களால் முடியாதது ஒன்றுமில்லை. நமது மரணம் நமது வீட்டு மூலையில்தான் நிகழ வேண்டுமா? வீரமிக்க இளைஞனுக்கு இதுதான் அழகா? அந்நியனின் அரட்டல், மிரட்டல்களுக்கு அடங்கிப்போவதை உங்கள் உள்ளம் எப்படி ஏற்றுக் கொள்கிறது? உங்கள் எண்ணங்களை மாற்றுங்கள். புதுமையான எண்ணங்களை உள்ளத்தில் விதையுங்கள். விழுந்தாலும் அருவியாய் விழுங்கள். நீங்கள் தூங்கினால் நீங்கள் மட்டுமல்ல உங்கள் சந்ததியே தூங்கிவிடும்.

ஆப்கானிஸ்தான், பலஸ்தீன், பாகிஸ்தான் இன்னும் எத்தனையோ முஸ்லிம் நாடுகளில் உங்களைப் போன்ற இளைஞர்கள்தானே போராடுகிறார்கள். போராட்டம் என்பது நமக்கு ஒன்றும் புதுமையல்ல. போராட்டம்தான் நமது முன்னோர்களை வாழ வைத்தது. நம்மையும் வாழவைக்கும். துணிந்தால் மலைகள் கூட மணல்தான். நமது நாடு இது. நாம்தானே வாழ வேண்டும். நம்மைத் துரத்திவிட்டு யாரோ வாழ்கிறார்களே உங்கள் கோழைத்தனத்துக்கு விடுமுறை வேண்டாமா? உங்களுக்கு விடுதலை வேண்டுமானால் உங்கள் கோழைத்தனத்துக்கு விடுமுறை கொடுங்கள். இல்லையேல் உங்கள் விடியல் வெறும் கற்பனையும் கனவும்தான்.

நமது அரசியல் தலைவர்கள் அரசியல் சந்தையில் நம்மைக் கூவி ஏலம் விடப்போகிறார்கள். அவர்களின் பணத்தாசைக்காக நீங்கள் ஆட்டுமந்தைகளாகப் போகிறீர்கள். உங்கள் எதிர்காலம் எது என்பதை அந்நியர்கள்தான் தீர்மானிக்கப்போகிறார்கள். இதற்கு நீங்கள் உடந்தையாகப் போகிறீர்களா? பேசா மடந்தையாக இருந்தது போதும். இலட்சிய எண்ணமிக்க இளைஞர்களே! உங்கள் உள்ளம் உணர்ச்சி மிக்கதாய் இருந்தால் மூலைக்குள் முடங்கிக் கிடக்க மாட்டீர்கள்.

ஈமானிய நெஞ்சங்களே! காத்தான்குடி, ஏறாவூர், அழிஞ்சிப் பொத்தானை, அண்மையில் வாழைச்சேனை, மூதூர், தோப்பூர் என்று அனைத்தும் எம்மை அடிமைகளாக்கவும், அகதிகளாக்கவும் திட்டமிட்டு நடந்தேறிய துயரச்சம்பவங்கள். இங்கே நலிவுற்று நாதியற்றுப் போனது நாமும் நமது மக்களும்தான். இனவெறி பிடித்த இரக்கமற்ற தீவிரவாதக் கும்பல்கள் இன்றும் எம்மை மோப்பம் பிடிக்கின்றன. அவர்களின் இரத்தவெறி இன்னும் ஓயவில்லை. அன்று அவர்கள் பலியானார்கள். இன்று நாம், நாளை நமது தலைமுறை. கண்ணீரும், செந்நீருமே நமது வாழ்க்கையின் கடந்தகால எச்சங்கள். நம்மைத் துரத்திவிட்டு அவர்கள் வாழப் பார்க்கிறார்கள். இதை எப்படி அனுமதிக்க முடியும்?

ஆர். அலிக்கான்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

உங்களை நீங்கள்தான் நிர்வகிக்க வேண்டும். உங்களை மாற்றான் நிர்வகிக்க நீங்கள் அனுமதித்தால் இழக்கப் போவது உங்கள் உயிர்கள் மட்டுமல்ல, உங்கள் உலகையும்தான். இளைஞர்களே! உங்கள் வாழ்க்கைப் பயணம் இன்றுடன் முடிந்துவிடும் ஒன்றல்ல. நாம் வாழப்பிறந்தோம் என்பதை விட வாழ மரணிக்கிறோம் என்பதுதான் உண்மை. நமது மரணம்தான் நமக்கு நிம்மதியைத் தரப்போகிறது. சுவர்க்கம் எமக்காய் அலங்கரிக்கப்பட்டு ஆசிகூறி வரவேற்கிறது. ஆனாலும் நாம் இங்கே வாழ்ந்தேயாக வேண்டும். நம்மைப் படைத்த இறைவனின் நியதி இது.

நம் வாழ்வின் நியதியை எவன் எதிர்க்கின்றானோ அவன் நமக்கு எதிரியாகின்றான். இவனுடன் போராட வேண்டிய கடமை எமக்குண்டு. நமது வாழ்வியல் உரிமைமையைத் தட்டிப்பறிக்கும் துரோகிகளுக்குப் பயந்து நடுங்கி, பீதியோடு வாழ நாம் வெறும் ஜீவனற்றுப் போன ஜடங்களல்ல. போராட்டங்கள்தான் புதுமைக்கு வித்திடுகின்றன. நமது உணர்வுகள் இன்னும் துயிலுமேயானால் புதுமைக்குப் பதிலாய் புழுவாய் துடிக்க வேண்டியதுதான்.

எனவே, வீரமிக்க இளஞ்சிங்கமே! உன் உணர்வுகளை கூர்மை தீட்டு. நமது மக்களுக்காய் நீ என்ன செய்யப் போகிறாய்?

## புத்தளத்தில் ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் காங்கிரசுக்கிடையே




புத்தளம் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பதவியிலிருந்து அமைச்சர் அஸ்வரை நீக்க வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் பலத்த பிரயத்தனம் எடுத்து வருகிறது. இதனை முன் நின்று மக்கள் போராட்டமாக நடாத்தப்போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார். ஆனால் ஆர்ப்பாட்ட மக்கள் பேரணியோ நடைபெறவில்லை.

புத்தளத்தில் மிக மோசமான அரசியல் முரண்பாடுகள் இவ்விரு கட்சிகளிடையேயும் தலைவிரித்தாடுவது மக்களுக்கு பெரும் அசௌகரியத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது. மக்களுக்கு சேவையாற்ற வந்தவர்கள் அதுவும் முஸ்லிம்களாகிய இருதரப்பும் முட்டி மோதுவதும் ஏட்டிக்கு போட்டியாக செயற்படுவதும் அசிங்கமாக உள்ளது என்பது பொதுமக்களின் கருத்தாகும்.

ஆட்சி அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு முஸ்லிம் காங்கிரஸ் தேவை. அரசியல் பதவியை அனுபவிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தேவை. ஆனால் புத்தளத்தில் ஒருவருக்கு ஒருவர் தேவையில்லை. இதனை என்னவென்று சொல்வது.

| | |
|---|---|
| **சஞ்சிகை** | : கீறல் (காலாண்டிழ்) |
| **பிரதம ஆசிரியர்** | : அஸீஸ் எம். பாயிஸ் |
| **வெளியீடு** | : மின்னல் வெளியீட்டகம் இல: 194 நெசவாலை வீதி ஒலுவில். |
| **பக்கம்** | : 38 |
| **விலை** | : 20/= |



கீறல் காலாண்டிதழின் ஐந்தாவது இதழ் அண்மையில் காலதாமதமாகவே வெளிவந்திருக்கின்றது. காலாண்டிதழ் காலம் தாழ்த்தி வெளிவருவது அதன் இருப்பை அருகிவிடச் செய்யவல்லது. என்றாலும் விடாப்பிடியாகக் காலத்தை விழுங்கிக்கொண்டாலும் அதன் வருகையினை நிறுத்தாது வெளிவருவது வெளியீட்டாளர்களின் முயற்சியின் உறுதி வெளிப்பாட்டை எடை போட்டுக் கொள்ள வழியாகின்றது.

கீறலில் இடம் பெற்றிருக்கும் படைப்புக்களின் கருப்பொருள்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கோணங்களையும், அதற்கான அழுத்தங்களையும் கொண்டிருக்கின்றது. அரசியல், கலை இலக்கிய பார்வையை அது வெளிப்படுத்துவதிலும் அக்கறை கொண்டிருப்பதையும் நாம் காணலாம்.

நமது சமூகத்தில் மிகப்பெரும் அழுத்தமாக வேரூன்றி காணப்படும் சீதனமெனும் அரக்கனிடம் அகப்பட்டு, தமது பொருளாதார சக்திக்கு மேலான ஈடுகொடுத்தலில் இறங்கிக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் கைசேதப்படும் பெற்றோர்களின் நிலையை யதார்த்தமான நிலைப்பாட்டினை மிக கச்சிதமாக பேசுவதிலும் கீறல் தன்னை இணைத்துக் கொண்டிருக்கின்றது.

நமது நாட்டில் முஸ்லிம் சமூகம் தமிழர் ஆதிக்க சக்திகளினால் எவ்வாறு காவு கொள்ளப்படுகின்றனர் என்பதனையும், அதன் விளைவாக படியப் போகும் அவலங்களின் ஓலங்களையும் கீறல் சுட்டிக்காட்டி எச்சரிப்பதையும் அவதானிக்கலாம்.

பொதுவாகவே, முஸ்லிம் சமூகம் உலக அரங்கில் இன்று பல்வேறு அடக்குமுறை சக்திகளின் அடாவடித்தனங்களுக்குள் அகப்பட்டு, அவதியுறுகின்ற கோணங்களையும், குறிப்பாக அமெரிக்காவின் அழுத்தங்களையும் கீறல் நமக்கு கோடிட்டுக் காட்டுகின்றது. அதே நேரம் இவ்வாறான பிடியிலிருந்து எவ்வாறு விலகிச் செல்ல முடியும் என்ற வரன்முறைகளையும் எடுத்துக்காட்ட கீறல் தவறவில்லை.

சிறுகலதகள், கவிதைகள்,கட்டுரைகளுடன் இடையிடையே துணுக்குகளையும், விஞ்ஞான விளக்கங்களையும், அறிவியல் தரவுகளையும் தூவி வாசகர்களை வசீகரிப்பதிலும் கீறல் தன்னை முழுமையாக உட்படுத்தியுள்ளது. அதே நேரம் நூல் விமர்சனங்களை மிகவும் இறுக்கமாக நிறுத்துப்பார்ப்பதில் கூடிய அக்கறையினைக் கொண்டிருக்கின்றது.

"அழிந்து வரும் கிராமத்துப் பழமொழிகள்" எனும் அம்சம் பயனுள்ள முயற்சியின் அறுவடை என்பதில் சந்தேகமில்லை. அப்பழமொழிகள் என்ன கூறுகின்றன என்னும் விளக்கத்தை எல்லோரும் புரியும் மொழி நடையில் விளக்கி இருப்பின் அது நாடு தழுவிய புரிதலுக்குள் இடம்பெற்று விடும் வாய்ப்பினைப் பெற்றிருக்கும். இப்போது பழமொழி நடைமுறையிலிருக்கும் பிரதேசத்திற்கு மட்டுமே முழுமையான புரிதலுக்குரியதாக அமைந்து விடுகின்றது.

கீறல் வாசிக்கப்பட வேண்டிய சஞ்சிகையாக இருப்பதினால் அதன் வரவு தாமதத்தினை உடைத்தெறிந்து உரிய காலத்தில் வீறு நடைகொண்டு, விழிப்புணர்வு தாக்கத்தினை பதித்து செல்வதில் தடம் கொண்டு நிலைபெற கரம் கொடுத்து, நேசிப்போம், வாசிப்போம் என்ற உறுதியினை கீறலின் மீது கொள்வோகம்.

அபூ பாத்திமா பர்வீன்

*நல்விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் கட்டாயம் இரு பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்*

*பிரதம ஆசிரியர்.*

கடந்த 25.07.2003 இல் வெளியான முஸ்லிம் குரலில் பொதுவுடமை பேசும் எழுத்தாளர்களும் மறந்து விடும் கவிஞர் கா. மு ஷெரீப் என்ற தலைப்பில் ஓர் சிறப்பு மிகுந்த விமர்சனக்கோவை ஒன்றை இதயகனி இன்றவர் எழுதி இருந்தார் இது உண்மையிலே பாராட்டக்கூடியது.

அ.கா.மு.றிஸ்வின், மூதூர் 01

## பாபரி மஸ்ஜித் அகழ்வாராய்வு அளிக்கும் உண்மைகள்

*இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அகழ்வாராய்ச்சிகளில் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் என்று எதுவும் இருந்ததில்லை என்பது தெளிவாகியுள்ளது.*

*"அவுட் லுக்" என்றொரு அருமையான ஆங்கில சஞ்சிகை சில உண்மைகளைப் பிட்டுப் பிட்டு வைத்துள்ளது. படித்துப் பத்திரப்படுத்துங்கள் அபிமானிகளே!*

பாபரி மஸ்ஜித் இருந்த இடம் முஸ்லிம்கள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வந்த ஓர் குடியிருப்பு என்பதை தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது அகழ்வாராய்ச்சி முடிவுகள்.

"பாபர் வருவதற்கு முன்பே முஸ்லிம்கள் அங்கே குடியமர்ந்து வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆதாரங்களே அதிகமாகக் கிடைக்கின்றன.

இதற்கு அத்தாட்சியாக இரண்டு புதைகுழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இரண்டுமே மொகலாயர் காலத்திற்கு முன்னால் உள்ள புதைகுழிகள். புதைகுழியிலிருந்த உடல்கள் மேற்கே முகம் பார்த்து அடக்கப்பட்டிருந்தன. இதனால் அவை முஸ்லிம்களுடையது என்பது இன்னும் உறுதியாகின்றது"

இந்த இரண்டு புதைகுழிகளும் எந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டனவோ அந்த இடத்திற்கோர் மகிமை. அது என்னவெனில் இந்த இடத்தில்தான் 82 தூண்கள் கொண்ட பிரம்மாண்டமான பெரிய இராமர் கோயில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டது. இந்தப் பொய் இந்தப்புதை குழிகளால் தவிடு பொடியாகிவிட்டது.

இந்த இரண்டு புதைகுழிகளும் பாபரி பள்ளிவாசலின் பிரதான கட்டிடத்திற்கு கீழேதான் இருந்தன. இதற்குப் பக்கத்துணையாக முகலா யர்கள் காலத்திற்கு முன்னாலுள்ள லாக்கவ்ரி செங்கல்கள், சுண்ணா ம்புக் கலவையின் அடையாளங்கள், (இந்தச் சுண்ணாம்புக் கலவைதான் அன்றைய நாட்களில் செங்கற்களை இணைக்கும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டன) எலும்புகள், கண்ணாடிகள் இவையும் அந்த இடங்களிலிருந்து கிடைத்தன. இவை அனைத்தும் 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்டவை.




டெல்லி பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தொல் பொருள் நிபுணர்கள், "பாபர், அயோத்தி வருவதற்கு முன்பே அயோத்தியில் முஸ்லிம்கள் பெருமளவில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையே அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தடயங்கள் நிரூபிக்கின்றன" என்கிறார்கள்.

"அங்கே கோயில் என்றொன்று இருந்தது என்ற பேச்சே இல்லை. நான் இதைத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கின்றேன். அவர்கள் இந்திய இஸ்லாமிய நினைவிடம் ஒன்றை தேடிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை கிடைத்த தடயங்கள் அங்கே முஸ்லிம்களின் குடியிருப்பு ஒன்று இருந்தது என்பதையே ஊர்ஜிதம் செய்கின்றன"

இப்படிக் கூறுகின்றார் முன்னாள் தொல் பொருள் ஆராய்ச்சியகத்தின் இயக்குனர் எம்.சி. ஜோஷி அவர்கள்.

"அங்கே மகத்துவமிக்க கோயில் ஒன்று இருந்தது என்பதை கண்டுபிடிக்க முடியும் என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. அது கிஞ்சிற்றும் ஆதாரமற்ற ஒரு வாதம். அவர்கள் சொல்லும் அளவில் உண்மையிலேயே அங்கே ஓர் கோயில் இருந்திருந்தால், அதற்கான ஆதாரங்கள் இப்போது கிடைத்திருக்கும். தோண்டுகின்றவர்கள் கோயிலின் தூண்களையோ, அஸ்திவாரங்களையோ இதர இடிபாடுகளையோ கண்டெடுத்திருப்பார்கள். மாறாக அவர்கள் கண்டெடுத்ததெல்லாம் மிகவும் ஏழையானதொரு முஸ்லிம் குடியிருப்பைத்தான்."

இது தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர் 'சுரேஷ்பான்' அவர்களின் வாக்கு மூலம். இவர் குருஷேத்திர பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்.

## எகிப்து 'மம்மி' யாக மாறி வரும் தமிழ்!

அடுத்து வரும் நூறு ஆண்டுகளில் அழிந்துவிடும் மொழிகளின் பட்டியல் ஒன்றை ஐ.நா வின் துணை அமைப்பொன்று வெளியிட்டுள்ளது. அதில் நம் தாய்மொழி தமிழும் ஒன்று. ஏறத்தாழ 3400 ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்த இந்திய உபகண்டம் முழுவதும் பேசப்பட்ட மொழி - ஆட்சிபீடத்தில் இருந்த மொழி தமிழ். இன்று அம்மொழியின் நிலை என்ன?

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் கணினி நிபுணரான பொன். சத்தியநாதன் என்பவர் அண்மையில் இந்தியா வந்து ஆய்வினை மேற்கொண்டார். கேரளாவின் திருவனந்தபுரத்தையும், தமிழ் நாட்டின் சென்னையையும் ஒப்பிட்டு ஆய்வுகள் மேற்கொண்டார். மலையாள மண்ணில் 50 விழுக் காடு தூய தமிழும் 50 விழுக்காடு சமஸ்கிருதமும் உள்ளதாம். சென்னைத் தமிழ் மண்ணில் 50 விழுக்காடு ஆங்கிலம், கொஞ்சம் தமிழ், மிகுதி வேற்று மொழிகளாம்.

புலம்பெயர்ந்த எம்மவர் பிள்ளைகள் அந்தந்த நாட்டு மொழிகளையே தெரிந்து வருகின்றனர். இந்நிலையில் எகிப்து நாட்டின் 'மம்மி' யாக மாறிவிடுமோ தமிழ்?



**4 வயது பயில்வானின் எடை 56 கிலோ!**

### பாசிப் பருப்பு

பச்சை நிறப் பாசிப்பயரைப் பார்த்திராத இளைய தலைமுறையினரும் இருக்கலாம் நகரங்களில்!

இதில் அதிகமான அளவில் இரும்புச் சத்தும், பல விட்டமின்களும் உள்ளன.

இதை உண்பதால் சூரிய ஒளியை உடல் தாங்கும். சூரிய கதிர்களினால் உடலுக்கு ஏற்படும் ஊறுகள் குறையும். இத்தகவல் பலரும் அறியாதது. பச்சைநிறப் பயரை முளைக்க வைத்து உணவாகப் பயன்படுத்தலாம். அதை ஊறவைத்து நீரை தாகசாந்தி செய்யலாம். குடலிறக்க நோய்க்கு இந்நீரை பயன்படுத்தலாம்.

### தொ(ல்)லைக் காட்சியினால்...

தொலைக்காட்சி மாணவர்களின் மூளை வளர்ச்சியையும் அறிவு வளர்ச்சியையும் பாதிக்க காரணமாக இருக்கிறது. தற்காலத்தில் தொலைக்காட்சியின் முன் உட்கார்ந்து, நிகழ்ச்சிகளைப் பார்க்கும் மாணவர்கள் வகுப்பறையில் ஆசிரியர்கள் போதிக்கும் பாடத்தை சரிவர கவனிக்க முடியவில்லை. இதனால் ஆசிரியர்கள் எந்த பாடத்தைப் போதிக்கின்றார்கள் என்பதே அவர்களுக்குப் புரியவில்லை. இப்பிரச்சினை இலங்கையிலும் பரவி வருகின்றது.

பாணந்துறை
ஹிஸான் றஸீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கூட்டமைப்பா? முஸ்லிம் எம்பிக்களா? வசமாக மாட்டிக் கொண்டார் ரணில்!

## முஸ்லிம் பொலிஸ்காரர்களைச் சேர்க்கும் விவகாரம் சூடுபிடிக்கிறது!



கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாக காலம் ஓட்டிவந்த ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் சாணக்கியத்திற்கு இப்போது பலத்த சவால் தோன்றியுள்ளது. விடுதலைப் புலிகளும் தமிழ்க் கூட்டமைப்பினரும் முஸ்லிம்களை பொலிஸ் படைக்கு சேர்ப்பதற்கு தங்களது பூரண எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கும் நிலையில், முஸ்லிம்களை பொலிஸ் படைக்கு சேர்க்க வேண்டுமென ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தை ஆதரிக்கும் முஸ்லிம் எம்.பிக்கள் கோரிவருகின்றனர். இந்த எதிரும் புதிருமான நிலைப்பாட்டில் ரணில் விக்ரமசிங்க பொலிஸ் படைக்கு முஸ்லிம்களைச் சேர்ப்பதுபற்றி என்ன முடிவினை எடுக்கப் போகிறார் என்பதே தமிழ் முஸ்லிம் அரசியல் தரப்புகளின் முக்கிய எதிர்பார்ப்பாக இன்று உள்ளன.

கடந்த காலத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் முஸ்லிம்கள் மிக மோசமாக புலிகளின் அடக்கு முறை நடவடிக்கையில் பாதிக்கப்பட்டபோது ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் முஸ்லிம்களை பாதுகாக்கத் தவறி இருந்தது. தொடர்ந்தும் நிலைமைகள் மோசமடைந்த சூழலில் தனது அரசாங்கத்தை ஆதரிக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகளை ஓரளவு தக்கவைத்துக்கொள்ள ரணில் விக்ரமசிங்கா கிழக்கில் முஸ்லிம்களை பொலிஸ்படைக்கு வரையறுத்த அளவில் (சுமார் 550 பேர்) சேர்ப்பதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

அவரின் உத்தரவு வெளியான கணத்திலிருந்தே விடுதலைப் புலிகளும் தமிழர் தேசியக் கூட்டமைப்பும் பல்வேறு தமிழர் சமூகநல இயக்கங்களும் முஸ்லிம்களை பொலிஸ் படைக்கு சேர்ப்பது தொடர்பாக தங்களது எதிர்ப்பினை ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளனர். இப்படியான பலத்த எதிர்ப்பினை ரணில் விக்ரமசிங்க எதிர்பார்த்திருக்கவில்லைதான். உடனடியாக நிலைமையை சமாளிப்பதற்கு தீர்மானம் எடுக்கும் திகதியை தள்ளிப்போட்டார். கடந்த புதன்கிழமை இது தொடர்பாக தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமைகளைச் சந்தித்து முடிவினை எடுக்க உள்ளதாக அறிவித்துள்ளார்.



ரணில் விக்ரமசிங்க இந்த விடயத்தில் நழுவிப்போக முஸ்லிம் அரசியல் தலைமைகள் எப்போதும் இடமளிக்கக்கூடாது! கடந்த காலங்களில் பல்வேறு விடயங்களில் முஸ்லிம் தரப்புக்கு ரணில் தலைமை கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை. இந்த விடயத்திலாவது கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றி, கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களின் மீதான தனது அரசாங்கத்தின் பாதுகாப்பு அக்கறையை ரணில் நிரூபித்தாக வேண்டும்.

## உழவு இயந்திரங்கள் புலிகளால் அபகரிப்பு



கல்குடாத் தொகுதி முஸ்லிம் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 03 உழவு இயந்திரங்கள் இந்த மாதம் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

மீராவோடையைச் சேர்ந்த முஹம்மது முஸ்தபா முஹம்மது பாரூக் என்பவருக்குச் சொந்தமான 240 மெஸி பேக்குசன் (37- 7669) உழவு இயந்திரம் கடந்த 04-08-2003 இல் அதிகாலை 2.10 மணிக்கு அவரது வீட்டுக்கு வந்த புலிகளால் பலாத்காரமாக கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த 10.08.2003 இல் கோறளைப்பற்று மத்தியபிரதேசத்திற்குட்பட்ட காணிக்கோப்பையடி எனும் பிரதேசத்திற்கு மணல் ஏற்றிவரச்சென்ற இரு உழவு இயந்திரங்களில் ஒன்றை புலிகள் பலாத்காரமாக அபகரித்துச் சென்றுள்ளனர். காவத்தமுனை ஹிஸ்புல்லா வீதியைச் சேர்ந்த ஹயாத்து முஹம்மது சுபைர் என்பவருக்குச் சொந்தமான 36-2277 இலக்க உழவு இயந்திரமே பெட்டியுடன் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இவ் உழவு இயந்திரத்தின் சாரதியான சாலி முஹம்மது பாறுக் என்பவரும், மேலும் ஐந்து பேரும் இவ் உழவு இயந்திரத்துடன் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர்- புலிகளின் தாக்குதலால் பலத்த காயமடைந்துள்ள சாரதி தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

பிச்சைத்தம்பி ஹனிபா என்பவருக்குச் சொந்தமான (25-6093) உழவு இயந்திரத்தை புலிகள் கடத்த முற்பட்டபோது எதிர்த்து நின்ற ஹனிபா புலிகளால் பலமாகத் தாக்கப்பட்டதோடு அவரது உழவு இயந்திரமும் முற்றாக தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது

கடந்த மாதம் ஒட்டமாவடி பிரதேச சபைக்குச் சொந்தமான புதிய கழிவகற்றும் உழவு இயந்திரம் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டது அறிந்ததே. அதிகரித்துள்ள உழவு இயந்திரக் கடத்தலினால் உழவு இயந்திர சொந்தக்காரர்கள் தங்களது தொழிலை மேற்கொள்ள முடியாமலும் உழவு இயந்திரங்களை பாதுகாக்க முடியாமலும் காலத்தைக்கடத்தி வருகின்றனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டபோதும் - தங்களால் எதுவுமே செய்ய முடியாது என பொலிஸார் கையைவிரித்து விட்டனர் என்கின்றனர் பாதிக்கப்பட்ட உழவு இயந்திர சொந்தக்காரர்கள்.

தனது உழவு இயந்திரம் கிண்ணையடி தமிழ்பிரதேசத்திற்கு ஊடாக கடத்திச் செல்லப்படும் போது அதிகாலை 2.25 மணிக்குதான் கிண்ணையடி இராணுவ காப்பரணுக்கு சென்று இதோ எனது உழவு இயந்திரத்தைக் கடத்திச் செல்கின்றனர் என முறையிட்டபோதும் அவர்கள் அதனை கவனத்திற் கொள்ளவில்லை என உழவு இயந்திரச் சொந்தக்காரர் முஹம்மது முஸ்தபா முஹம்மது பாரூக் எமது செய்தியாளரிடம் விசனத்துடன் தெரிவிக்கிறார் பொலிஸ் நிலையத்தில் இவரது முறைப்பாட்டு இலக்கம் (C.I.P 260/26/04/08/2003) ஆகும்.

## முஸ்லிம் குரலே!

உன் வருகை கண்டு
மகிழ்கின்றேன்! மலர்கின்றேன்!
கடுகு சிறிதாயினும் அதன் காரம்
பெரிது என்பர்
அது போலவே உன் பக்கங்களும்.
நீயே முஸ்லிம்களுக்காய் குரல்
எழுப்புகின்றாய்
கண்ணீர் விடுகின்றாய் - முஸ்லிம்
குரலே!

நீ உயிரை அர்ப்பணித்து
மலர்ந்திருக்கிறாய்
உன் மலர்வு அதிசயம் - நீ
நிலையாய்
மலர்ந்திட வேண்டும்.

அரசாங்கத்திற்குப் பின்னால்
தினகரன், தினமின
தமிழர்களுக்குப் பின்னால் வீரகேசரி,
தினக்குரல், சுடர்ஒளி
முஸ்லிம்களுக்குப் பின்னால் எது
வாப்பா பத்திரிகை?
முஸ்லிம்களின் விடயங்கள்
வருவதில்லை!
ஏனைய பத்திரிகை மூடுவிழா காட்டி
விட்டது
உன்னை நிலையாய்
எதிர்பார்க்கின்றோம்
முஸ்லிம் குரலே தினம் தினம்
நீ முஸ்லிம்களின் உரிமைக்கும்
கடமைக்கும் குரலாய் மலர்ந்திடுவாய்
முஸ்லிம் குரலே.

றைசுல் ஹக்கீம்
தேசிய இளைஞர் காங்கிரஸ்
(தலைவர்)
மருதமுனை.

## ஜனாஸா நல்லடக்க அமைச்சர்கள்!

முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றிப் பதவிக்கு வந்தவர்கள் பார்த்திருக்க இன்று அச்சமூகத்தவர்கள் பாசிசப் புலிகளால் அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, கொலை செய்யப்படுகின்றார்கள். பாதுகாக்க வேண்டிய அரச பாதுகாப்புப் படைகள் இன்று வடக்கிலும், கிழக்கிலும் வெற்றுத் துப்பாக்கிகளுடன் (தோட்டாக்கள் இருந்தும் சுட முடியாது) தூங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இனிமேலும் அரசையும் அரச படைகளையும் அரசோடு சொரணையற்று ஒட்டிக் கொண்டிருப்பவர்களையும் நம்பிப் பிரயோசனம் இல்லை. இன வெறியில் கொலை செய்யப்படுபவரின் ஜனாஸாக்களை அடக்கம் பண்ணுவதில் முன்னணியில் நிற்கிறார் அமைச்சர். அறிக்கை விடுவதிலும், வீராப்பாய்ப் பேசுவதிலும் இவரது சகாக்களான அன்வரையும், ஹரீசையும் மிஞ்சுவதற்கு ஆளில்லை.

வன்னியிலே ஒரு அமைச்சர் தான் என்ன கூறுகிறேன், தான் என்ன செய்கிறேன் என்றே அவருக்குத் தெரியாத அளவிற்கு குழந்தையாகிவிட்டார். பாவம் அவருக்கு குழந்தை மனசும் தலையும். ஹக்கீம் சமூகத்திற்குப் பிழையானவர் எனக்கூறும் அதாவுல்லா, பேரியல் இப்போது முஸ்லிம்கள் பாதுகாப்பு விடயத்தில் செயலளவில் என்ன செய்யப் போகின்றார்கள்?

தேசியக் கட்சியில் இருக்கும் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சியில் இருந்தால் உளறுவாயர்களும் என்ன கூறப்போகிறார்கள். முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் எந்தவிதமான கஷ்டங்களோ, அழிவுகளோ, துன்பங்களோ இல்லை. அதனால் எஞ்சிய காலங்களில் நாம் பாராளுமன்ற கதிரைகளில் அமர்ந்திருக்க நீங்கள் எல்லாம் பொறுமையுடன் இருங்கள் என்றா இவர்கள் கூறப்போகின்றார்கள்.

இனிமேலும் இவர்களையெல்லாம் நம்பிப் பிரயோசனம் இல்லை. முஸ்லிம்கள் தமது பாதுகாப்பை தாமே கையிலெடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த மூதூர், வாழைச்சேனைச் சம்பவங்களின் பின்னர் 05.07.2002 அன்று அமைச்சர் எம்.எச். மொஹமட் தலைமையில் ஒரு குழு பிரதம மந்திரி அவர்களைச் சந்தித்து மூதூர், வாழைச்சேனை சம்பவங்களின் உண்மைத் தன்மையை விபரமாக எடுத்துக் கூறி முஸ்லிம்களைப் பாதுகாக்குமாறு கேட்டபோது இனிமேல் இப்படியான நிகழ்வுகள் நடக்காது முஸ்லிம்களைப் பாதுகாக்குமாறு பாதுகாப்பு படைகளுக்கு இறுக்கமான கட்டளை பிறப்பித்திருப்பதாக அன்று கூறியதையே! இன்றும் தூசுதட்டி அதே பல்லவியை அவரும் பாடுகிறார். கண்துடைப்புக்கு விசாரணையும் நடைபெறுகின்றது.

தேசியக் கட்சியிலே இருந்த முஸ்லிம் தலைவர்கள் மீது நம்பிக்கையிழந்த முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரசைத் தோற்றுவித்த போது, குறிப்பாக வடக்கு கிழக்கில் முஸ்லிம்களின் அமோக வரவேற்பும் ஆதரவும் கிடைத்தது.

மர்ஹூம் அஸ்ர.ஃப் அவர்கள் காலத்தில் முழுதாக இல்லாவிட்டாலும் முடிந்தளவு கிழக்கிலங்கை முஸ்லிம்களை எல்லாவகையிலும் பலமாக்கினார்.

இன்று இருப்பவர்களோ வெறும் வீராப்புப் பேச்சாளர்களாகவும் அறிக்கை மன்னர்களாகவுமே இருக்கின்றார்கள். வெறும் பேச்சளவில் எல்லாக் காரியத்தையும் சாதித்தவர்களாகவே காணப்படுகின்றார்கள். தங்கள் கையாலாகாத்தனத்தை அடிக்கடி வெளிக்காட்டுகின்றனர்.

விரைவில் தேர்தலை எதிர்நோக்குவதால் எதிர்காலத்தில் தமது பதவிகளை ராஜினாமாச் செய்து மீண்டும் மக்களை மடையர்களாய் ஆக்கி திரும்பவும் தமது கதிரைகளை சூடாக்கப் போனாலும் வியப்புக்கில்லை. எனவே எதிர்காலத்திலும் இவர்கள் எம்மை ஏமாற்றவே போகின்றார்கள்.

உண்மையான அரசியல் பங்காளியாய் இருந்தால், இவர்கள் சமூகத்துக்காகப் பாடுபடுபவர்களாய் இருந்தால் சமாதானப் பேச்சுவார்த்தை எவ்வளவு காலமாயினும் தொடர்ந்து நடைபெறட்டும் இடைக்கால நிர்வாக சபையோ, நிர்வாக அலகோ தமிழ் மக்களுக்கு கிடைக்கட்டும். ஆனால், இறுதித் தீர்வு வரும்வரையிலும் வடக்குக் கிழக்கிலே தனியாக முஸ்லிம்கள் கொண்ட ஒரு (Regiment) ஐ இவர்களால் உண்டாக்க முடியுமா? என இவர்களிடத்திலே நான் சவால் விடுகிறேன். ஆக்கினால் இவர்களை அரச பங்காளிகளாக ஏற்றுக்கொள்வோம்.

எனவே, இனியாவது விழிப்படையுங்கள், உங்கள் பாதுகாப்பை நீங்களே தேடிக் கொள்ளுங்கள். அல்லாஹ் நம் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி பாதுகாப்பானாக.

(அச்சிட்டு வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தை மீள் பிரசுரம் செய்கிறோம்)

ராசீக் எம். குவைதிர்கான்
பிரச்சாரச் செயலாளர் (ஸ்தாபகர்)
வடமாகாண முஸ்லிம்கள் அமைப்பு

முஸ்லிம் குரல்
சுவடு 17
29 ஆகஸ்ட் 2003 Muslim Kural صوت المسلم 01 றஜப் - 1424
181/1, Anandha Mawatha, Colombo - 10. Tel: 0777-389127, Fax: 01-665831, E-mail: mmsa@col.lk

## சற்று சிந்திப்போமா?

நம்மைச் சூழ நடக்கும் அனைத்தையும் நாம் சரியான புரிதலுடன் விளங்கிக் கொள்கிறோமா என்பதே நமக்கு முன்னுள்ள மிகப்பெரும் கேள்வியாக உள்ளது. அப்படி நாம் விளங்கிக் கொண்டால் நாம் ஏன் இன்னும் வெறும் பார்வையாளர்களாக காலத்தை ஓட்ட முயற்சித்து வருகிறோம்? நமது மக்களுக்கு நடக்கும் துன்பங்களை தடுத்து நிறுத்துவதற்கான திராணி இல்லாவிட்டாலும் கூட, அத்துன்பங்களை, துயரங்களை, இழப்புகளை நாம் உரத்துச் சொல்வதன் மூலமாகவேனும் ஓரளவு நமது மக்களின் துயரங்களை குறைக்க முடியுமல்லவா?

மௌனம்! மௌனம்!! மௌனம்!!!

கையாலாகாத்தனம் நமது அரசியல் தலைமைகளிடம் மட்டுமா, நம்மில் பெரும்பாலானோரிடமும் அதுவே குடி கொண்டுள்ளது. இல்லையேல் நாம் இன்னும் மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பது எப்படி சத்தியமாகிறது? "ரோம் எரிந்து கொண்டிருந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தானாம்!! அவனுக்கோ ரோம் எரிந்தது. நமக்கோ நமது வாழ்வின் எதிர்காலமும் நிகழ்காலமும் தீப்பிடித்து எரிகிறது.

பணம், பட்டம், அதிகாரம் என சதா அலைந்து திரிவது, வாழ்வை உறுதிப்படுத்தும் சூழல் நிலவும் காலத்தில்தான் சாத்தியமாகும். இங்கு இருப்பே கேள்விக்குறியாக உள்ளபோது இவையெல்லாம் நமக்கு எதற்கு? யாருக்காக நாம் நமது சமூக அக்கறைகளைத் துறந்து வீணாகக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறோம்?

இன்றைய சூழலில் உறுதியான சமூக அக்கறையும் அதற்கான பணியும் ஒரு நல் அமல்தான் என்பதை நாம் உணர்தல் வேண்டும்!

தோழமையுடன்
பிரதம ஆசிரியர்.

முஸ்லிம் குரலுக்கு
நாட்டின் நாலாதிசையிலிருந்தும்
செய்தியாளர்கள்
விற்பனை முகவர்கள்
வேண்டப்படுகின்றனர்
10 ஆகஸ்ட் 2003க்கு முன்
பூரண விபரத்துடன்
தொடர்பு கொள்ளவும்

இப்பத்திரிகை 181/1, ஆனந்தா மாவத்தை, கொழும்பு 10 'முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்' இனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org